OLYMPIC POWER CENTER
137A, MAIN STREET,
MARUTHAMUNAI-04 (32314)
TEL & FAX : 067-20769

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල්

25 ஜுலை 2003 - வெள்ளிக்கிழமை ☆ 26 ஜமாதுல் அவ்வல் - 1424 ☆ சுவடு - 15 ☆ தருகை - 15 ரூபா




# போகவே முடியாத ஊருக்கு வழி சொல்கிறார் ஹிஸ்புல்லா!

## அரங்கத்தில் ஆடிய நாடகம் இப்போது அம்பலத்தில்

முஸ்லிம்களின் நலனை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி, அதனை புலிகளுக்கு கையளிப்பதே பொருத்தமென நமது அரசியல் தலைமைகளில் ஒருவரான ஹிஸ்புல்லா ஊடகங்களுக்கு அறிக்கை மழை பொழிந்து வருகிறார். ஆஹா என்ன அற்புதமான யோசனை என ஹிஸ்புல்லாவை நமது மக்கள் பாராட்டி அகமகிழ்ந்து தோள்களில் தூக்கி வைத்து துள்ளிக் குதிப்பார்கள் என ஹிஸ்புல்லா நினைத்திருந்தால் அந்த தவறான நினைப்பை, எதிர்பார்ப்பை மாற்றிக் கொள்ள வேண்டும்! இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்கு கையளிப்பது ஹிஸ்புல்லாவின் தனிப்பட்ட விருப்பமாக இருக்கலாம். இடைக்கால நிர்வாகத்தை ஏகபோகமாக புலிகளிடம் கையளிப்பது முஸ்லிம் மக்களின் அரசியல் நிலைப்பாடு அல்ல.

கண்ணீரும் இரத்தமும் அச்சுறுத் தலுமிக்க கடந்தகால, நிகழ்கால முஸ்லிம்களின் அரசியல் வாழ்வை, அதன் யதார்த்த நிலையை உணராது "சிறு பிள்ளைபோல்" அறிக்கை அரசியல் நடாத்துவது இன்றைய எரியும் சமகாலத்திலும் அரசியல் வாதிகளுக்கு பொழுதுபோக்காகப் போய் விட்டது. இதற்கு ஒரு சிறு உதார ணம்தான் ஹிஸ்புல்லாவின் இந்த ஊடக அறிக்கையாகும். முஸ்லிம்களின் நியாயமான அரசியல் உரிமையில் உறுதிமிக்க மக்களுக்கு ஹி ஸ்புல்லாவின் இந்த புலிவால் பிடித்த கதை அதிக கோபத்தையும் தீராத மன வேத னையையும் ஏற்படுத்தி உள்ளது.

பிரபாகரன் மீது அதிக நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும், இடைக் காலசபையில் முஸ்லிம்களின் நலன் களும் உள்ளடக்கப்பட்டால் ஜனாதி பதியிடம் மன்றாடியேனும் இடைக் கால சபையை சட்டரீதியாக்குவத ற்கு மூன்றில் இரண்டு பெரும்பான் மையை பெற்றுத்தர முடியுமெனவும் அவர் தெரிவித்து வருகிறார்.

இன்னுமா பிரபாகரன் மீது ஹிஸ்புல் லா நம்பிக்கை வைத்துள்ளார் என நாம் அதிசயித்து கேள்வி எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அது அவரது தனிப்பட்ட கருத் தாகும். ஆனால் முஸ்லிம்கள் பிரபாகரன் மீது நம்பிக்கையை இழந்து பல வருடங்களாகிவிட்டன. காத்தான்குடி பள்ளிவாசல் படு கொலையிலிருந்து - ஹக்கீம் பிரபா ஒப்பந்தம், மூதூர் வாழைச்சேனை வரை இதனை மெய்ப்பிப்பதற்கு நமது சமூக அரங்கில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

"முஸ்லிம்களின் நலன்கள்" என்றால்



இது இதுதான் என்று ஹிஸ்புல்லா வால் நமது மக்களிடம் சொல்ல முடி யுமா? நலன்களுக்கு அரசியல் நடா த்திய காலம் வீணே கழிந்து விட் டது. சமகாலம் என்பது மக்களின் அரசியல் உரிமைகளுக்காக விட் டுக்கொடாமல் போராட வேண்டிய காலம். சலுகைகளை அரசியலாக்கு வது இன்றைய எரியும் முஸ்லிம் அர


Thinakaran 20/7/2003
முஸ்லிம்களின் நலனை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகம் அவசியம்
புலிகளிடம் கையளிப்பதே பொருத்தம் என்கிறார் ஹிஸ்புல்லாஹ் எம்.பி

சியலில் ஒரு போதும் தர்மமாகாது. இதனை முஸ்லிம் அரசியல் தலை மைகள் உணர்ந்தால் சரி. இனியா வது உணர்வார்களா என்பதே நம து மக்களின் கேள்வியாகும். மக்களி ன் இக்கேள்வி ஹிஸ்புல்லாவிடம் மட்டுமல்ல, நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள்அனைத்திடமும்தான்.

## சந்திரிகா திடீர் முடிவு எடுக்கக் கூடும்



மிகவும் குழப்பமான அர சியல் சூழலுக்குள் தள் ளப்பட்டிருக்கும் ஜனா திபதி சந்திரிகா இன் னும் ஓரிரு வாரங்களுக் குள் திடீர் அரசியல் முடிவினை எடுக்கக் கூடுமென ஜனாதிப தியின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இத்திடீர் முடிவு நாட் டின் அரசியல்போக்கை மாற்றக் கூடிய செயறபாடாக அமையும் என்றும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கி ன்றன. அமைச்சரவை மாற்றமா? பாராளுமன்றக் கலைப்பா? என்பது இதுவரை உறுதியாகத் தெரிய வில்லை.

நீண்டகாலமாய்த் திணறி வந்த சந்திரிகா - இப்போது மீளவும் குழப்பத்தில் உள்ளதையே அவரின் நிலைமை தெளிவாக்குகிறது. உத்தியோகப்பற்றற்ற முறையில் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான முயற்சியையும் அவர் மேற் கொண்டிருப்பதாக ஒரு யூகம் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் அடிபடுகிறது.

## சதாம் உசைன் இன்னும் பக்தாத்தில் அவரது புதல்வர்கள் மரணித்துவிட்டார்களா?




ஈராக்கில் அமெரிக்கப் படைகள் சதாம் உசைனின் ஆட்சியை வீழ்த்திய பின்னும் அமெரிக்கா வினால் ஈராக்கில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை என்பது அங்கு தொடர்ந்தும் கூட்டுப்படை க்கு எதிராக நடக்கும் தாக்குதல் சம்பவங்களினால் உலகுக்கு உணர் த்தப்பட்டு வருகிறது. இவ் எதிர்தா க்குதலை சமாளிப்பதற்கு முடியாமல் கூட்டுப்படைகள் ஈராக்கில் தடுமா றித் திணறி வருகின்றன.

ஈராக்கில் கூட்டுப்படைகளைத் தொடர்ந்தும் தங்கவைப்பதற்கு ஈரா க்கிய மக்கள் மட்டுமல்ல, முழு உல கமுமே தங்களது எதிர்ப்பை நாளு க்கு நாள் வெளிக்காட்டி வருகிறது. அமெரிக்க, பிரித்தானிய கூட்டுப்ப டைகளின் குடும்பங்கள் - ஈராக்கில் நடைபெறும் தாக்குதலினால் →12

## மனிதர்களைக் கொத்திப் பிளந்த கொல்லுதல்



பச்சைக் கிளியே வா வா வா! பாலுஞ் சோறும் மறந்தே வா
படுபாதகரின் கொடுமையை பகர்வேன் நீயும் கேட்க வா!

ஓர் ஊர்! குருக்கள் மடம்!
பின்னொரு காடு. அம்பிளாந்துறைச் சந்தி
12 – 07 – 1990
சூரியன் பூமியின் மீது
ஒளியை அள்ளிப் பூசியிருந்த பட்டப்பகல்
காதுகள் நெருப்புக் கொள்ளிகளை அள்ளிப் போட்டது
கொடுஞ் செய்தி அந்த

அல்லாஹ் அல்லாஹ் என உச்சரித்த
75 ஹாஜிகளின் கலிமா வார்த்தைகளையும்
துப்பாக்கிச் சூட்டால் ஓயச் செய்தானுகள் சில கொடூரன்கள்!

அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டிய கைகளை
சயனைட் வாளால் தறித்து
விறகுக் கட்டையாகக் குவித்து நெருப்பு மூட்டினானுகள்
காஃபிர் காவாலிகள்

பீப் பொடியன்கள் சிலபேர்
எங்கள் 40 வயது கடந்த பாலகர்களின் குரல்வளைகளை
வெட்டுக் கத்தியால் அறுத்து
மாவீரர் பதவிக்குத் தகுதி பெற்றார்கள்

எங்கள் ஹாஜிகளின்
காது, கண், மூக்கு, பல், விரல், உதடு, நகம்
ஆகியவற்றில் சாம்பார் செய்து
பகலுணவு சாப்பிட்டுப் [illegible]ர்கள்
குருதியில் ரசம் காய்ச்சி
கொதிக்கக் கொதி[illegible]

பட்டப்பகல் ஒரு [illegible] சூரியன் அஸ்த[illegible]
வானம் [illegible]
சோகத்[illegible] அள்ளிப் பூசி[illegible]
கண்ணீ[illegible] சிந்தின [illegible] கூட்டங்கள்.
ஆடு, [illegible], [illegible], [illegible], குருவி எல்லாம்
கதறிக் [illegible] அழுதா
ஹாஜிகள் கடத்திக் கொல்லப்பட்ட பெருங் [illegible]ப்பட்டு

அவர்கள் [illegible] கணக்[illegible]
தோண்டி [illegible] குழி[illegible]க்குள்
எங்கள் [illegible] ஆத்மாக்[illegible]
அது நிச்சயிக்கப்பட்ட [illegible]
கொத்திப் [illegible]
எங்கள் [illegible] நல்லடக்கம் [illegible]
செ[illegible] இருந்தோம்....

'[illegible] [illegible]யில்லை'
கொலை [illegible] [illegible]ளில் தலை[illegible]க்க
சதிமான[illegible]க்குள் பது[illegible]திருக்க
[illegible]ளுகள் அந்த கயவன்கள்

'[illegible] கிளியே
[illegible] ஹா[illegible]
இன்னும் [illegible]வே நம்புகிறோம்
சிலவேளை
கொலை [illegible]களைத் [illegible] அப்புனிதர்களின் ஆவி
குருக்கள் [illegible] காட்டுக்[illegible] மறைந்திருக்கவும் கூடும்

பதிமூன்றாமாண்டுக் கத்தமோதும் இத் தினத்தில் பச்சைக் கிளியே
நீ போய்ச் சொல்லு ஊர் முழுக்க....
எங்கள் ஊரில் இப்போது
மக்கா யாத்திரைக்குப் போகிறவர்களைக்காட்டிலும்
ஜிஹாத் பயிற்சிக்குப் புறப்பட்டுப் போகிறவர்களின்
எண்ணிக்கைதான்
வருடத்துக்கு வருடம் வளர்ந்து வருகிறதென்று

2003 – 07 – 01

எம்.எல்.எம். அன்ஸார்
காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!



## மக்களிடமிருந்து மனுக்கள்...
நடவடிக்கைக்காக...

### தொண்டர் ஆசிரியர் நியமனம் முஸ்லிம்கள் புறக்கணிப்பு!

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தர ஆசிரியர் நியமனத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களின் தெரிவுப் பட்டியலில் இனவிகிதாசாரம் பேணப்ப டவில்லை என பாதிக்கப்பட்ட முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்கள் பு கார் தெரிவித்து வருகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, அதிகாரிகளின் இந் நடவடிக்கையை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

2001.11.24 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் மூலம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களில் 1000பேரை நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் மாகாணக் கல்வி அமைச்சும், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவும் ஈடுபட்டுள்ளது. நியமனத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள 909 பேர்களில் 786 (86.46 வீத) தமிழர்களும், 123(13.53 வீத) முஸ்லிம்களும் இடம் பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தின் 2002க்கான புள்ளிவிபரத் தகவலின்படி, கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரம் பின்வருமாறு காணப்படுகிறது. 418, 286 தமிழர்கள் 45.74 வீதம், தொண்டர் ஆசிரியர் ஒதுக்கீடு, 243- 71.47 வீதம், 496.015 முஸ்லிம்கள் - 54.25 வீதம் தொண்டர் ஆசிரியர் ஒதுக்கீடு 97- 28.52 வீதம்.

மாவட்டரீதியில் பார்த்தால், மட்டக்களப்பு மாவட்டத்தில் 195,689 தமிழர்கள் 63.29 வீதம், ஆசிரியர்கள் 100- 89.28 வீதம், 113.473 முஸ்லிம்கள் 36.70 வீதம் ஆசிரியர்கள் 12- 10.71 வீதம் திருகோணமலை மாவட்டத்தில் 112,007 தமிழர்கள் 44.80 வீதம் ஆசிரியர்கள் 59- 77.63 வீதம், 137, 453 முஸ்லிம்கள் 55.10 வீதம் ஆசிரியர்கள் 17 - 22.36 வீதம் அம்பாறை மாவட்டத்தில் 110.590 தமிழர்கள் 31.09 வீதம் ஆசிரியர்கள் 84- 55.26 வீதம், 245,089 முஸ்லிம்கள் - 68.90 வீதம் ஆசிரியர்கள் 68 - [illegible].73 வீதம்.

"....இந்த அமைச்சு ஏற்கனவே நடாத்திய நேர்முகத் தேர்வு, மேல் முறையீட்டுச் சபைத்தீர்ப்பு, மற்றும் திருகோணமலைக்கு நேராகச் சென்று நடாத்திய விசாரணை ஆகியவழிகள் மூலம், இந்நியமனங்கள் முடிவு செய்யப்பட்டன. எவருடைய தலையீடும் இந்நியமனங்களில் இடம்பெறவில்லை. அரசியல், இனரீதியான பாகுபாடு காட்டப்படவில்லை. மிகவும் நேர்மையான வழியில் இந்நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்ற மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்" என 2003.06.17ஆந் திகதிய தினக்குரல் நாழிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

"....அண்மையில் வழங்கப்பட்ட வடக்கு-கிழக்கு தொண்டர் ஆசிரியர் நியமனங்களில் முஸ்லிம் பிரதிநித்துவம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வடக்கு-கிழக்கு மாகாண சபைமீது குற்றம் சுமத்தியிருந்தார்." இது உண்மைக்குப் புறம்பானது என்றும், குறிப்பிட்ட காலப்பகுதியில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களும், பாடசாலை இடம்பெயர்ந்து இயங்கிய காலப்பகுதியில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்பட்ட இந்நியமனங்களில் முஸ்லிம் பிரநிதித்துவம் குறிப்பிடும்படியாகவுள்ளது. என 2003.06.16 தினகரன் நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

மிக மோசமான புறக்கணிப்பை திட்டமிட்டு செய்துவிட்டு அதை நியாயப்படுத்துவதும் அதற்கு தமிழ் பத்திரிகைகள் முண்டு கொடுப்பதையும் இட்டு நாம் என்ன செய்ய முடியும். இவர்களிடம் ஒரு கேள்வியை கேட்கலாம். இந்த ஆதாரங்களின் அடிப்படையில் நீங்கள் முஸ்லிம்களுக்கு நியாயம் இழைத்துள்ளீர்களா? யாரை ஏமாற்ற முயிற்சி செய்கிறீர்கள்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண் திறந்து பார்ப்பார்களா?

-இப்னு மன்சூர், மூதூர்

### பிறப்புச் சான்றிதழ் பெற முடியவில்லை!

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்காக முஸ்லிம்களால் அனுப்பப்படுகின்ற, கையளிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு பிறப்புச் சான்றிதழ் பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை. மட்டக்களப்பு வைத்தியசாலையில் பிறந்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவரினால் நேரடியாகக் கையளிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஒன்பது மாதங்களாக அனுப்பப்படாததோடு அவர் மீண்டும் நேரடியாகச் சென்று வேறு ஒரு விண்ணப்பமும் "சந்தோசமும்" கொடுத்துத்தான் பிறப்புச் சான்றிதழை பெற்று வந்திருக்கிறார்.

கடந்த யுத்தக் கெடுபிடிக்காலங்களில் அனுப்பப்பட்ட வேறு பலரது விண்ணப்பங்களுக்கும் இதுவரை பதில் கிடைக்கவில்லை. ஆயினும் மட்டக்களப்பு நகர் பிரதேச செயலகத்தைத் தவிர வேறு தமிழ் , சிங்கள, பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்களுக்குரிய பிறப்புச் சான்றிதழ்கள் காலக் கிரமத்தில் கிடைத்து வருகிறது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்களா?

எம். ஏ. மகுறுன் நிசா.

### கோழிப் பண்ணைகளால் சுகாதார சீர்கேடு

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு அருகில் உள்ள அனுமதியின்றி அமைக்கப்பட்ட இறைச்சிக் கோழிப்பண்ணைகளினால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். 25 கோழிகளுக்கு மேல் வளர்ப்பதாயின் பிரதேச சபையின் அனுமதி பெறவேண்டும். பலர் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். உரிய முறையில் கழிவுகள் அகற்றப்படாமையினால் வீதியில் துர் நாற்றம் பரவுகிறது. அருகிலுள்ள வீட்டுக்காரர்களுக்கு இதன் காரணமாக சில நோய்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொது மக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் கோழிப்பண்ணைகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

கே. எல். ஹில்மி, சாய்ந்தமருது - 13.

## இலங்கையின் நிலைமை இப்படி...!

1995 - 2003 வரையிலான குற்றச் செயல்கள் தொடர்பான விபரங்கள்

| ஆண்டு | 1995 | 1996 | 1997 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொலை | 1614 | 1775 | 1851 | 1993 | 1806 | 1673 | 1580 | 1304 |
| கற்பழிப்பு | 542 | 716 | 909 | 1066 | 1300 | 1881 | 1253 | 1188 |
| கப்பம் | 107 | 78 | 57 | 63 | 82 | 78 | 113 | 82 |
| களவு | 3698 | 4064 | 4393 | 4892 | 4921 | 4643 | 5222 | 5447 |

(பொலிஸ் திணைக்கள அறிக்கையிலிருந்து).

### முஸ்லிம்கள் உள்ளவரை முஸ்லிம் குரல் நிலைத்திருக்க வேண்டும்!

என்மனம் கவர்ந்த முஸ்லிம் குரலே, உனது 11, 12 ஆவது இதழ்களே எனக்கு முதலாவது, இரண்டாவது, இதழ்களாக, கிடைத்தன. (அல்ஹம்துலில்லாஹ்) இருந்தும் 10 இதழ்களும் கிடைக்கவில்லையே என்ற வருத்தமும் இருந்தது. (இன்ஷா அல்லாஹ்) இனிவரும் இதழ்களின் வாசகியாகவும் இருந்து படிப்பேன். முஸ்லிம் மக்களுக்கென குரல் கொடுக்க பத்திரிகை ஒன்று நீண்ட கால தேவையாக இருந்தது. தற்பொழுது அது பூர்த்தியாகிவிட்டது. இதனூடாக பல கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும். இப்பத்திரிகை இடையில் நின்று விடாமல் முஸ்லிம்கள் உள்ளவரை முஸ்லிம் குரல் நிலைத்திருக்க வேண்டும் என்பது என் போன்றவர்களின் அவா!

-ஜாரியா மஜீட், கல்முனை.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.

பிரதம ஆசிரியர்


# ஒலுவில் துறைமுகத்தால் உறைவிடம் பறி போகும் அபாயம்!

ஒலுவில் குக்கிராமத்தின் பெயரை உலகத்தின் உதடுகள் உச்சரிக்கும் வண்ணம் செய்த ஒப்பற்ற தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் இன்று எம்மத்தியில் இல்லை. ஆனால், அவர் முதன் முதலாக முன்மொழிந்த "ஒலுவில் துறைமுகம்" ஊரை இழந்து பெயரை மட்டும் தாங்கி நிற்கும் நிலை தோன்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இயற்கை வளம் நிறைந்த ஓர் அழகிய கிராமத்தின் அற்புதமான சூழல் அழிவதற்கும், நீண்டகாலமாக மீன்பிடித் தொழிலையே வாழ்க்கையின் அடி நாதமாக நம்பி வாழ்ந்து வந்த ஏழை எளியவர்களின் தலையில் இடி விழுந்தவர்களாக ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்கும் நிலை உருவெடுத்துள்ளது. இப்பகுதி மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருப்பதை தலைவர்கள் புரியத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர்.

ஒலுவில் துறை முகம் என்ற பெயருக்கு பின்னால் ஒளிந்திருக்கின்ற மாபெரும் ஆபத்தினையும், அச்சுறுத்தலையும் அறிந்து தெரிந்த அரசியல் தலைவர்களும், சமூகத் தொண்டர்களும் எமது சமூகத்தின் இருப்பும் பொருளாதார சீர்குலைவினையும் கண்டும் காணாது இருப்பது வேதனைக்கும் விசனத்திற்குமுரிய விடயமாகும். காலங் காலமாய் பரம்பரையாய் பாதுகாத்தும் வாழ்ந்தும் வந்த நிலங்கள், வளவுகள் குடியிருக்கும் வீடுகள் அனைத்துக்கும் வழங்கப்படும் இழப்பீடுகள் குறைவாக இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறிக் கொள்கின்றனர். சுமார் இருநூறு குடும்பங்களுக்கு மேல் இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும்! இவர்கள் ஒவ்வொருவரது வீடு வளவுகள் குடியிருப்பு நிலம் போன்றவைகளுக்கு அதற்குரிய பெறுமதி என்ற விதி முறையில்லாமல் குத்துக் குறிப்பாக கொடுக்கப்படும் பணத்தை வைத்து பிறிதோர் இடத்தில் வெறும் வளவும்கூட வாங்க முடியாத நிலையில், புதிய குடியிருப்புக்கான செலவுகளை எந்த வகையில் ஈடுசெய்வதென பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



மேற்குறித்த பிரச்சினையில் இருந்து தெளிவு பெறுவதற்காக துறைமுகத் திட்டமிடல் அதிகாரிகளிடம் விபரம் கேட்கிற போது, பொது மக்களின் நியாயமான கேள்விகளுக்கும் கோரிக்கைகளுக்கும் இதுவரை எந்தவிதமான பதில்களோ ஆறுதல் வார்த்தைகளோ இல்லாமல் அதிகாரக் கெடுபிடிகளே நடந்தேறி வருவதால் பாதிக்கப்பட்ட மக்கள் பயத்தினால் அடுத்து என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறும் நிலையிலேயே காணப்படுகின்றனர்.

கிராமத்தின் எழுபத்தைந்து சதவீதமான பகுதிகளை துறைமுகம் ஏப்பம் விட இருப்பதால் மாற்றுக் காணி இல்லாத பிரச்சினையும் விஸ்வரூபம் எடுத்துள்ளதுடன், இருக்கின்ற ஒரு சில காணிச் சொந்தக்காரர்கள் விலையை அதிகரித்துள்ளனர். துறைமுக எல்லைக்குட்பட்ட காணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரை எந்தப் பொது அறிவித்தல்களும் விடுக்கப்படவில்லை. அத்துடன் எந்த அடிப்படையில் காணிகளை துறைமுகம் சொந்தமாக்க முயற்சிக்கிறது போன்ற விபரங்கள் இன்னும் தெளிவாக்கப்படவில்லை. அதிகாரக் கெடுபிடிகளும் அத்து மீறல்களும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் காணிச் சொந்தக்காரர்களுக்கு அசௌகரியங்களும் நிர்ப்பந்த நிலையை ஏற்படுத்தும் மனோபாவமே மலிந்து காணப்படுகின்றன. பலன் தரும் பழ மரங்களும் தென்னந் தோப்புகளும் பரம்பரையாக வாழ்க்கையின் ஆதாரங்களாய் இருந்து வந்தவைகளை இழக்கும் போது ஏற்படுகின்ற மனவேதனை ஒரு பக்கமும், மீண்டும் இப்படி ஓர் இடத்தை தேடி அமைக்கும் பணிக்கு துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தொகை பற்றாக் குறையினால் ஏற்படுகின்ற வேதனை மறுபக்கமும் வறிய மக்களை வாட்டி வதைக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அழகிய முஸ்லிம் கிராமத்தின் வரலாற்று தடயங்கள் சிதைந்து போவதுடன், எதிர்காலத்தில் கலாசாரச் சீரழிவுகளும், பேரினவாதிகளின் ஊடுருவல்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதையும் மறுக்க முடியாது. துறைமுகம் அபிவிருத்தியைக் கொண்டு வந்தாலும், தற்போது தொழில் இழந்து பசியுடன் இருக்கும் நிலைதான் அதிகரித்து வருகின்றது. இதற்கு உடனடி மாற்று யோசனை அமுல்படுத்தப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சொல்லன்பன் நசிறுதீன்,
ஒலுவில்.

### நாளைய பாடம்



இரவெல்லாம்
நிலவுக்கு நித்திரையில்லை!

வானக்கதவைதிறந்து
என்
வாசற் படிக்கு வந்தது

கை நிறைய
கச்சான் கொட்டை
வெற்றிலைத்தட்டும்
ஒரு பக்கம்!

நல்ல குளிர்!
எனக்கும் -
உருண்டு புரண்டு
படுக்க
நன்றாகத்தான் இருந்தது!

இரவில் நடக்கும்
அட்டூழியங்களையும்
அவிழ்த்துக்கொட்டியது அது!

எனக்குள்
அழுகை பொத்துக்கொண்டு வந்தது
இருந்தாலும் -
பெரிதாக காட்டிக்கொள்வதில்லை!
எல்லைகள் விரிப்பதும்
விகிதங்கள் கேட்பதும்தான்
பெரும் தொல்லையாம்!

காலால் மிதித்து
தும்புக்கட்டால் அடித்தாலும்
உரத்துக்கேட்க யாருமில்லை!

தலை எழுத்து மாறிய
சமூகம்தானே இது!

என்ன செய்வது
என்னிடம்
ஒரு நெருப்புக்குச்சி கூட இல்லை!!

நிலாவே வா
நாளை -
போராட்ட பாடம் படிப்போம்!

முகம்மட் அபார்,
கல்முனை

### "இலங்கையை மீளக் கட்டியமைத்தல்" என்ற திட்டத்தில் விபச்சாரத் தொழிலின் சட்டமயமாக்கல்

இலங்கையில் தற்போது விபச்சாரத் தொழிலை சட்ட பூர்வமாக, அங்கீகரித்து அதற்கென விஷேட பிரதேசங்களைத் தெரிவு செய்து அளிக்க வுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கு தற்போது சட்டவிரோதமாக விபச்சாரப் பெண்களை வினியோகித்து வரும் சீன, தாய்லாந்து நாடுகளின் விசேட வேண்டுகோளின் மூலமே அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி உட்பட கொழும்பு நகரில் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களை மாத்திரம் இதற்கான பிரதேசமாகத் தெரிவு செய்து சட்ட ரீதியான அங்கீகாரம் பெறுவதற்காக பாராளுமன்றத்திலும் இவ்விடயம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபச்சாரத் தொழிலை சட்டபூர்வமாக்கும் அரசின் இந்த முயற்சியை உறுதிப்படுத்தும் வகையிலேயே அண்மையில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி அமைந்திருக்கிறது. "இலங்கையில் தற்போது படிப்படியாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை குறிப்பிட்ட அளவு குறைத்துக் கொள்ள இந்த சட்ட மயமாக்கல் உதவும் எனவும் இதன் மூலம் பல வைகயான நோய்கள் கட்டுப்படுத்தப்படும் எனவும், கற்பழிப்பு போன்ற குற்றங்கள் குறைக்கப்படும் எனவும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு வழிமுறையாகவும் இது அமையும் எனவும் விபச்சாரத் தொழிலை நடத்தும் விபச்சார விடுதி உரிமை யாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதோடு அதன் மூலம் அரசுக்கு மேலதிக வரி வருமானமும் பெற முடியும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கண்டி மாவட்ட முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை

மத்திய மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு உரித்தான அமைச்சுப் பதவியின் முக்கிய பிரிவுகளை எடுத்துக் கொண்டு உருப்படியில்லாத பெயரளவில் வழங்கப்பட்ட அமைச்சுப் பதவியை எம்.எச்.எம். ஷாபி ஏற்றுக்கொண்டது மகாதப்பு என கண்டி மாவட்ட முஸ்லிம்கள் அங்கலாய்கின்றனர்.

மத்திய மாகாண சபையில் 1989ஆம் ஆண்டு ஏ.ஆர்.எம்.காதர் அவர்கள் அமைச்சராக இடம்பெற்றார். 1993ஆம் ஆண்டுத் தேர்தலில் எம்.எச்.ஏ. ஹலீம் இரு தடவைகளில் அமைச்சரானார். இவரை அடுத்து இவரது சகோதரர் அமீன் அமைச்சரானார். இவர்கள் வகித்த அமைச்சுப் பதவிகள் முக்கியத்துவமுள்ளதாகவிருந்தன. இந்த நிலையில் உறங்கிக் கொண்டிருந்த முஸ்லிம்களிடம் இருந்து உருப்படியான எதிர்பார்ப்புக்கள் உருவாகாது எனக் கருதி 14 ஆண்டுகளாக இருந்து வந்த முஸ்லிம்களுக்கான அமைச்சு ஒதுக்கீடும் பறித்தெடுக்கப்பட்டது. சில சிறிய அமைப்புக்கள் இதனைக் கண்டித்து குரல் எழுப்பிய போதிலும் சமூகத்திலிருந்து வரும் பேராசை பிடித்த புல்லுருவிகளால் அதுவும் பறிபோய்விட்டது.

நீண்டகாலமாக முதலமைச்சராகப் பதவி வகித்த திஸாநாயக காலமானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அமைச்சர் மகிந்த அனுவிகார நியமிக்கப்பட்டதும் நெருக்குதல் காரணமாக முஸ்லிம் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய அமைச்சர் பதவியை வழங்க அரசியல் உயர்பீடம் தீர்மானித்தது.

ஏனைய இனங்களுக்கு வழங்கப்பட்டதுபோன்று முஸ்லிம் ஒருவருக்கும் அமைச்சர் பதவியை ஆரம்பத்தில் வழங்காதது துரோகம் எனவும் பின்னர் வெறும் பகட்டுக்காக வழங்கப்பட வேண்டிய முழு அமைச்சுப் பதவிக்கான பொறுப்புக்களை வழங்காது சிறகொடிந்த பறவையைப் போன்று வழங்கிய அமைச்சை அவர்கள் ஏற்றது மகாதப்பு எனவும் அன்னாரின் பிறந்தகமான அக்குறணை வாழ் மக்களின் அங்கலாய்ப்பு தினமும் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. அமைச்சர் ஷாபி அவர்களோ இன்று இருதலைக் கொள்ளி எறும்பு போல ஆகிவிட்டார்.

சுமார் 250,000 முஸ்லிம்கள் வாழும் மத்திய மாகாணத்தில் முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டதற்கு இன்னும் 10 மாதங்களில் அதாவது அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெறப் போகும் மாகாண சபைத் தேர்தல்தான் பதில் சொல்லும் எனவும் முஸ்லிம் அதிருப்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சத்தியவான்,
கண்டி.

### பெருகிவரும் வாகன விபத்துக்கள்



கடந்த 7 மாதகாலத்தில் இலங்கை முழுவதுமாக இடம்பெற்ற வாகன விபத்துக்களால் 948 பேர் உயிரிழந்துள்ளனர். இக் காலப் பகுதிக்குள் சிறிய, பெரிய விபத்துக்கள் 26,896 இடம்பெற்றுள்ளதாக அறிக்கையொன்று குறிப்பிடுகிறது. இவ்விபத்துக்களில் பல பாரிய அளவில் இடம்பெற்றுள்ளன. விபத்துக்கள் [illegible] காலங்களைவிட மிக அதிகளவில் உயர்ந்துள்ளதோடு இத்தகைய விபத்துக்களின் தொடர்ச்சி இன்று பொதுமக்களை அச்சுறுத்தும் நிகழ்வாகவும் மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் போர் இன்னும் முடியவில்லை...!

"நாயைப் போல பின்னங்கால்களுக்கிடையில் வாலைச் சுருட்டிக் கொண்டு அமெரிக்கா ஈராக்கை விட்டு வெளியேறத்தான் போகிறது."
ஸ்காட் ரிட்டர்,
ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்.

பக்தாத் வீதிகளில், ஈராக்கின் நகரங்களில் எங்கும் அமெரிக்கத் தாங்கிகள் ஈராக்கின் 'வைஸ்ராய்' அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டு விட்டார். இடைக்கால அரசொன்றை நியமிப்பதற்குத் தேவையான கைக்கூலிகளை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் ஸ்காட் ரீட்டர் கூறுவது போன்றதொரு காட்சியை நாம் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

முடியும். அவ்வாறு கர்பலாவில் கூட்டப்பட்ட முதற் கூட்டத்திற்கே அமெரிக்கா எதிர்பார்த்த அளவு கையாட்கள் வரவில்லை என்ற உண்மையிலிருந்து அத்தகையதொரு காட்சியை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். மனித குல நாகரீகத்தின் தொட்டிலான மொசப்பட்டொமியாவில் 4000 ஆண்டுகளுக்கு முன்னரே "சுதந்திரம்" என்று ஒரு சொல்லை, கருத்தை உலகிற்கு அளித்த அந்த நாகரீகத்தின் வாரிசுகளான ஈராக் மக்களுக்கு சுதந்திரம் வழங்குவதாக கடற் கொள்ளைக்காரன் கொலம்பசின் வாரிசுகள் அறிவித்த போது அந்த கணமே அங்கேயே அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து சுதந்திரத்திற்காக 12 பேர் உயிர் துறந்தார்களே அந்தச் செய்தியிலிருந்து அமெரிக்க நாய்களின் ஓட்டத்தை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். சதாமின் மிகக் கொடிய சர்வாதிகாரத்தின் கீழ் 25 ஆண்டுகள் அல்லல் பட்ட போதும், கோமாளி புஷ் எதிர்பார்த்ததைப் போல அமெரிக்க இராணுவத்தை ஈராக் மக்கள் பூச்செண்டு தந்து வரவேற்கவில்லை. புஷ்ஷின் புனைகதையை நம்பி சதாமிடமிருந்து ஈராக் மக்களுக்கு விடுதலை வாங்கித் தருவதற்கு வந்த அமெரிக்க இராணுவத்தின் சிப்பாய் ஒருவன் சொன்னான். "ஈராக் மக்கள் நன்றி கெட்டவர்கள்"

ஆயுதப்படைகளையும் கவச வண்டிகளையும் எதிர்த்து நின்று நிராயுதபாணிகளான மக்கள் வெறுங்கையை உயர்த்தி முழக்கமிடுவதைப் போர் என்று சொல்ல முடியுமா? முடியும். ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டு வந்து அம்மணமாக்கி இருட்டறையில் தள்ளி வாரக் கணக்கில் பட்டினிப் போட்டு தாகத்தால் தவிக்க விட்டு அதன் பிறகு 10 பொலிஸார் அவனைச் சுற்றி நின்று தாக்கி வீழ்த்துவதைப் போர் என்று அழைக்கலாமென்றால் வாயிலும் மூக்கிலும் இரத்தம் வடிய அடிபட்ட நைந்து துவண்டுப் போன அந்த மனிதன் மெல்ல நிமிர்ந்து பொலிஸாரை ஒரு ஏளனப் பார்வைப் பார்த்தால் அந்த பார்வை தான் அவன் நடத்தும் போர்.

13 ஆண்டுகளாக ஈராக் மீது பொருளாதாரத் தடை இருக்கிறது. ஐ.நா.வின் அனுமதியின்றி ஒரு நெல்மணியையோ குண்டூசியையோ கூட அவர்கள் இறக்குமதி செய்ய இயலாது. உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தடை விதித்ததால் பிறந்தவுடன் இறந்த குழந்தைகள் பல இலட்சம்.

பிழைத்து வளர்ந்து பள்ளி சென்றால் நோட்டுப் புத்தகம் கிடையாது - பென்சிலும் கிடையாது. காகித உற்பத்திக்குத் தேவைப்படும் வேதிப் பொருட்களும், பென்சிலில் உள்ள காரீயமும் இராணுவ நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுமென்பதால் அவற்றுக்கும் தடை. பொருளாதாரத் தடையின் வக்கிரத்துக்கு இது ஒரு சான்று.

1980 முதல் 1988 வரை அமெரிக்க ஆதரவுடன் சதாம் நடத்திய ஈரான் - ஈராக் போர், பின்னர் அப்பன்புஷ் நடாத்திய வளைகுடாப் போர், அதன்பின் கடந்த 13 ஆண்டுகளில் மோனிகா லெவின்ஸ்கி பிரச்சினை உட்பட பல காரணங்களுக்காக அவ்வப்போது ஈராக் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடை காவு கொண்ட உயிர்கள் - இவை அனைத்துக்கும் தப்பி உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ஈராக்கின் மக்கள் தொகையில் சுமார் 60 வீதம் பேர் சிறுவர்கள் - குழந்தைகள். மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் அன்றாடம் ஐ.நா. வழங்கும் இலவச உணவுக்குக் கையேந்தி நிற்கும் வறியவர்கள். ஈராக் இராணுவமோ, சீருடை தவிர அனைத்தையும் இழந்து விட்டது. பத்தாண்டுகளாக அமெரிக்காவின் கையாளாக இருந்து ஐ.நா. நடத்திய ஆயுதப் பரிசோதனையில் ஈராக் இராணுவத்தின் அரைஞான் கயிறு உட்பட அனைத்தும் அறுத்தெடுக்கப்பட்டு விட்டன. இத்தனையையும் உத்திரவாதம் செய்து கொண்ட பிறகும் அமெரிக்கச் சூரப்புலிகளுக்குத் தைரியம் வரவில்லை. துருக்கி, ஈரான் உள்ளிட்ட எல்லைப் பகுதி நாடுகளின் ஒத்துழைப்பை உறுதி செய்து கொண்டு, குவைத், கட்டார், சவூதி ஆகிய எல்லைப்புற நாடுகளின் தளங்களில் வந்து இறங்கினார்கள்.

உலகத்தையே பலமுறை அழிக்குமளவு ஆயுதபலம் கொண்ட அமெரிக்க வல்லரசு, ஏற்கெனவே ஒருமுறை உலகத்தை ஆதிக்கம் செய்து அழித்த அனுபவம் கொண்ட பிரிட்டிஷ் வல்லரசு. அவர்களுடைய் 3 இலட்சம் துருப்புக்கள், 20,000 டொன் வெடி மருந்துகள், இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கும் 14,000 ஏவுகணைகள், 2000 க்கும் மேற்பட்ட போர் விமானங்கள், இன்னும் டாங்கிகள், கவச வண்டிகள் இன்ன பிற... இத்தனைக்குப் பிறகும் அவர்கள் ஈராக்கில் நுழையவில்லை. எல்லையிலிருந்தே ஏவுகணைகளை வீசி பின் உற்பத்தி நிலையங்கள், தொலைபேசி நிலையங்கள்,



மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், உணவுக் கிடங்குகள், குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகிய அனைத்தையும் ஏவுகணைகளால் தகர்த்தார்கள். பிறகு பள்ளிகள், கடைவீதிகள், குடியிருப்புகள் மீதும் குண்டு வீசி ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றார்கள். அந்தப் பாலைவன மண்ணில் எஞ்சியிருக்கும் மக்களுக்குக் குடிநீர் கூட இருக்கக் கூடாது என்பதை உத்தரவாதம் செய்து கொண்டு அதன்பின் தைரியமாக ஈராக்கில் காலடி எடுத்து வைத்தார்கள். அமெரிக்க, பிரிட்டிஷ் "வீரர்கள்!"

போர் என்பது இரு தரப்பினர் பொருந்தும் நிகழ்வைக்குறிக்கும் சொல். ஈராக்கை 13 ஆண்டுகள் பட்டினி போட்டு சூழ்ச்சியால் ஆயுதங்களைப் பறித்து அமெரிக்கா நடத்தியிருக்கும் இந்த கிருஷ்ண பரமாத்மா வேலைக்கு வேண்டுமென்றால் வேறு பெயரிடலாம். நிச்சயம் இது போர் அல்ல. மிதிபட்டு நைந்துபோன ஈராக்கின் மைந்தன், பீரங்கிக் குழாயின் முன் நிமிர்ந்து நின்று "அமெரிக்காவே வெளியேறு" என்று முழங்குகிறானே இதுதான் போர். இந்தப்போர் இன்னும் முடியவில்லை.

உலகின் அதி நவீன இராணுவத்தின் ஹெலிகொப்டரை வேட்டைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார் ஒரு விவசாயி. சின்னஞ்சிறு நகரங்களுக்குள் நுழைவதற்கே அமெரிக்க, பிரிட்டிஸ் இராணுவங்கள் 15 நாட்கள் போராடின. ஆனால் 50 லட்சம் மக்கள் தொகைகொண்ட தலைநகர் பக்தாத் மூன்றே நாட்களில் வீழ்ந்தது. "இது சதாம் ஹுஸைனுடன் அமெரிக்கா செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கை" என்ற இரகசியம் அம்பலமாகிச் சந்தி சிரிக்கிறது. ஒரு சர்வாதிகாரியின் துரோகத்திற்காக ஈராக் மக்கள் தலை குனியத் தேவையில்லை. ஆனால் சர்வாதிகாரத்தை ஒழித்து ஜன நாயகத்தை நிலை நாட்டவும், பூமிக்கடியில் அந்தச் சர்வாதிகாரி ஒழித்து வைத்திருக்கும் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கவும் போர் தொடுப்பதாகக் கூறிவரும் புஷ்ஷும், பிளேயரும் தான் இந்தப் பித்தலாட்டத்திற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்த "பக்தாத் ஒப்பந்தம்" உயிர் பிச்சை வழங்கியிருப்பது சதாமுக்கல்ல. நகர்ப்புறக் கொரில்லா யுத்தத்தில் பக்தாத் என்னும் திக்குத் தெரியாத காட்டில் டாங்கிகள் நுழைய முடியாத அதன் சந்து பொந்துகளில் எலிகளைப்போல சுடுபட்டு செத்திருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான அமெரிக்கச் சிப்பாய்களுக்குத்தான் இந்தத் துரோக ஒப்பந்தம் உயிர் பிச்சை வழங்கியிருக்கின்றது.

பதின்மூன்று ஆண்டுகள் தாக்கப்பட்ட பின்னரும் தலை நிமிர்ந்து எதிர்க்கும் சமூகத்தை, பதின்மூன்றே நாட்களில் பயந்து உயிர்ப்பிச்சை கேட்ட கோழைகளா அடக்கியாள முடியும்? எனவேதான் சொல்லுகிறோம் போர் இன்னும் முடியவில்லை.

ஈராக்கில் வைஸ்ராயாக அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் ஜே. கார்னர் கூறுகிறார். "வியட்னாம் போர் பெரிதும் நீண்டுவிட்டது. அன்று மட்டும் ஜார்ஜ் புஷ் ஜனாதிபதியா இருந்திருந்தால் நாம் வென்றிருப்போம்."

கேலிக்குரிய இந்தப் புகழுரையில் சொக்கிப் போய், "யாரங்கே வியட்னாம் மீது இன்னொரு முறை படையெடு" என்று பேரரசர் ஜோர்ஜ் புஷ் உத்தரவிடவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் அப்படி உத்தரவிடுவதற்கு முன்பே வியட்னாமிலிருந்து திரும்பிய அமெரிக்கச் சிப்பாய்கள் ஜனாதிபதியைச் சுட்டுக் கொன்றுவிடும் அபாயமும் இருக்கிறது. வியட்னாமிற்குச் சென்று சண்டை போட்டுச் செத்தவர்களைத் தவிர மற்றவர்கள் பலருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. மீதியுள்ளவர்கள் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்னணியில் நிற்கிறார்கள்.

கார்னரின் கூற்றை ஒரு வஞ்சகப் புகழ்ச்சியாக நாம் எடுத்துக் கொண்டால் "ஒரு முழு மூடன் ஜனாதிபதியாக இருந்தால் தான் அமெரிக்கப் போரில் வெற்றி பெற முடியும்" என்று பொருள் வருகிறது.



உள்ளபடியே பொருள் கொண்டால் வைஸ்ராயின் மடமை அதிர்ச்சியூட்டுகிறது.

"வியட்னாமை முப்பதாண்டுகளுக்கு முந்தைய ஈராக்" என்று மதிப்பிடும் மூளையானது "ஈராக் - முப்பதாண்டுகளுக்குப் பிந்தைய வியட்னாமாக" மாறக் கூடிய சாத்தியக் கூறை ஒத்துக் கொள்ளாது. அன்று ஹெலி கொப்டரில் தொத்திக் கொண்டு கடைசி அமெரிக்கச் சிப்பாய் வியட்னாமிலிருந்து உயிர் தப்பி ஓடும் காட்சியைக் காணும் வரை "நாம் தோற்று விட்டோம்." என்பதை அமெரிக்க ஒப்புக் கொண்டதா?, என்ன பிழைத்திருந்தால் ஜே. கார்னரையும் ஒப்புக் கொள்ள வைப்பார்கள் ஈராக் மக்கள். ஏனென்றால் போர் இன்னும் முடியவில்லை.

இந்த மாபெரும் போரில் உலகின் மாபெரும் இராணுவத்தின் மாவீரர்கள் காட்டிய துணிவைக் கண்டு உலகமே கைகொட்டிச் சிரித்தது. தங்களுக்கெதிராக ஒரு தோட்டா சுடப்பட்டால் உடனே கண்ணை மூடிக் கொண்டு எட்டுத் திக்கிலும் ஓராயிரம் தோட்டாக்களை உமிழ்ந்தார்கள். பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், கோல் ஊன்றி நடக்கும் முதியவர்கள், ஆடுகள், கோழிகள் போன்ற எந்த [illegible] தங்களைத் தாக்கக் கூடுமென அஞ்சியதால் எல்லோரையும் எல்லாவற்றையும் சுட்டார்கள். இத்தனைக்குப் பிறகும் சில அமெரிக்கப் பிணங்களையும், போர்க் கைதிகளையும், தொலைக் காட்சியில் கண்டவுடன் அமெரிக்கா அரசுக்கு வியர்த்தது. எப்போதும் வானத்தை மட்டுமே பார்த்து நடக்கும்படி தயாரிக்கப்பட்ட ஜனாதிபதியில் சிப்பாய்கள் தலை குனிந்து கைதிகளாக மண்டியிட்டிருப்பதைக் கண்ட வீரர்களுக்கு வெறி பிடித்தது. எதிரில் வருபவர்கள் அனைவரும் எதிரிகளே என்று பீதியில் சுடத் தொடங்கினர். கடைசியில் கணக்குப் பார்த்போது ஈராக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்கர்களைக் காட்டிலும் அமெரிக்க வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க பிணங்களே அதிகமிருந்தன.

ஆயுதமேந்திய இந்தக் கோழைகளின் நடத்தையுடன் ஆயுதமேந்தாத வீரர்களான ஈராக் மக்களை ஒப்பிட்டுப் பாருங்கள். ஏவுகணைத் தாக்குதலுக்கு அஞ்சி இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வரக்கூடுமென்று எதிர்பார்த்து எல்லை நாடுகளிளெல்லாம் தயாராக அகதிமுகாம் அமைத்து வைத்திருந்தார்கள். ஆனால் அகதிகளாய் வெளியேற மக்கள் விரும்பவில்லை. மாறாக அண்டை நாடுகளான ஜோர்டானுக்கும், சிரியாவுக்கும் பிழைப்புத் தேடிப் போயிருந்த ஈராக்கியர்கள் பக்தாத் மீது ஏவுகணைகள் வந்து விழும் காட்சியைக் கண்டவுடன் சொந்த மண்ணைக் காக்க ஆயிரக்கணக்கில் ஈராக் நோக்கிப் புறப்பட்டார்கள். ஒரு புறம் பக்தாத் மீது வந்திறங்கும் ஏவுகணைகளையும், மறுபுறம் பக்தாத் நோக்கிப் பேருந்துகளில் வந்திறங்கும் மக்களையும் தொலைக்காட்சியில் கண்டு உலகமே வியந்தது.

ஒரு நியூயோர்க் கட்டிடம் தகர்க்கப்பட்டவுடன் பீதியில் அலறிய அமெரிக்கா; பக்தாத் நகரமே தகர்ந்து தூளாக்கப்பட்டதைக் கண்ட பிறகும் உயிருக்கு அஞ்சாமல் நாட்டைக் காக்க விரையும் ஈராக் மக்கள் ஒரு தோட்டாவைச் சந்தித்தவுடன் கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளும் அமெரிக்கச் சிப்பாய்கள் ஓராயிரம் டொன் குண்டுகள் பொழிந்து கொண்டிருந்த போதும் மண்ணெண்ணை விளக்கின் ஒளியில் ஒரு உயிரைக் காப்பாற்ற அறுவைச் சிகிச்சை செய்யும் பக்தாத்தின் ஈடிணையில்லா மருத்துவர்கள். யாருக்காக யார் அடிபணிவார்கள்? சுயநலத்தின் முன் தியாகமும், கோழையின் கீழ் வீரமும் அடிபணிந்ததாக வரலாறில்லை. எனவேதான் சொல்கிறோம். போர் இன்னும் முடியவில்லை.

வென்றவர் யார் தோற்றவர் யார் என்றறிய கைகளைப் பார்க்காதீர்கள். கண்களைப் பாருங்கள். துப்பாக்கி என்றொரு பொருள் அமெரிக்காச் சிப்பாயின் கைகளில் இருப்பதையே பொருட்படுத்தாமல், "அமெரிக்கனே வெளியேறு" என்று முழங்குகிறார்கள். "இந்தக் குழந்தையை ஏன் கொன்றாய், உன்னுடைய புஷ் எங்கே, அவனைப் பதில் சொல்லச் சொல்" என்று முகத்துக்கு நேரே கையை நீட்டி சபிக்கிறார்கள். தொலைக்காட்சியில் நமக்குக் காட்டியது இவ்வளவு காட்டப்படாதது எவ்வளவோ. மக்களின் கண்களில் வெறுப்பு, கோபம், அவர்களை எதிர்கொள்ளும் சிப்பாய்களின் கண்களிலோ ஒருவித அச்சம், வெறுமை, தார்மீக ரீதியல் தோற்றுப் பின்வாங்கும் கண்களுக்கேயுரிய வெறுமை. அவர்கள் துப்பாக்கி ஏந்திய பிணங்கள். மக்களோ ஆயுதம் ஏந்தாத வீரர்கள்.

இத்தகைய சூழ்நிலைகள் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் புதியதில்லை. எத்தனை டொன் குண்டுகளை வீச வேண்டியிருக்கும், எத்தனை ஆயிரம் மக்களைக் கொல்ல வேண்டியிருக்கும் என்று போருக்கு முன்னர் திட்டமிடும் போதே, கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியுள்ளவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கான தந்திரங்களையும் சேர்த்துத்தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள். அடிமைப்படுத்தப்பட்ட "மக்களின் உள்ளத்தையும் சிந்தனையையும் வென்றெடுப்பது." என்று இந்தத் தந்திரத்திற்குப் பெயரிட்டிருக்கிறார்கள். போருக்குப் பின் அமெரிக்க மேலாதிக்கத்தின் நியாயத்தையும், எண்ணை வயல்களைத் தனியார் மயமாக்குவதன் அவசியத்தையும் ஈராக் மக்களுக்குக் "கற்றுக் கொடுக்க வேண்டும்" என்று ஆலோசனை வழங்கியிருக்கிறது 'ஹெறிடேஜ்' எனும் அமெரிக்கக் கல்வி (இராணுவ) நிறுவனம். வன்புணர்ச்சியின் நியாயத்தையும், அதன் தவிர்க்கவியலாத தன்மையையும் அதனால் கிடைக்கக் கூடிய ஆதாயத்தையும் ஒரு பெண்ணுக்குப் புரிய வைத்து ஏற்கச் செய்ய முடியுமென்றால் அடிமைத்தனத்தை ஏற்குமாறு ஈராக் மக்களையும் பக்குவப்படுத்தலாம். "கற்பழித்தவனையே காதலிக்கச் செய்வது" என்ற இந்த ஆலோசனை அருவருக்கத்தக்கதாக நமக்குத் தோன்றக்கூடும். ஆனால் இந்தச் 'சவால்' பற்றித்தான் பி.பி.சி., சி.என்.என். தொலைக்காட்சிகளில் ராஜ தந்திரிகளும் வல்லுர்களும் அன்றாடம் விவாதிக்கின்றார்கள். "வெறும் சோறு மட்டும் போதுமா? சுதந்திரம் வேண்டாமா?" என்று கம்யூனிசத்திற்கு எதிராக சண்டமாருதம் செய்தவர்கள். "சோறு போடுகிறேன் சுதந்திரத்தைக் கொடுத்துவிடு" என்று பேரம் பேசுகிறார்கள். "கொக், பெப்சி, அமெரிக்க நுகர் பொருட்கள் ஆகியவற்றைச் சந்தையில் குவித்து "குடி, அனுபவி, அமெரிக்காவைக் காதலி" என்று ஈராக் மக்களுக்கு ஆசை காட்டத் திட்டமிடுகிறார்கள். ஆனால் உலகெங்கும் ஏற்கனவே அமெரிக்க மோகத்தில் கட்டுண்டு கிடந்த பலர் இந்த ஆக்கிரமிப்புப் போரைக் கண்டபின் பித்தம் தெளிந்து விட்டனர். அமெரிக்க, பிரிட்டிஸ் ஆதிக்கத்திற்கெதிரான ஈராக் மக்களின் போர், அமெரிக்க மேலாதிக்கத்திற்கெதிரான உலக மக்களின் போராட்டமாக வடிவெடுத்துவிட்டது. **காலனி ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் ஒழியும்வரை இந்தப் போர் முடியப் போவதில்லை.**

உலக மயமாக்கம், உலகு தழுவிய சுதந்திரம் என்ற முதலாளித்துவப் பிதற்றல்களை இந்த ஆக்கிரமிப்பு துடைத்தெறிந்துவிட்டது. "முதல் உலகப்போர் என்பது நாடுகளை மறு பங்கீடு செய்துகொள்வதற்கு ஏகாதிபத்தியங்கள் நடத்தும் நாய்ச்சண்டை" என்று லெனின் கூறியபோது அதை ஏற்க மறுத்தவர்கள் ஏராளம். இரண்டாம் உலகப் போரின் போது பாசிச எதிர்ப்பு என்ற முகமூடிக்குள் தங்கள் ஏகாதிபத்திய முகத்தை ஒழித்துக் கொண்டது அமெரிக்கா, பிரிட்டன் போன்ற அரசுகள். பனிப்போர்க் காலத்தில் 'கம்மியூனிச பூதத்தை'ப் பற்றிக் கட்டுக்கதை பரப்பித் தங்களை ஜனநாயக வாதிகளாகச் சித்திரித்துக் கொள்வதிலும் இவர்கள் வெற்றி பெற்றனர். நியூயோர்க் தாக்குதலுக்குப் பின் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகப்போர் என்று கூறி ஆப்கான் ஆக்கிரமிப்பையும் கூட நியாயப்படுத்த முடிந்தது.

ஆனால் இந்த ஈராக் ஆக்கிரமிப்புப் போரிலோ "பேரழிவு ஆயுதம் - ஈராக்கின் சுதந்திரம்" என்ற எந்தக் கட்டுக் கதையும் செல்லுபடியாகவில்லை. ஈராக்கின் எண்ணெய் வயல்களை அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனங்கள் கைப்பற்றுவதற்காகத்தான் இந்தப் போர்"என்ற உண்மை பள்ளிச் சிறுவர்களுக்கும் புரிந்துவிட்டது. எந்த ஐ. நா. வின் பெயரால் பொருளாதாரத் தடை என்று 13 ஆண்டுகளாக ஈராக் மக்கள் பட்டினி போட்டுக் கொல்லப்பட்டார்களோ, அந்த ஐ. நாவை ஒரே நொடியில் கொன்று விட்டு "கடவுளுக்கு நன்றி. ஐ. நா. செத்துவிட்டது." என்று ஏகத்தாளம் செய்கின்றது அமெரிக்கா. லீக் ஒ.்.ப் நேஷன்ஸ் என்ற உலகமன்றத்தை இதேபோல ஹிட்லர் ஒழித்துக் கட்டியதைத் திகிலுடன் நினைவு கூர்கிறார்கள். முதலாளித்துவ அறிஞர்கள். ஹிட்லர் என்பவன் தப்பிப் பிறந்த தறுதலைப் பிள்ளையல்ல. ஏகாதிபத்தியம் பெற்றெடுத்த குலக்கொழுந்துதான் என்பதை புஷ் நிரூபிக்கிறார். நடுநிலை, சுதந்திரம் என்று பம்மாத்து செய்து கொண்டிருந்த பி.பி.சி., சி.என்.என் போன்ற செய்தி நிறுவனங்கள், பத்திரிகைகள் ஆகிய அனைவரும் அமெரிக்க பிரிட்டிஷ் முதலாளிகளின் அடைப்பக்காரர்கள்தான் என்ற உண்மை அசிங்கமாக அம்பலமாகிவிட்டது. இனி, இவர்களுடைய வானிலை அறிக்கைகளைக் கூட வளைகுடா மக்கள் சந்தேகிப்பார்கள் என்ற நிலை தோன்றி விட்டது.

ஒரு போர், ஒரேயொரு போர், ஒரு நூற்றாண்டு மயக்கத்தைத் தெளிய வைத்துவிட்டது. இதற்குப் பல ஆயிரம் ஈராக் மக்களின் உயிர் பலி கொடுக்கப்பட்டிருக்கிறது. *ஏகாதிபத்தியம் என்றால் போர் என்ற இந்த ரத்தம் தோய்ந்த உண்மை உலக மக்களின் நினைவில் நிற்கும் வரை ஏகாதிபத்தியங்களுக்கெதிரான மக்கள் போர் முடியப் போவதில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கப்படவிருக்கும் சோனக தேசம்

## காங்கேயனோடை வரலாறு பற்றிய சுருக்கக் குறிப்பு

மட்டக்களப்பு முஸ்லிம் மக்களின் விவசாயக் காணியை மீளக்கையளித்தல் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தூதுக் குழுவிற்குமிடையே 27.03.2003 அன்று வவுணதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முஸ்லிம்களின் விவசாயக் காணிப் பிரச்சினைக்கு மேலதிகமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் ஆக்கிரமித்துள்ள தமிழர்களின் நிலப் பிரதேசங்கள் என்றதொரு பட்டியல் பசீர் சேகுதாவூத் தலைமையில் சென்ற முஸ்லிம் தூதுக் குழுவினரிடம் புலிகளின் சிறப்பு தளபதி ரமேஸினால் கையளிக் கப்பட்டது.

இக்கையளிப்பை உறுதிப்படுத்தி தளபதி ரமேஸினால் ஊடகங்களுக்கு விசேடமாக [illegible] க்கு சிறப்பு பேட்டியளிக்கப்பட்டது. ஆனால் முஸ்லிம் தூதுக் குழுவில் சென்ற ULMN முபீன் என்பவர் பகல் சாப்பாட்டு நேரத்தில் அப்படியொரு ஆவணம் தரப்பட்டதாகவும், எமது தூதுக்குழு அதைப் புறமொதுக்கித் தட்டிக்கழித்து விட்டதாகவும், காத்தான்குடி பள்ளிவாயல் சம்மேளனக் கூட்டத்திலும், ஏனைய கேட்கப்படும் இடங்களிலும் தாராளமாகக் கதையளந்து வருகிறார்.

முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழுவினால் அமுக்கப்பட்டுக் கிடந்த முக்கிய விடயத்தை முதன் முதலில் மக்கள் அரங்கிற்கு கொண்டு வந்து முஸ்லிம் மக்களை விழிப்படையச் செய்த சமூக பங்களிப்பை "முஸ்லிம் குரல்" பத்திரிகை சுவடு 10 வெளியிட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் கையளித்திருந்த அந்த ஆவணத்தை மட்டக்களப்பிலுள்ள ஏறாவூர், ஓட்டமாவடி, காத்தா ன்குடி பேன்ற இடங்களிலுள்ள தமிழ் கிராமங்கள் முஸ்லிம் மக்களால் அன்று ஆக்கிரமிக்கப்பட்டது என்றும், அப்பிர தேசங்களின் பட்டியலும் உள்ளடக் கப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் உள்ள கிராமங்களில் ஒன்று காங்கேயனோடை. அந்த ஆவணத்தில் காங்கேயனோடை என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. *"காங்கேயனோடை ஒரு தமிழ் கிராமம். இப்போதும் தமிழர்கள் அங்கு வாழ்கிறார்கள். காங்கேயனோடை அருகிலுள்ள அனைத்து அரச காணிகளும் காத்தான்குடி மக்களுக்கு வழக்கப்பட்டு. இது முஸ்லிம் கிராமமாக மாற்றப்பட்டுள்ளது. இன்று தமிழர்கள் குறைந்த அளவிலேயே வாழ்ந்து வருகின்றனர். வறிய தமிழ் மக்களுக் குரிய நியாயங்கள் கூட பணக்கார முஸ்லிம்களால் பெருமளவு வழங்கப்ப ட்டு நச்சரிப்புக்குள்ளாக்கப்பட் டும் அவர் கள் வெளியேற்றப்பட்டனர்.*

புலிகளின் இந்த ஆவணத்திற்கு நேரடியாகப் பதிலளித்துவிட்டு வரலாற்று ரீதியாகவும் பதிலளிக்கலாம் எனவும் காங்கேயனோடையில் பிறந்து வாழ்கின்றவன் என்ற வகையில் கடமைப்பட்டுள்ளேன். புலிகளின் இந்த அப்பட்டமான ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்ட ஆவணத்திற்குப் பதிலளிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் காணி மீட்பு தூதுக் குழுவில் சென்ற எந்தக் கனவான்களும் இதுவரை முன்வரவில்லை. தூதுக்குழுவின் தகுதி இலட்சணம் இப்படியிருக்க, அமைச்சர் அதாவுல்லா 'மின்னல்' பேட்டியில் 50, 60 வருடங்களுக்கு முன்னர் குடியேறியது காங்கேயனோடை என்று வராலாறு தெரியாது பிதற்றுகிறார். இவர்கலெல்லாம் எந்த சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்களா னார்களோ தெரியாது.

புலிகளின் ஆவணத்திற்கு நேரடியாகப் பதிலளித்தால் காங்கேயனோடை ஒரு போதும் தமிழ்க் கிரமமாக இருந்ததில்லை. தூய தமிழ்ப் பெயரில் காங்கேயனோடை என்று அழைக்கப்பட்டதேயொழிய தமிழர்கள் அண்மைக்கால ம்வரை காங்கேயனோடையில் வாழ வேயில்லை. காங்கேயனோடை 12,13 என இரண்டு கிராம சேவகப் பிரிவுக ளைக் கொண்டது. இங்கு 450இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இக்கிராம மக்கள் அனைவரும் நீண்ட கால வரலாற்றைக்கொண்ட முஸ்லிம் மக்களின் சந்ததிகளாவர். காங்கேய னோடைக்கு அருகில் அரச காணிகள் என்று எதுவுமில்லை. எல்லாமே தனியாருக்குச் சொந்தமான காணிகளாகும். பக்கத்திலுள்ள ஆரையம்பதியிலும் அரச காணிகள் எதுவுமில்லை. காங்கேயனோடையின் எல்லையில் அதாவது ஆரையம்பதியில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வகுக்கப்பட்ட எல்லையே இப்போதும் காங்கேயனோடைக் கிராமத்திற்கு எல்லையாகும். இவ்வெல்லைகளை இப்போது நேரடியாகப் பார்வையிட்டாலும் இவ்வுண்மை புலப்படும். 1990ஆம் ஆண்டு பலாத்கார வெளியேற்றத்தின் பின்பு 43 குடும்பங்கள் இன்னும் மீள் குடியேறவில்லை. இவர்களின் வீடுகள் காங்கேயனோடை - ஆரயம்பதி எல்லையிலேயே இருக்கின்றன. இவ்வீடுகளில் சில வீடுகள் தமிழ் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதே தவிர தமிழ் மக்களின் எந்தக் காணிகளையும் முஸ்லிம் மக்கள் வாங்கவேயில்லை. புராதன காலம் தொட்டு காத்தான்குடி முஸ்லிம்கள் காங்கேயனோடையில் குடியேறவேயில்லை. திருமண பந்தத்தின் காரணமாக காங்கேயனோடை முஸ்லிம்களே நூற்றுக்கணக்கில் காத்தான்குடியில் சுதந்திரத்திற்குப் பின்னர் குடியேறியுள்ளனர். இப்போது காங்கேயனோடையின் வரலாற்றை நோக்குவோம்.

### காங்கேயனோடையின் அமைவிடம்

தமிழர் - திமிலர் யுத்தத்துடன் நேரடியாகப் பங்குகொண்ட பாட்டாளியான முஸ்லிம்களின் ஆரம்பகாலக் குடியிருப்புக்களில் ஒன்றே காங்கேயனோடையாகும். நீர்வழிப் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்தில் காங்கேயனோடையின் முக்கியத்துவம் கருதி இங்கு முதலாவது குடியேற்றம் ஏற்பட்டுள்ளது. காத்தான்குடிக்கு மத்திய குடியிருப்பாகவே காங்கேயனோடை காணப்படுகிறது. வரலாறு இதை நிரூபித்து நிற்கிறது.

மட்டக்களப்பிற்குத் தெற்கே 4 மைல்கல் தொலைவில் மட்டக்களப்பு வாவியை ஒட்டியதாகக் காணப்படும் 1□2 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட கிராமமே காங்கேயனோடையாகும். இதன் வடக்கு கிழக்கு எல்லை ஆரயம்பதி கிராமமாகும். தெற்கு எல்லை மாவிலங்கு துறையாகும். (வம்மியடிமுனை) தென் கிழக்கு எல்லை கீச்சான்பள்ளம். மேற்கு எல்லை மட்டக்களப்பு வாவியாகும்.

### காங்கேயனோடையின் பெயர்வரக் காரணம்

முதலில் காங்கேயனோடை என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்கு விடை காணப்பட வேண்டும். "காங்கே யன்" என்ற ஒருவன் ஓடைவெட்டி முதலில் குடியிருந்ததாகவும் பின்னர் மக்கள் குடியேறி காங்கேயனோடை என்று வாழ்ந்ததாகவும் இங்கு வாழும் மக்கள் நம்பிக்கையுடனும், ஆய்வு நோக்கின்றியும் கூறிக் கொள்கிறார்கள். இது ஒரு செவி வழிரீதியான மரபுக் கதையாகும்.



உண்மையில் காங்கேயன் என்ற சொல் இறைவனைக் குறிக்கின்ற சொல்லாகும். தமிழ் அகராதியில் காங்கேயன் என்பதற்கு இவ்வாறுதான் பொருள் கூறப்பட்டுள்ளது. காங்கேயனோடை என்பதை ஆய்வு நோக்கில் பார்க்கும் போது இறைவனின் ஓடை என்றே பொருள் கொள்ளப்படவேண்டும். இதை வைத்துப்பார்க்கும் போது காங்கேயனோடையின் வாரலாற்றுக்காலம் எவ்வளவு என்று திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது. இறைவன் என்ற சொல்லை விட அக்காலத்தில் காங்கேயன் என்ற சொல்லே புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். இதனடிப்படையில்தான் இந்தியாவில் காங்கேயன்தொகுதி வடபகுதியில் காங்கேசன் துறை போன்ற பெயரிகள் உருவாகியிருக்கின்றது. காங்கேயன் என்ற பெயரில் நபர் ஒருவருக்கு பெயர் இருந்ததாக வரலாற்றில் எந்த ஆதாரத்தையும் இதுவரை காணக்கிடைக்கவில்லை.

இவ்விடயங்களை ஆய்வுக்குட்படுத்தி நாம் காங்கேயனோடை என்ற பெயர் எவ்வாறு வந்திருக்கலாம் என்ற முடிவுக்கு பின்வரும் விடயங்களை ஆழமாகப் பார்ப்பதன் மூலம் பெற முடியும்.

காங்கேயனோடையின் கிழக்குப் பக்கத்தில் கோயில்குளம், ஆனைக்குளம், குத்தியன்குளம் போன்ற குளங்கள் காணப்படுகின்றன. வருடா வருடம் பெய்கின்ற பருவ மழையினால் நிரம்பும் இக்குளங்களிலுள்ள நீர் வெளியேறி காங்கேயனோடையின் மேற்குப் பக்கம் இருக்கின்ற மட்டக்களப்பு வாவியை சென்றடைகின்றது. குளங்களிலிருந்து வெளியேறும் நீர் பள்ளப்பகுதியாக இருக்கின்ற காங்கேயனோடை வழியாக வாவியைச் சென்றடைகின்றது. நீர் வாவியைச் சென்றடையும் வாய்க்கால் திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கப்பட்டதல்ல. நீரின் போக்குக்கு ஏற்ப இந்தக் கால்வாய்கள் இயற்கையாகவே தோன்றியுள்ளது. இங்கு அமைந்துள்ள ஓடைகளின் வளைவுகளைப் பார்க்கின்றபோது இது தெளிவாகின்றது. இக்குளங்களிலிருந்து வருடக் கணக்கில் நீர் வழிந்தோடி இயற்கையாகவே இவ்வோடைகளை உருவாக்கிக் கொண்டது. இயற்கையாக உருவான ஓடை இறைவனின் ஓடை என்ற பொருள்பட அழைக்கப்படலாயிற்று. இறைவன் என்ற சொல்லுக்கு அப்போது வழக்கிலிருந்த காங்கேயன் என்ற பொருள்பட காங்கேயனோடை என்ற பெயர் வந்திருக்கலாம் என்பதே அறிவியல் ரீதியாகப் பார்க்கின்றபோது புலனாகின்றது.

### காங்கேயனோடை முதல் குடியேற்றம்

புராதன மட்டக்களப்பில் முஸ்லிம்கள் குடியேறிய காலப்பகுதியில்தான் இங்கும் முஸ்லிம்கள் குடியேறியிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. மட்டக்களப்பில் முஸ்லிம்கள் இரண்டு கால கட்டங்களில் தங்கள் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.

01. தமிழர்களுக்கும் - திமிலர்களுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தின் போது தமிழர்களுக்கு (முக்குவர்களுக்கு) உதவி புரிய வந்த பட்டாணியர்கள், முக்குவர்கள் யுத்தத்தில் வெற்றியடைய மட்டக்களப்பிலேயே தமது குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். முக்குவப் பெண்களை மணந்து தமது வாரிசுகளைப் பெருக்கிக் கொண்டனர். இதன் காரணமாக தமிழ் முக்குவர்களின் 50 வீதமான கலாச்சாரப் பண்புகள் இன்றும் முஸ்லிம்களிடம் காணப்படுவது சான்றாகும்.

02. 15ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயக் காலணித்துவ ஆட்சியின்போது இலங்கையின் தென்பகுதி முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டு கண்டி மன்னனின் ஆட்சிப் பிரதேசமான மட்டக்களப்பில் குடியேறினர்.

இந்த இரண்டு கட்டங்களில் 1வது கட்டத்திலேயே முஸ்லிம்கள் காங்கேயனோடையில் குடியேறியிருக்க வேண்டும். ஏனெனில் முக்குவப் பெண் களது கலப்புத் திருமணத்தின் ஊடா கவே முக்குவர்க ளிடம் காணப்பட்ட தாய்வழி குடிமுறை காங்கேயனோடை மக்களிடம் இப்போதும் காணப்படுவது இதற்கு தக்க சான்றாகும். முக்குவக் குடிகளின் பெயர்கள் வேறாகக் காணப்பட்டாலும் காங்கேயனோடை மக்களிடம் காணப்படும் குடிப்பெயர் களை சோனகர்கள் தமது தனித்துவத்தை அப்படியே நிலை நிறுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. காங்கேயனோடை யிலுள்ள குடிப்பெயர்கள் அனைத் தும் காத்தான் குடியின் 5ஆம் 4ஆம் குறிச்சிகளில் மாத்திரமே இப்போதும் காணப்படுகின்றது. குடிகள் இல் லாதவர்கள் இரண்டாம் கட்டத்தில் காத்தான் குடியில் வந்து குடியேறியவ ர்களாவர். சம்மாந்து றையிலும் கல்மு னைக்குடியிலும் இப் போது குடிமுறைகள் காணப்படுகின்றமை இதற்கு மேலதிக சான்றாகும்.

முக்குவப் பெண்களுடனான திருமணம் தமிழர் - திமிலர் யுத்தத்தின் போது மட்டுமே சாத்தியமானதாகும். பிற்பட்ட காலங்களில் முக்குவர்களுக்கும் கரையார்களுக்கும் இடையிலான போட்டியும் பகைமையும் அதிகரித்துவிட்டது. இப்போதும் சோனிக்குப் பெண் கொடுத்தவன் முக்குவன் என்று கரையார்கள் இகழ்வது கேட்கக் கூடிய ஒன்றே! இந்த நிலையில் பிற்பட்ட காலங்க ளில் அதாவது 2வது கட்டத்தில் முக்குவப் பெண்களை சோனகர் திருமணம் செய்வதற்கான சந்தர் ப்பம் இருந்திருக்க வாய்ப்பில்லை.முக்குவத் திருமண உறவின் கார ணமாகவே குடியேற்ற முறை முஸ் லிம்களிடம் ஏற்பட்டிருக்க வேண் டும். இன்றும் குடி வாழ்வு முறை இறுக்கமானதாகவே காணப்படு கின்றது.

காங்கேயனோடையில் 12 குடிகள் காணப்படுகின்றன. பக்கத்தில் உள்ள ஆரையம்பதியிலும் 12 குடிகள் காணப்படுகின்றன. தாய்வழி முறையிலேயே குடி சந்ததிகளை சென்றடைகின்றது. இதுவே காங் கேயனோடை சோனகர் வளர்ச்சி யைத் துரிதப்படுத்தியது. இதனடிப்படையில் பார்க்கின்றபோது காங்கேயனோடைத் தாய்வழி உரித்தான சொந்தமும் ஆட்சியும். புலிகள் கூறுவது போன்று தமிழர்களிடம் இருந்து அபகரித்த நிலமில்லை என்பது புலனாகின்றது.

புரதான கிராமமான காங்கேயனோடையை தமிழர் கிராமம் என்று நிரூபித்தால் பின்னர் தோன்றிய காத்தான்குடியையும் தமிழ்க் கிராமம் என்று உரிமை கொண்டாடுவதற்கு புலிகளுக்கு வாய்ப்பாகப் போய்விடும். ஏனெனில் காத்தானில் குடியிருப்பே காத்தான்குடியென்று இப்போதும் தமிழர்கள் உரிமை கொண்டாடிட வெளிக்கிட்டுள்ளார்கள்.

ஜீனியர் அபூபக்கர் அலி
காங்கேயனோடை

---

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

6 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

அதிரடிப்படை ஜீப் அரைவட்டத்தில் சர்ரெனத் திரும்ப திடீரென முத்துமுகம்மது வேகமாய் ஓடி தலைவரின் வாகனத்தை நெருங்கி விட்டான். அவனைக் கண்டதும் தலைவர் தன்பக்கத்து கண்ணாடியை கீழே இறக்க - ஒரே வீச்சில் முத்துமுகம்மது புலிகளின் கடிதத்தை தலைவரின் மடியில் போட்டு விட்டான்.

வாகனங்கள் புழுதி கிளப்பி பறந்தன. மையித் வீடு தலைவரின் வருகையால் மிகப் பரபரப்படைந்து விட்டது. சனம் நிறைந்து வழிந்தது. முத்துமுகம்மதின் ஓட்டமும், தலைவரின் பண அன்பளிப்பும் இளைஞர் அணித்தலைவர் நியமனம் அவனை அக்கூட்டத்தின் கதாநாயகனாக்கி விட்டது. பரபரப்புடன் இயங்கினான் முத்துமுகம்மது.

உடன் சுக்கூரின் ஓட்டோ ஒருநாள் முழு வாடகைக்கு அமர்த்தப்பட்டது. டொக்டர், சடுதி மரண விசாரணை அதிகாரி, பொலிஸ்... என்று ஏகப்பட்ட பரபரப்புக்கள்... விஸாரிப்புக்கள்... பின் மையித் அடக்க.... மண்வெட்டிகள், சந்தூக்கு, மஞ்சிப்பலகை, வெள்ளை, கூறை... மக்கத்து விரிப்பு, 'கபுறு' வெட்டி வந்தோருக்கு இடியப்பம்.. பாணி.. லெப்பைகள்... தொப்பிகள்... சந்தண நெடி...

ஒரு வழியாக பகல் ஒரு மணிக்கே மையித்து அடக்கிவிட்டு வந்தாயிற்று. மரண வீடு வெறிச்சோடியிருந்தது. உதுமான் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். முத்துமுகம்மதும் மிகவும் களைத்துப் போய் உதுமானுக்கு பக்கத்திலேயே



கண்ணயர்ந்து விட்டான். மைமுனாவின் தம்பி யாஸின் வந்து உலுக்கியதும் தான் எழுந்தான் முத்துமுகம்மது. மாலையாகிவிட்டிருந்தது.

'என்னடா?'

'முத்துமச்சான், ஒன்ன லாத்தா ஒடன வரச்சென்ன!'

'ஊட்ட ஆர்ரா இரிக்கிறா?'

## அத்தியாயம் 4

'சுல்தான் மாமாவும், ம்மாவும் இரிக்காஹ!

'போ, வாறன்'

"வா, முத்தும்மது" என்றாள் மாமி. வறாந்தாவின் திண்ணையில் குந்தியிருந்தாள். பக்கத்தே ஒரே ஒரு கதிரையில் சப்புச் சுல்தான் அமர்ந்திருந்தான். மைமுனா தாய்க்குப் பக்கத்தில் குனிந்தபடி இருந்தாள். சுற்றிலும் தங்கைகள். யாஸீன் சப்புச் சுல்தானுக்கு சிகெரட் வாங்கப் போயிருந்தான். முத்துமுகம்மதுக்கு சப்புச் சுல்தானைக் கண்டதுமே ஆத்திரம் பொங்கியது. அதனைக் கவனிக்காத சப்புச் சுல்தான் -

'முத்தும்மது... ஙா... வாடாப்பா! மையத்தூட்டுக்கு ஒங்கட தலவரு வந்தாப்ல...ம்?'

'ஏ...... வெரப்பெடாத? செலமாளிர மக்களுக்கு வகுத்துல புளி கரக்குமே... சின்னக் மௌத்தா அது? கொல! பச்சக்கொல...'

'மவ்துக்கு என்னன்டான ஒரு காரணம் வேணுந்தான்... அத உடு... தலவரு பத்தாயிரன் ரூவாக் காசி தந்தயாமே நொக்கு... இளஞர் அணிக்கும் தலவராமே நீ...? ச்கிஹ்த்கி...'

'புல்லக்காட்டாத சப்பு! உதுமான்ட வெண்டிய கொளும்புக்கு கூட்டிட்டுப்போய் நீ செஞ்ச வேலையால...'

'நிப்பாட்டு! நொக்கு தல பழுது. கொளும்புல என்னய்ற? 'பிளைட்டு'ல ஏத்தி உட்ட. மொடவனும் கூடத்தான் இரிந்தான். அவள் சௌதியில பொஸ்ஸில தங்கமாலயக் களவெடுத்த ண்டு செல்லி

பொஸ்ஸி சூட்டுக் கோல் வெச்சி அடிச்சி தொரத்தி உட்டுட்டான். அதுக்கு நானா ஆள்? நானா களவெடுக்கச் சென்ன? போற எடத்துல, மைமுனா... நீ ஒழுங்கா பொய் களவு ல்லாம இரிக்கணும் சரியா?'

மைமுனா மையமாக தலையாட்டினாள். மாமி - 'முத்தும்மது! நீ ஒண்டும் கோவியாத! அவரவர்ர 'தல முசிவத்'தப் படியான் நடக்கும். சுலுத்தான் தம்பியில குத்தமில்ல. அந்தக் கதய ஒடு! ப்ப முத்தும்மதோவ், மைம்னா கொவைத்துக்குப் போப்றாள். எல்லாம் ரெடி! வாற கெழம மட்டுல போற...'

'மெய்யாத்தான் செல்றியா மாமி! மைமுனா... மெய்யான இது?'

'.....'

'வேறென்னய்ற தலைவரு? ஊடு வளவு ல்லாம ஏளக் கொமரு நாலையும் நீயா பாரமெடுக்கிற?'

'நீ வாயப்பொத்துரா சப்பா!'

'முத்தும்மது கோவியாத! மின்ன நானும் ஒருக்கா கொவைத்துப் போய் வந்தனான். ஒரு கரச்சலும் ல்ல. வேள் மைம்னாவும் போய் ஒரு வரிசம் இருந்திட்டு வெரட்டும்.

கொஞ்சக் காசி ஒழச்சிட்டு வெரட்டும். அது மட்டுக்கும் நீயும் ஒரு வெள்ளாமய கிள்ளாமயச் செஞ்சி ஒள. வேள் வந்தவுடன ஒனக்குத்தான் அவளப் பண்ணி வைக்கிற. சுவர்! நம்பு! செரியா முத்தும்மது? ஒத்ததோடயும் கோவியாத. என்ட ஏள்ம அப்பிடியிரிக்கி...'

முத்துமுகம்மதால் ஏதும் பேச முடியவில்லை. சப்புச் சுல்தான் சிகரெட்டை இரஸித்துப் புகைத்துக் கொண்டிருந்தான். இவனுடான ∴மைமுனா கொழும்புக்கு...? சப்புச் சுல்தானின் விழிகளில் இருந்த விஷ(ம)ம் பயமுறுத்தியதாலோ என்னவோ மைமுனா தலைநிமிராது மண்ணைப் பார்த்தபடியிருந்தாள்.

'இதுல மைமுனாவுக்கு விருப்பமா மாமி?'

'விரும்பாம என்னய்ற? பாரன் அவளச் சுத்தியிரிக்கிற இதுகளப் பாரன்... நாலும் பொம்புள. நாளக்கி இதுகளும் கொமரான... என்ட கெதி என்ன? அதுவும் ஒரு 'கண் பொண்டாட்டி!'

முத்துமுகம்மது ஒன்றும் பேசாமல் திண்ணையில் சரிந்து உட்கார்ந்தான். சப்புச் சுல்தான் போவதற்கு எழுந்தான். புலிக்கடிதம் பற்றி இவனிடம் சொல்லி பயமுறுத்திப் பார்க்கலாமா..... இவனிடம் கடிதத்தை கொடுக்காமல் விட்டதற்காக புலி ஏதும்...

'நான் போய் வாறன் மைமுனாடம்மா!'

'போப்றியாம்பி? செரி, மிச்ச வெஷயத்தை...?'

'பெரச்சினல்லாஹா! கொஞ்சம் செலவுக்கு தேவப்படும். ரெடி பண்ணுங்க...... ஆறுதலா! மைம்னா வெரட்டா? தலவரு வெரட்டா?'

'...'

இன்னும் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துள்ளி வரும் துளித் தகவல்கள்

ௗ இந்திய பேரீச்சை என ஒரு பழத்தை அறபியர் அழைத்தனர். எல்லோருக்கும் தெரிந்த புளியம் பழமே அது! (என்ன, எச்சில் ஊறுகிறதா?)

ௗ ஆசிய நாடுகளில் அரசியல் பகடைகளாக பல்கலைக் கழக மாணவர் தலைவர்கள் உருவாக்கப்படுவர். இலங்கைக்கு முதலிடம்! பங்களாதேஷும் சளைத்ததல்ல. மாணவத் தலைவர்கள் பல்கலைக்கு வெளியே சொகுசு வாழ்க்கை நடத்துகின்ற னர். கடைகள் என்ன தூர்கள் என்ன எல்லாம் அத்துப்படி!

ௗ ஜப்பானில் இருபது வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பெண்களைப் போலவே நடை, உடை அலங்காரத்தில் உலா! (இலங்கையும், அப்படி இருக்கிறதே என்பீர்கள்! நான் மறுக்க முடியாது!)

ௗ "மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்" என்றொரு நூல். எழுதி முடிக்க மறை மலையடிகள் எடுத்துக் கொண்டது 24 ஆண்டுகள்!

ௗ சப்பாத்துக்களுக்கு பொலிஸ் போட செலவில்லாத ஒரு வழி. வாழைப்பழத் தோலின் உட்பகுதியை சப்பாத்துக்களின் மேல் தேயுங்கள். பிறகு துணியால் துடையுங்கள். பாருங்கள் பள பளப்பை.

ௗ எந்த வேலையைச் செய்தாலும் விரும்பி அனுபவித்துச் செய்தால் அது எவ்வளவு கடினமாக இருந்தாலும் உடலைப் பாதிக்காது. அதைவிடுத்து வேண்டா வெறுப்பாகச் செய்தால் உடலையும் உள்ளத்தையும் பாதிக்கும்!

ௗ சமையல் வாயு (கேஸ்) பயன்படுத்தும் குடும்பத் தலைவியர் சமையலறையில் நல்ல காற்றோட்டம் இருக்கப் பார்த்துக் கொள்க. இது விபத்தைத் தவிர்க்கும், உடல் நலம் காக்கும். காற்றோட்டம் இல்லா அறையில் உள்ள சிலின்டரால் ஆஸ்துமா, மூச்சுத் திணறல், நுரையீரல் பாதிப்பு ஏற்பட (4 மடங்கு) அதிகமாக வாய்ப்பு உள்ளது.

ௗ எண்ணெயை அதிகம் ஈர்க்காத வடை சுட வேண்டுமானால் 1 கிலோ உளுந்துக்கு 100 கிராம் பச்சரிசி என்ற விகிதத்தில் அரிசி சேர்த்து ஊற வைத்தால் வடை அதிக எண்ணெய் குடிக்காது.

திருநாவுக்கரசர் - நம்மாழ்வார் - அருணகிரிநாதர் - பெரும் பற்றப் புலியூர் நம்பி ஆகியோர் தமிழக ராவுத்தர் முஸ்லிம்களின் சிறப்புக்களைப் பாடிப் பரவசமாயினர். திருவானைக் காவல், ஈரோடு

### சைவர் ராவுத்தர்களின் சிறப்புக்களைப் பாடினர்

செப்பேடுகளில் அவை பதிவு. சில சைவக் கோயில்களில் ராவுத்தர் மணி மண்டபங்கள் கூட்டப்பட்டுள்ளன. மாணிக்க வாசகர் கதையில் சிவனே ராத்தராக வந்துள்ளார்.

### வெறுங்கை வேண்டாம்!

விருந்துக்குக் கூப்பிட்ட வீட்டுக்குப் போகும் பொழுது வெறுங்கையோடு போக வேண்டாம். அங்கே இருப்பவர்களை நினையுங்கள். குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கும், பெரியவர்கள் இருந்தால் அவர்களுக்கும் எதையாவது வாங்கிச் செல்லுங்கள். இதுவே சிறந்த பண்பாடு.

## இஸ்ரேலின் ஆயுதம்

அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக ஆயுத ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தில் இருக்கும் நாடு இஸ்ரேல். இந்தியா, துருக்கி, கிழக்கு ஆசிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகள் இஸ்ரேலிடம் ஆயுதங்களை வாங்குகின்றன.

இஸ்ரேலின் ஆயுத விற்பனை 2002இல் 16,650 கோடி ரூபாய். இது 2001ஆம் ஆண்டைவிட 40 சதவீதம் அதிகம். சுற்றியிருக்கும் அரபு நாடுகளை ஆக்கிரமித்து மண்ணின் மைந்தர்களாம் பாலஸ்தீனர்கள் மீது வேட்டை நாய்போல் பாய்ந்து கொன்று குவித்து வரும் இஸ்ரேல், அமெரிக்காவின் செல்லக்குரங்கு. ஏராள ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு பக்கத்து நாடுகளைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் இஸ்ரேலின் மீது எந்தத் தாக்குதல்களும், தடைகளும் ஏற்படாது. ஆனால் அப்பாவி ஈராக் மீது பயங்கரவாத நாடு என்ற முத்திரை குத்தப்பட்டு அழிக்க நினைக்கிறது அமெரிக்கா. பாலஸ்தீன், ஆப்கானிஸ்த்தான், ஈராக், ஈரான் என்று குறிவைக்கப்படும் வெள்ளாடுகளின் கதியை நினைத்து அரபு நாடுகள், ஓநாய்களை அடையாளம் கண்டுகொள்வது நல்லது.

### மாணவ மக்களின் தருவது

### பெற்றோர்–ஆசிரியர் – மாணவர் மூவர் பார்வைக்கும்

+ பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை ஒரு குறிப்பிட்ட பாடநெறியைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதைக் கைவிடுக.
+ எந்தப் பாடநெறியில் விருப்பம் இருக்கிறதோ அதையே தேர்ந்தெடுக்க அனுமதிக்க வேண்டும். விருப்பமான தேர்வே வெற்றிக்கு சுலபமான வழி.
+ பாடம் நடத்த மட்டுமே வகுப்பறை என்ற கருத்திலிருந்து ஆசிரியர்கள் மாறி, சமூகத்திற்காக மாணவர்களை உருவாக்கும் கருவியாகவும் வகுப்பறையைப் பாவிக்க வேண்டும்.
+ பெற்றோர்களது வற்புறுத்தல் - நண்பர்களது ஆலோசனை - ஆசிரியர்களின் அபிப்பிராயம் இவற்றுக்கு மாணவர்கள் செவிமடுக்கும் அதே நேரத்தில், அவர்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ள ஆர்வம் மற்றும் திறமை அடிப்படையில் படிப்புகளைத் தேர்ந்தெடுத்து சேர்வதே நல்லது.
+ வெளிப்படுத்தும் திறனில் மாணவர்கள் தனிக் கவனம் செலுத்தி நேர்முகத்தேர்வுகளில் வெற்றி பெறவேண்டும். அறிவுக்கூர்மையும், திறமையும் இருந்தால் கூட பொறியியல் துறை மாணவர்கள் வெளிப்பாட்டு விஷயங்களில் கோட்டை விடுகிறார்கள்.
+ அறிவியல் திறனை முழுக்க வெளிக்காட்ட தாய்மொழி அறிவு மிக அவசியமானது.

*தமிழ் நாடு, பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் விழாவொன்றில் வெளியிட்ட கருத்துக்களிலிருந்து தொகுத்தவை.*

## சாத்தானின் காதல்



சாத்தானின் வேதம் என்ற நூலை எழுதியதன் மூலம் உலக முஸ்லிம்களின் இதயத்தில் தீயை அள்ளிப்போட்டவன் சல்மான் ருஷ்டி. ஈரானின் ஆயத்துல்லா கொமேனி இவனுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். தலைமறைவாக இங்கிலாந்தில் இருக்கும் இவன் ஏற்கனவே மூன்று பெண்களைத் திருமணம் செய்தவன். கடைசியாக மூன்று வருடங்களுக்கு முன் மணந்துகொண்ட பத்மா லட்சுமி என்ற தமிழ் நாட்டு மொடல் அழகியையும் மூன்று மாதங்களுக்கு முன்னால் விவாகரத்துச் செய்துவிட்டான். சாத்தான் சல்மானின் லேட்டஸ்ட் பார்வை சோபிடால் என்ற கவர்ச்சி நடிகையின் மேல் விழுந்திருக்கிறது. அமெரிக்க நடிகர் டான் பேக்கரைக் காதலிக்கும் சோபிடாலுக்கு சல்மான் தொடர்ந்து வலை வீசிக்கொண்டே இருக்கிறான். விழாக்களிலும் விருந்துகளிலும் விடாமல் துரத்தித் துரத்தி காதல் கணை வீசும் சல்மானிடம் சோபிடால் விழுவாரா என்பது விரைவில் தெரியும்.

## புகழ் பெற்ற ஜோக்ஸ்



### காலை வைத்து கண்டுபிடி

புதிதாக கல்லூரியில் சேர்ந்த மாணவன் ஒருவன் விலங்கியல் தேர்விற்காக இரவு முழுவதும் கண்விழித்துப் படித்தான்.

மறுநாள் தேர்வு எழுதுவதற்காக வகுப்பு அறைக்குள் நுழைந்தான். பேராசிரியரின் மேசையின் மேல் உடல் முழுவதும் போர்வையால் மூடிக் கட்டப்பட்டிருந்த பத்துப் பறவைகள் வைக்கப்பட்டு இருந்தன. அந்தப் பறவைகளின் கால்கள் மட்டுமே தெரிந்தன.

தேர்வு நன்றாக எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் முன் வரிசையில் அமர்ந்தான் அவன்.

பேராசிரியர் வகுப்பிற்கு வந்தார். மாணவர்களைப் பார்த்து, "நீங்கள் ஒவ்வொருவரும் மேசையின் அருகே வந்து பறவைகளின் கால்களைப் பார்க்க வேண்டும். அதைக் கொண்டே அவற்றின்பெயர், விலங்கியல் பெயர், பழக்க வழக்கங்கள், சிறப்பியல்புகள் எல்லாவற்றையும் எழுத வேண்டும். இதுதான் தேர்வு" என்றார்.

ஒவ்வொரு பறவைகளின் கால்களையும் உன்னிப்பாகப் பார்த்தான் அவன். அவனால் எந்தப் பறவையின் பெயரையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இரவு கண் கழித்துப் படித்தது எல்லாம் வீணாயிற்றே என்று கோபம் கொண்டான் அவன்.

பேராசியரைப் பார்த்து, "இப்படியா தேர்வு வைப்பது? உங்களைப் போன்ற முட்டாளை நான் பார்த்ததே இல்லை" என்று கத்திவிட்டு வெளியே செல்லத் தொடங்கினான்.

அதிர்ச்சி அடைந்த அவர், அவனை மேலும் கீழும் பார்த்தார். வகுப்பில் நிறைய மாணவர்கள் இருந்ததால் அவன் பெயர் தெரியவில்லை. "உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"அப்படி வாருங்கள் வழிக்கு" என்ற அவன் தன் பேண்டை கால் முட்டிவரை சுருட்டினான்.

தன் கால்களை இவரிடம் காட்டி, "இவற்றைப் பார்த்து என் பெயரைச் சொல்லுங்கள். பார்ப்போம்" என்றான்.

### இனி கெட்ட நேரம்

ரயில் வண்டியின் ஒரு பெட்டியில் பெரியவர் ஒருவர் தனியாகப் பயணம் செய்து கொண்டிருந்தார். அந்த வண்டி ஓர் ஊரில் நின்றது. அவர் இருந்த பெட்டியில் ஒரு குடும்பமே ஏறியது. எல்லோரும் அழுக்கடைந்த ஆடை அணிந்திருந்தனர். வண்டி புறப்பட்டது.

சிறிது நேரத்தில் சிறுவர்கள் அந்தப் பெட்டிக்குள் ஓடியாடி சண்டை பிடித்துக் கொண்டனர். ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

பொறுமை இழந்த அவர்கள் தந்தை, ஒருவனைப் பிடித்துக் கணமண் தெரியாமல் அடித்தார். அடி வாங்கிய அந்தச் சிறுவனோ உயிரே போவது போல அழுது ஆர்ப்பாட்டம் செய்தான்.

நடந்ததை எல்லாம் பார்த்துப் பொறுமை இழந்த பெரியவர், "எதற்காகச் சிறுவனைப் போட்டு இப்படி அடிக்கிறாய்? அடிப்பதை நிறுத்து. இல்லையேல் பெரிய தொல்லையில் சிக்கிக் கொள்வாய்" என்று எச்சரித்தார்.

"உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று கோபத்துடன் கேட்டார் அவர்.


"இப்பொழுதே சங்கிலியைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்த முடியும். உன்னைக் குடும்பத்துடன் இங்கே இறக்கி விட்டு விடுவார்கள். பிறகு உனக்குக் கெட்ட நேரம்தான்" என்றார்.

அதற்கு அவர், "இனியா எனக்குக் கெட்ட நேரம் வரப் போகிறது? வீட்டில் உள்ள பணத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு என் மனைவி எவனுடனோ ஓடி விட்டாள். குடிகார உறவினர் ஒருவரிடம் இவர்களை விட்டு விட்டு வரச் செல்கிறேன். அந்த மூலையில் அழுது கொண்டிருக்கும் என் பதினைந்து வயது மகள் நான்கு மாத கர்ப்பம். அந்தச் சிறுவன் நான் கொண்டுவந்த பெட்டியை வெளியே தூக்கி எறிந்துவிட்டான். நான் அடிக்கிற இந்தப் பையன் ரயில் டிக்கட்டையெல்லாம் விழுங்கி விட்டான். நான் பார்த்து வந்த வேலையிலிருந்தும் என்னை நீக்கிட்டாங்க. இதுக்கு மேலே எனக்கு என்ன தொல்லை வர முடியும்" என்று வேதனையுடன் கேட்டார்.

## எங்கே செல்கின்றன நமது பாதைகள்

விடத்தல் தீவு றுஸ்தா

அங்கம் 4



### வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை

#### முகாம் வாழ்க்கையில் ஈடுகொடுக்க முடியாத துன்பங்கள்

சிறு சிறு கொட்டில்களில் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் எஞ்சியுள்ள வாழ்க்கையை கழிப்பதற்காக துயரம் தோய்ந்த முகங்களுடனும், அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடியவர்களாகவும் இவர்கள் பட்ட துன்பங்கள் எண்ணிலடங்கா.

கிட்டத்தட்ட எழுபத்தி ஐயாயிரம் மக்களின் தேவைகள் குறிப்பிட்ட ஒருசில எல்லைக்குள் வரையறை செய்து வாழ்வதென்பது கணிசமான சோகத்தை மிச்சப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. நொந்துபோய் வந்தவர்களின் மானப்பிரச்சினை வேறு.

இங்கே உலர் உணவுப்பிரச்சினையையே முதன்மைப்படுத்தி பேசவேண்டியுள்ளது. கடலில் கொட்டக் கொண்டுபோன கோதுமையை இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவி செய்வதாய் கொடுக்கின்ற அமெரிக்காவின் நடிப்பு மாதிரி. இந்த மக்களுக்கு கொடுபடுகின்ற உணவு முறை வினியோகங்கள் (உலர்) தரம் குறைந்த அரிசி வினியோகமென்பது ஈன்று குறிப்பிடத்தக்கது. சங்கக்கடைக்காரர்களின் கொள்ளை லாபமீட்டல் ஒரு புறமிருக்க, கொளுத்த கள்ளர் கூட்டமாய் செயற்பட முனைந்த அரச □ அரச சார்பற்ற ஊழியர்களின் செயற்பாடுகளும் இடம்பெயர்ந்து தெற்கு நோக்கி வந்ததிற்கு பிற்பாடு திடீர் பணக்காரர்களாய் மாறிப்போன சுய நல சகுனிகளும், பத்துக் கிலோ அரிசி வாங்கினால் ஒன்பது கிலோவை நிறுத்திக் கொடுக்கின்ற சில அரச சங்கக் கடைகளும் உலர் உணவுக் கூப்பன் வினியோகத்தல் (முத்திரை) கிராமிய அதிகாரிகளுக்கு கை லஞ்சம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம். இதை மனம் நொந்து நியாயம் கேட்டாலோ பட்டினி கிடக்கவேண்டிய பயமுறுத்தல் எச்சரிக்கைகள்.

இன்றும் ஓலைக் குடிசைகளின் கூரைகளைப்பார்த்து பெருமூச்சு விட்டபடி இவர்களின் வாழ்க்கைப் போராட்டம் எல்லோருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லைதான். சீரற்ற மின் வினியோகங்களும், சீர் செய்யப்படாத பாதை அமைப்பு முறைகளும் குடிநீருக்காக இன்றும் குடங்களை இடுப்பில் சுமந்தவாறு பல மைல் தூரம் நடந்துசென்று குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளும் பரிதாபக் காட்சி இன்னும் முடிந்தபாடில்லை.

தொழில் பிரச்சினையை ஓரளவாவது தீர்த்துவைத்த பிற துறைகளைச் சார்ந்த வேலைவாய்ப்புகளும், முகாம்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட முகாம் பொறுப்பதிகாரிகளின் சம்பளங்களோ கொடுப்பனவுகளோ வழங்கப்படாமலிருப்பதும், மேலும் திருமண ஊக்குவிப்பாக வழங்கப்பட்ட ஒரு கணிசமான தொகை நிறுத்தப்பட்டிருப்பதும், ஒரு சிலர் ஒன்றுக்கும் அதிகமாக உலர் உணவு கூப்பன்களை வைத்துக் கொண்டு ஏகபோக வியாபாரம் செய்துகொள்வதும், இதற்கு உடந்தையாக ஒரு சில அதிகாரிகள் செயற்படுவதும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

இங்கே மிக நீண்ட காலமாக வெளியேற்றப்பட்ட இம்மக்களுக்கு அச்சுறுத்திக்கொண்டே இருக்கும் பிரச்சினை ஒன்றை மிகவும் வேண்டுதலோடு சொல்லவேண்டி இருக்கிறது அதை "பாதுகாப்பின்மை" என்ற போர்வையில் நோக்கினாலும் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்களாக இம்மக்களே காணப்படுகின்றனர். இருப்பினும் தொடர்ந்தும் புத்தளம் பிரதேசத்தில் வாழவேண்டியுமுள்ளது. பாலாவியில் நடந்தேறிய முச்சக்கர வண்டிப் பிரச்சினை வாய்த்தர்க்கம் கைகலப்பாகி அதற்குப் பிற்பாடு நடந்தேறிய வன்முறைகளில் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டவர்கள் விரட்டப்பட்ட இந்த இடம்பெயர்ந்த மக்களே. ஒவ்வொரு முறையும் சேதமாக்கப்படும் இவர்களின் சொத்துக்களுக்கு கொடுப்பனவுகளோ, நஷ்ட ஈடுகளோ வழங்கப்பட்டதாய் இன்று வரையும் எந்தத் தகவலுமில்லை.

#### வட புலமே எமது தாயகம்

யார் எதைக் கூறினும் எமது பிறந்தகமே எங்களுக்கு தாயகம். வந்தேறு குடிகளோ, கள்ளத் தோணிகளோ நாங்களில்லை. எமது தாயகக் கோட்பாடானது எந்நிலையிலும் அழிந்துபோகவோ, சிதைந்துபோகவோ அனுமதிக்கப்போவதுமில்லை. ஒல்லாந்து, போத்துக்கீசர் காலத்துக்கு முற்பட்ட வரலாற்று ஆவணங்களும் தடயங்களும் எம்மிடம் ஏராளமுண்டு.

இறை நல்லடியாரிகளின் அடக்கஸ்தலங்கள் பல நூற்றாண்டுகால தொன்மைகளோடு யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களில் ஆதாரங்களாகவும், ஆவணங்களாகவும் காட்ட முடியும். ஒல்லாந்து போத்துக்கீஸ கால கிறிஸ்தவ மதப்பிரசார நடவடிக்கைகள்மூலம் அன்றைய இந்து முஸ்லிம்கள் நேரடியாகவே பாதிக்கப்பட்டதனால். இந்துக்களின் தெய்வங்களின் சிலைகளை முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதியில் பாதுகாப்பாக புதைத்து வைத்த ஆவணக் குறிப்புகளும் வரலாற்றில் காணமுடிகிறது. மேலும் நல்லூர் முஸ்லிம்கள் என வாழ்ந்தோரின் வாழ்வியலையும் ஆராய்தல் வேண்டும்.

இதேபோன்று மன்னார், சிலாபத் துறைமுகப் பிரதேசமும் மாந்தை கடலோர ஏரிகளின் வரலாறுகளும் பழமை எடுத்தோதுகின்றன. கி.பி. 1538ல் முத்துக் குளிக்கும் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக போத்துக்கீசருடன் நடாத்தப்பட்ட அத்து மீறல்களுக்கு எதிரான போராட்ட வரலாறுகளையும், 1796 முதல் 1948 வரையிலான காலப்பகுதியில் வீரதீரமிக்க காட்டு யானைகள் பிடிக்கும் தொழிலில் முழுக்க, முழுக்க முஸ்லிம்களே இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதும் இந்த யானை பிடித்தல் தொழிலுக்கு முஸ்லிம்கள் மன்னாரையே தளமாகப்பாவித்ததானது நமது பூர்வீக வரலாற்றின் உண்மையை தெளிவுபடுத்துகிறது.

மிகச்சுருக்கமான வரலாற்றுத் தடயங்களே இங்கு காட்டப்பட்டிருப்பதை வாசகர்கள், வரலாற்று ஆசிரியர்கள், புத்திஜீவிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

#### இடப்பெயர்வுக்கு பிற்பாடு வந்த இலக்கிய தாக்கங்களும், கவிதைகளும்

பேசுவதற்கும், எழுதுவதற்கும் தமது உரிமைகளோடு எழுத்தாளர்கள் உருவாகிறார்களா? உருவாக்கப்படுகிறார்களா? காலத்தால் அடித்துச் செல்லப்பட்ட அபிலாசைகளோடு எதிர்பார்க்கப்பட்ட சகல திக்குகளுக்குள்ளும் கூடுகளுக்குள்ளும் அடைத்து வைக்கப்பட்ட பறவைகளாக எண்ணங்களை சிறையில் வைத்து விடிவுகளை தேடித்திரியும்போது இலக்கியத் தழுவல்களோடோ அவற்றுக்கு கவிதைகளைக் கொண்டே வட பல படைப்பாளிகள் தங்களின் ஆயுதங்களை வெளிக்காட்டி வருவது கோடிட்டுக் காட்டக்கூடியதாகும்.

ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக இம்மண்ணில் ஏற்பட்ட உள்காயங்களின் தேவைகளுக்கு கவிதைகளைக் கொண்டு மனசுகளை தேற்றிக்கொள்பவர்களின் இலக்கிய வீச்சு ஆழ்ந்து நோக்கப்படல் வேண்டும்.

மருளவோ, இருண்மைப்படுத்தவோ செய்யாத துயரம் மிகுந்த கவிதைகளை வட புல விரட்டலுக்கு பிற்பாடு தோற்றம் பெற்றதானது வெறும் வார்த்தை ஜாலத்தோடோ, உயிர்ச் சேதத்தோடு போராட்டம் பெறாத கவிதைகளாகவோ இவை மலரவில்லை. மாறாக துயரையும், உயிர் சோகங்களையும், மன மரணங்களையும், வாழ்வியலை துக்ககரமாக்கிய சோகங்களையும் அவை அழகாய்ப் படம் பிடித்து காட்டத்தவறவில்லை.

அன்றைய வெளியேற்றல் ஒடுக்கு முறைக்குப் பிற்பாடு சமபாடு என்ற தலைப்பில் நையாண்டிக் கவிதையொன்று ஏ. இக்பால் அவர்களால் எழுதப்பட்டிருந்தது.

*(இன்னும் வரும்)*


முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 180/
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 360/
1 வருடம் - (48 இதழ்கள்) - 720/

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக் கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சவூதி சென்ற முஸ்லிம் பணிப் பெண் மர்ம மரணம் 'என்மனைவிக்கு நேர்ந்த கதி எவருக்கும் வரக்கூடாது'

*(மட்டக்களப்பு நிருபர்)*

ஆறாம் மாதம் வீட்டுக்கு வருவதாக கடிதம் எழுதியிருந்த மனைவியை எதிர்பார்த்து நானும் பிள்ளைகளும் ஆவலோடு காத்திருந்தோம். ஆனால் ஏழாம் மாதம் அவர் மரணித்துவிட்டதாக எனக்கு அறிவித்தார்கள்.

இவ்வாறு கண்ணீர் மல்க தனது மனைவியின் சோக முடிவைக் கூறினார் கணவர் எம்.எஸ்.அப்துல் றஹ்மான். வாழைச்சேனை தியாவட்டவான் பாலத்தடியைச் சேர்ந்த முஹம்மது அலியார் பாத்தும்மா பீபி (வயது 38) என்பவர் 2003ஆம் ஆண்டு ஜனவரி 05ஆம் திகதி சவூதி றியாத்திலுள்ள அப்துல்லாஹ் எம். ஸாபிர் என்பவரின் வீட்டிற்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.



ஆனால் மே மாதம் 15ஆம் திகதி அவர் கடைசியாக கணவனுக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் தனது வீட்டு எஜமானர் ஜூன் மாதம் 25ஆம் திகதி "சபர்" ஒய்வை கழிக்கச் செல்வதால் நான் ஆறாம் மாதமே இலங் கைக்கு வந்துவிடுவேன் என எழுதியிருந்தார். மனைவி வருவாரென ஆவலோடு எதிர்பார்த்திருந்த எனக்கும் பிள்ளைகளுக்கும் அவர் மரணித்து சடலமாக இருப்பதான செய்தியே கிட்டியது. இப்படியொரு கொடுமையான சம்பவம் பணிப்பெண்ணாக மத்திய கிழக்கு செல்லும் எந்த ஏழைக்கும் ஏற்பக் கூடாது. நான்கு பிள்ளைகளின் தாயான என் மனைவி குடும்ப வறுமை காரணமாகவே வீட்டுப் பணிப்பெண்ணாக சவூதி சென்றார்.

ஜூன் மாதம் 06ஆம் திகதி என் மனைவி மரணித்துள்ள போதும் 11ஆம் திகதியே எமக்கு அறிவித்தார்கள். என் மனைவியின் மர்ம மரணத்தில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. வறுமையினால் ஜீவனோபாயத்தைத் தேடி பணிப் பெண்ணாகச் செல்லும் ஏழைப் பெண்களை கொடுமைப்படுத்துவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இன்று எனது குழந்தைகள் நால்வரும், நானும் நிர்க்கதியாகியிருக்கின்றோம். ஏழு மாதங்கள் பணிப் பெண் வேலை பார்த்த எனது மனைவிக்கு 15 ஆயிரம் ரூபா பணமே வழங்கியிருக்கின்றார்கள் என்றும் துயரம் தாங்காது கூறினார் அப்துல் றஹ்மான்.

## உசாமா பின் லேடன்....

இஸ்லாமிய உலகில் இஸ்லாத்தின் மேற்கு பெயரால் பல தலைவர்களை உருவாக்கிவிட்டது. அவர்கள் உண்மையில் இஸ்லாமிய வழியிலிருந்தும் நெறி பிறழ்ந்தவர்களாக இருந்தனர். இஸ்லாமிய சமூகத்தின் வளங்களை நாசப்படுத்தி அழித்தனர். எதிரிகளுக்கு அடமானம் வைத்தனர். இவர்களும் இவர்களது நண்பர்களும் சேர்ந்து அரச பதவிகளைத் தம்வசப்படுத்திக் கொண்டனர். ஆகவே இஸ்லாமிய உலகை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ஆட்சியை மாற்றி - ஷரீஆவின் அடிப்படையில் ஆட்சிபுரியப்படல் வேண்டும்.

"ஜிஹாத் என்பது வெருமனே பாரிய படையொன்றை திரட்டுவதும் அதனை உருவாக்குவதும் மட்டுமே என வரை விலக்கனப்படுத்த முடியாது. மாறாக அது பல வித்தியாசமான அமைப்புக்களை கொண்டுள்ளது. பொதுவாகவே எல்லா முஸ்லிம் நாடுகளிலும் நம்பிக்கையுடன் கூடிய மக்கள் குழுவொன்று பலமான அமைப்பில் உருவாகுவது அவசியம். அக்குழு ஆயுத ரீதியாகவும் அனைத்து விதமான தேவைகள் ரீதியாகவும் பூரணப்படுத்தப்படுவது அவசியம். மேலும் அக்குழு அத்துமீறி ஆக்கிரமிப்போா மீதும் முடிவின்றி தொடர்ச்சியாக முஸ்லிம்களை தொந்தரவுக்கு உற்படுத்தும் சக்திகள் மீதும் அவர்களுக்கும் எதிராக தாக்குதல் நடாத்த அனுமதிப்பது அவசியம். ஜிஹாத் என்பது முடிவின்றி மறுமை வரை தொடரக் கூடியதே."என்கிறார்

அமெரிக்காவின் பலமும் ஊடுருவுவதுமே இன்று இஸ்லாமிய உலகில் பல பாதகங்களுக்குக் காரணமாக இருக்கின்றது என்ற கருத்து இஸ்லாமிய சமூக மட்டங்களில் அசைக்க முடியாத இடத்தில் நிலை பெற்று நிற்கின்றது. பல்வேறு விடயங்களில் இஸ்லாமிய அறிஞர்கள், தலைவர்களிடையே கருத்து முரண்பாடுகள் அபிப்பிராயப் பேதங்கள் இருந்தாலும் அமெரிக்காவும் மேற்கத்தைய நாகரீகமும் இஸ்லாமிய உலகிலிருந்து நீக்கப்படவேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துடனேயே இருக்கின்றனர். இப்படியான பல்தரப்பட்ட குரல்களும் உலகில் ஒலிக்கத் தொடங்கிய போது இதனை சாத்தியப்படுத்த, மேற்குடனான இப்போராட்டத்தை முன்னெடுக்க யார் முன்வருவார் என்ற எதிர்பார்ப்பும் நிறைந்திருந்தது.

பின்லேடன் அமெரிக்காவை எதிரியாகப் பிரகனப்படுத்தியதும் மேற்குக்கு எதிராக யுத்த அறைகூவலை தொடங்கிவைத்ததும் ஒரு நீண்ட அரசியல் சமூக வரலாற்று தொடர்ச்சிதான். அதன் நேரடிப் பிரதிநிதிதான் பின்லேடன் - பின்லேடனை வரலாறுதான் உருவாக்கியது. மேற்கு மயமாக்கலின் விரிவாக்கத்தை முறியடித்து தடுத்து நிறுத்துவதுதான் இஸ்லாமிய உலகு இன்று எதிர்நோக்குகின்ற மிகப்பெரும் சவால். இச்சவாலை தலைமையேற்று வழிநடாத்துவதற்கு பின்லேடன் தன்னை தயார்படுத்தி. உலகுக்கு செப்டம்பர் 11 தாக்குதல் மூலம் வெளிப்படுத்தினார்.

பின்லேடன் இன்றைய இஸ்லாமிய உலகில் அதிக வசீகரமானவராக உள்ளார். மேற்குத் தொழில் நுட்பத்தைக் கொண்டே மேற்குக்கே உலகமே அதிரும் அளவிற்கு பதிலடி கொடுத்த வல்லவராக விளங்குகிறார். அமெரிக்காவையே ஆட்டம் காணச் செய்யும் சக்தியாக ஏற்கப்பட்டுவிட்டார். மேற்கின் கனவைச் சிதைக்கும் அச்சம் தரும் எதிரியாக மேற்கினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார் இந்த பின்லேடன்.

ஒசாமா பின்லேடன் பலம் வாய்ந்த போராட்டத் தலைவரும் சரணடையாத மேற்கின் எதிரியுமாவார். அவரின் போராட்ட வரலாறு வெறுப்பினதும், துரோகத்தினதும் இதனால் ஏற்பட்ட கோபத்தினதுமான வரலாறு ஆகும். தீவிர வேட்கை கொண்ட அர்ப்பணமிக்கவர்களின் வரலாறாகவும் இப்போது நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இவர்களது முயற்சி மீளவும் வரலாற்றை சரியாகக் கட்டியெழுப்ப முன்னெடுக்கப்படுவதாகும். அவர்கள் இன்று மேற்கை வழிநடாத்தும் அமெரிக்காவை தண்டிக்க செய் அரங்குக்கு கூடியதாக உள்ளது.

யார் இந்த ஒஸாமா பின்லேடன்? அமெரிக்கா கூறும் வகையில் ஒரு தனிப்பட்ட பயங்கரவாத இயக்கத்தின் தலைவர் மாத்திரமா அவர்? இல்லை. அவர் பலகோடி பில்லியன் டொலர் சொத்துக்கு அதிபதி. ஆடம்பர சொகுசு வாழ்வைப் புறக்கணித்து அமெரிக்காவின் ஆயிரக்கணக்கான விமானங்களின் குண்டு வீச்சுக்கும் தாக்குதல்களுக்கும் மத்தியில் ஆப்கான் மலைத் தொடர்களிலும், பாலை வனத்திலும் வாழ்கிறவர். எங்கும் எப்போதும் அமெரிக்காவுக்கு எதிராக தாக்குதல் நடாத்தத் தயாராக இருப்பவர். இவர் பற்றி அறிய ஆவலாக உள்ளீர்களா? அடுத்த இதழில் சந்திப்போம்!

*(ஒஸாமா இன்னும் வருவார்)*

## உண்மையை உரைப்பதில் முஸ்லிம் குரல் முன்னணியில்

...வ்வார "முஸ்லிம் குரல்" என் கைகளில் தவழ்ந்தபோது உச்சி மோர்ந்து ...காண் டேன். ஏனெனில் குரலில் ஒலித்த ஒவ்வொரு விடயமும் ...ந்தனைக்குரிய சீரிய கருத்துக்களாகவே அமைந்திருந்தன. விசேடமாக ...முல்லாவின் பார்வை யிலே" என்ற விடயத்தை நோட்டமிட்டபோது முல்லா ...றியிருந்த கருத்துக்கள் யாவும் உண்மையானவையாகவே இருந்தன. ...துபோன்ற கருத்துக்கள் மிகவும் அவசியமானவை. அறபு மொழியை மாத்திரம் ...ற்றுவிட்டு தாம் பாண்டித்தியம் பெற்றுவிட்டோம் என்று நினைத்துச் ...சயற்படும் உலமாக்களுக்கு ஓர் முன் உதாரணமாக அக்கட்டுரை இருந்தது. ...மிழையே தாய் மொழியாகக் கொண்டுள்ள எமது நாட்டு முஸ்லிம் மக்களுக்கு ...மிழ் மொழியிலேயே பிரச்சாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். "முஸ்லிம் ...ரலே!" உன் பணி சரியாகவே உள்ளது. அப்பாதையிலேயே தொடர்ந்தும் ...ன்னேறு. இறையருள் சொரிக.

-எம். ஐ. ஏ. சுபைர், ஏறாவூர்.

# போராளிகள் புறப்பட்டு விட்டார்கள்

**சிறுகதை**

**மூதூர் முகம்மது முத்தலிப்**

'மனசாட்சி'
அது எல்லோருக்கும் ஒரே விதமாகத்தான் செயற்படுகிறது. சரியையும் பிழையையும் சரியாகச் சொல்கிறது. ஆனாலும் நாம்தான் நமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப மனசாட்சியைத் தட்டியடக்குகிறோம்.

இந்தத் தேர்தலில் நான் தோற்கடிக்கப்பட்டேன் அதனால் நிறையவே ஓய்வு கிடைக்கிறது. இப்போதெல்லாம் தனிமையில் உட்கார்ந்துவிடுகிறேன். ஈசி செயாரில் அமர்ந்து காலை நீட்டிக் கண்களை மூடிக் கொள்கிறேன். அக்கணமே மனசாட்சி விழித்துக் கொள்கிறது.

மனசாட்சியை ஓட ஓட விரட்டிவிட்டு நான் செய்த அரசியல் மனக்கண்முன்னே. விரிகிறது. மக்கள் மத்தியில் கட்சிக்கிருந்த செல்வாக்கு என்னை பிரமிக்கச் செய்தது. எப்படியும் இந்தக் கட்சியில் சேர்ந்து எம்.பியாகிச் சம்பாதிக்க முடிவெடுத்தேன். முதல் வேலையாக சமூக சேவகனானேன். எனது சொந்தப் பணத்தையும் கலந்து செலவு செய்தேன் 'தன்னலமற்ற சேவகனாக மெல்லப் பேரெடுத்தேன். சமூக சேவை என்ற பெயரில் நான் செய்த விடயங்களையும் புகைப்படங்களையும் உள்ளூர் நிருபர்களின் கை கால்களைப் பிடித்து பேப்பரில் வரவைத்தேன். ஊரில் எனது பெயர் நன்றாக அடிபட்டது.

'நீ நடிக்கிறாய்' என்று மனசாட்சி லேசாகத் தலை காட்டியது' 'மண்ணாங்கட்டி சும்மாகிட' என்றேன்.

அடுத்த கட்டமாக மக்கள் மத்தியில் நடந்த சில சில்லறைபெறாத சின்ன விடயங்களை ஆட்களை ஏவிவிட்டுப் பெரிதாக்கினேன். குழப்பம் மூண்டது. நான் தலைமை தாங்கி ஆர்ப்பாட்டம் செய்தேன். நான் எதிர்பார்த்தது போலவே பொலிஸ் வந்தது. சுடவே மாட்டார்கள் என்ற தைரியத்தில் சேட் பட்டன் தெறித்து விழ நெஞ்சுச் சட்டையை கிழித்து நெஞ்சைக் காட்டி 'சுடு பார்க்கலாம்' எனக் காடைத்தனம் பண்ணி மக்களின் நெஞ்சைத் தொட்டேன். தைரியவாலி, துணிச்சல் காரன் எனப் பேரெடுத்தேன்.

மனசாட்சி தலை காட்டியது. 'மக்களை மடையர்களாக்குகிறாயே' என்றது. "பொத்துவாயை' என்றேன்.

ஆசுபத்திரி முதல் அலுவலகம் வரை தூசு பெறாத விடயங்களையெல்லாம் தட்டிக் கேட்டேன். நான்கைந்து பேரோடு ஏறி இறங்கினேன். வீதியில் வந்திறங்கி அதிகாரிகளைத் திட்டி உரிமைக்குரல் விட்டேன் அடிக்க வந்த பொலிஸைக் காசால் அடித்தேன். அதுவும் போதாதென்றால் போத்தலைக் காட்டினேன்.

'இவர் மட்டும் பாராளுமன்றத்தில் இருந்தால்..... என்று சந்தி சபையெல்லாம் கதைக்கும்படி கூலிகளை ஏவிவிட்டேன். அது மக்கள் மத்தியில் நன்றாக வேலை செய்தது.

'இது ஆகாது, அடுக்காது' என்றது மனசாட்சி
'இது அரசியல். இது உனக்காகாது' என்றேன் நான்
எனது பிரபலம் ஏற்கனவே அரசியலில் குப்பை கொட்டிக் கொண்டிருந்தவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. ஏதோ பூக்கடை அரசியல் செய்யும் நினைப்பில் 'இந்த சாக்கடை வராதே என்றனர். நானும் 'வரமாட்டேன்' என்றேன் அதே நேரம் மக்களாக என்னை அழைக்க வைக்க மறைமுக வேலை செய்தேன்.

நாளாவட்டத்தில் 'மக்கள் விரும்புகிறபடியால் மக்களின் பணியில் என்னை அர்ப்பணிக்கத் தயார் எனக் கதைவிட்டேன்.
'போதும் நிறுத்திக் கொள்' என்றது மனச்சாட்சி. தீர்க்கமான நேரத்தில் குறுக்கே நில்லாதே ஓரங்கட்டு' என்றேன்.

எனது பின்னணி பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் கட்சித் தலைமை, என்னை தேர்தலில் நிற்கச் சொன்னது. 'உம்மைப் போன்ற புரட்சிக் குரல்கள் பாராளுமன்றத்தில் எழுச்சிக் குரலாக ஒலிக்கவேண்டும்' என்றனர்.

தேர்தல் செலவுக்கென பல லட்சம் தந்தார்கள். அவற்றை வாங்கி வைத்துக் கொண்டு பாதிப்பங்கை செலவு செய்தேன். மீதியை ஏமாளிப் பொது மக்கள் வசூல் செய்து செலவழித்தனர். நம் இனத்தின் விடுதலையும் அபிவிருத்தியும் எனது வெற்றியில் தங்கியுள்ளதாக நம்பி தூய போராளிகள் பலர் எனக்காக வேலை செய்தனர். குடும்பம் தொழில் என்பவற்றை மறந்து இரவு பகலாக வேலைகளில் பாடுபட்டனர். என்னைப் பிழையாக விளங்கிக் கொண்ட அந்த ஏமாளிகளைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டேன்.
தேர்தலில் வெற்றி பெற முன்பே எம்.பி. போலாகிவிட்டேன்.

தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பித்தன.

நரித்தனமான என்னை "எழுச்சிச் சிங்கம், புரட்சிப் புயல்" என கவிதை வாசித்தனர். ஒலிபெருக்கியைச் சுமந்துகொண்டு ஒழுங்கை ஒழுங்கையாகப் பேசித் திரிந்தனர். துறை போகக் கற்றவர்கள் கூட என்னைப் புரிந்து கொள்ளாமல் "லட்சிய வாதி கிடைத்தான்" என எனக்காக சந்தன மரத்தில் குருவிச்சை குடியேறியது போல இந்தக் கட்சியில் நான் இணைந்தேன். (இன்று கூட அப்பொய்கள் ஞாபகமில்லை) ஊரவனின் சாப்பாடு, ஊரவனின் வாகனம் எனத் தேர்தல் வேலைகள் ஜாம் ஜாம் என நடைபெற்றது.

பிரசார மேடையில் ஏனைய அரசியல் வாதிகளின் சொந்த விவகாரங்களை சந்திக்கிழுத்தேன். பேரினக்கட்சிகளுக்கு ஏசினேன். (அரசியல் தெரியாத என்னால் வேறு என்ன தான் பேச முடியும்?)

மக்கள் அனுபவித்த அவலங்களை மீண்டும் மீண்டும் கூறிக் கனந்துக்க வைத்தேன். நா தளுதளுக்கப் பேசிக் கண்ணைக் கசக்கினேன். மக்கள் அழுதுவிட்டனர். மக்களின் அவலங்களைப் போக்க பாராளுமன்றப் பதவியைப் பாவிக்கப் போவதாகப் பகிரங்கமாக பொய் சொன்னேன். அப்பாவி மக்கள் கை தட்டி "நாரே தக்பீர்" என்றனர்.

தேர்தல் நெருங்கியது.

இரவு பகலெல்லாம் காடு மேடெல்லாம் அலைந்தனர். தமது எதிரிகளைக் கண்டு சலாம் கூறி எனக்காக ஓட்டுக் கேட்டுக் கெஞ்சினர் அந்த லட்சியவாதிகள்.

வென்றேன். எம்.பி. யானேன்.

என்னை முத்தமிட்டனர். கட்டியணைத்தனர். ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். நம் இனத்தின் விடுதலைக் கீற்றுத் தெரிகின்றது என்றனர். ஊர் உருப்படப் போகின்றது என்று என்னை மலையாக நம்பினர்.

நாளாக நாளாக ஊர்ப்பிரச்சினை அபிவிருத்தி எனப் பல மகஜர்களைக் கொண்டு வந்து நீட்டினர். ரெடிமேட் புன்னகையை உதிர்த்து மஹஜரைப் பெற்று பார்க்கலாம். என்றேன். "பார்த்துவிடுவார்" என்று நம்பிச் சென்றனர். அந்த ஏமாளிகள். மஹஜர்கள், திட்டங்கள் எல்லாம் குப்பையாய் கூழமாய் உருமாறின.

நரியிடம் குடல் கழுவக் கொடுத்தது போல எம்பிப் பதவி என்னிடம் வந்து சேர்ந்தது. "இலட்சியம், விடுதலை, அபிவிருத்தி அது இது என்று தேர்தலுக்குப் பின்னும் பேசிக் கொண்டு வந்தவர்களைக் கண்டால் கொல்லனும் போல இருந்தது. அவர்களை மெல்ல விலக்கினேன். அல்லது விலகினேன். ஆம், ஏணி என்று தெரிந்தும் உதைத்தேன்.

இப்படியொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரிந்த குள்ளநரிக் கூட்டம் என்னோடு ஒட்டிக் கூஜாத் தூக்கியது. இல்லாத முறையெல்லாம் சொல்லியழைத்தது. எப்படியோ சோக்காட்டலாம். நம்பிய மக்களை எப்படி ஏமாற்றலாம். அரசியலில் எப்படி உழைக்கலாம் என அருமையான திட்டங்கள் தீட்டித் தந்தனர். அவர்களை நன்றாகப் பிடித்துப் போய்விட்டது. எத்தனையோ எம்.பிக்களுக்கு வழிகாட்டிக் கவுத்த கூட்டம் எனக்கு ஐடியாத் தந்து நாளாவட்டத்தில் "எம்.பி.யின் ஆட்கள்" எனப் பெயர் எடுத்தனர். எனது உண்மை உழைப்பாளி தூரமானான். அல்லது தூரமாக்கப்பட்டான்.

எப்போதும் ஓர் அரசியல் வாதிக்குப் பாடுபட ஒரு கூட்டமும், அனுபவிக்க ஒரு கூட்டமும் இருக்கும் என்பதை நானும் உணர்ந்தேன். தூரமாகும் தொண்டனை மற்றும் ஒரு தேர்தல் வரும்போது கட்டியணைத்து திருந்திவிட்டதாகப் பொய் சொல்லிக் கதறி அழுது இன்னும் ஒரு சான்ஸ் தரும்படி கேட்டால் சரியாகிவிடும் என்ற மெதப்பில் அவர்களைக் கடந்து சென்றேன். அவர்கள் எப்போது என்னைத் தொடர்பு கொண்டாலும் "சேர் பிஸி" எனச் சொல்லச் செய்தேன். நமது இலட்சியம் வீணாகிவிட்டதே எனக் கவலை கொண்டனர். எனது கவலை எல்லாம் இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் அதன் மூலம் எனக்கொரு பென்ஷன் கிடைக்கும். அதற்கிடையில் முடிந்தவரையில் சம்பாதித்து விடவேண்டும் என்பதே. அதே நேரம் நமது இலட்சியம் தோற்றுப் போவதை, சந்தனக்கிண்ணத்தில் சாக்கடையை அள்ளி வைத்துவிட்டதை உணர்ந்த போராளிகள் ஒரு முடிவோடு என்னை உதறிவிட்டு விலகியதை நான் உணரவில்லை.



அடுத்த தேர்தல் வந்தது. இதில் வென்றால் அரை மந்திரியாகி இந்த ஊரையே வாங்கிவிடுவேன். எனவே அந்த இலட்சிய வாதிகளை அணுகினேன். அவர்கள் சூடுகண்ட பூனையாகினர். நான் படிக்கல் அல்ல, தடைக்கல் என்பதைக் கண்டு கொண்டார்கள். எனவே என்னை அகற்ற அணி திரண்டனர். சரி போகட்டும் நம்மோடு நக்கித் திரிந்தவர்களையாவது வைத்து தேர்தலைச் செய்யலாம் என்றால் அவர்கள் ஏற்கனவே எனது தோல்வியை ஊகித்துக் கொண்டு வேறொரு எம்.பி. யை கவுக்கச் சென்றுவிட்டார்கள். திக்கித்திணறித் தேர்தல் செய்தேன். மக்களின் மகத்தான இலட்சியத்தை மழுங்கடித்ததைத்தவிர சேவை என்று சொல்லி ஓட்டுக் கேட்க உருப்படியாக எதுவும் இல்லை.

"நீ தோற்றாய்" என்றது மனசாட்சி.

"தோற்றால் என்ன என்னிடம் சொத்து உள்ளது. பென்ஷன் வரும்" என என்னை நானே ஆசுவாசப்படுத்தினேன்.

தோற்றுப் போனேன்

வெளியில் தலை காட்ட முடியவில்லை. "துரோகி" எனத் துணிந்து கூறினர். ஏமாற்றுப் பேர்வழி என்று எச்சில் துப்பினர். வீட்டில் உட்கார்ந்தேன். மனசாட்சி "துரோகி" என்றது.

உண்மை, இப்போது மனசாட்சி பேசியது. நான் தடுக்கவில்லை.

"எத்தனை கனவுகள், எத்தனை திட்டங்கள், எத்தனை தாகங்கள் அத்தனையையும் அடைந்து கொள்ளவென உருவான கட்சி. பூக்கடை அரசியல் செய்ய வேண்டிய கட்சிக்குள் வேடதாரியே! சாக்கடையாய் நுழைந்து உன்னையும் நாறடித்துவிட்டாயே. ஏணிகளை உதைத்துவிட்டு தடைக்கல்லாய் உட்கார்ந்து தடுக்கி விழ வைத்துவிட்டாயே. நீ அமானிதத்தை அலட்சியம் செய்துவிட்டாய். நிச்சயம் அமானிதம் பற்றி ஆண்டவன் கேட்பான். தண்டிப்பான் தயாராக இரு. மக்களின் இலட்சியம் என்பது நீண்ட பாதை. அதில் ஒரு மைல்கல்லாகியிருக்கலாம். தடைக்கல்லாகிவிட்டாயே! உன்னில் தடுக்கி விழுந்தாலும் அந்த இலட்சிய வாதிகள் மீண்டும் எழுந்துவிட்டார்கள். *நீ மட்டுமல்ல உன்னைப்போல் எத்தனை தடைக்கற்கள் எதிர்வந்தாலும் அவற்றைத் தூக்கி முதுகுக்குப் பின்னே போட்டுவிட்டு இலட்சியத்தை வெல்லப் போராளிகள் புறப்பட்டுவிட்டார்கள்.*

உண்மையில் மக்களை விற்றுப் பெற்ற சொத்தும், பென்ஷனும் உனக்கு ஹராம். கொஞ்சமேனும் மனசாட்சியின் சொற் கேட்பவனாக இருந்தால் இவற்றைத் தொடாதே! தூ... நீயெல்லாம் மக்கள் தலைவனா? எனக் கேட்டு மனசாட்சி ஓங்கி அறைந்தது. காலங்கடந்து.

*(யாவும் கற்பனை)*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பிள்ளைகளும் காதல் கலாசாரமும்

## ஒரு சமூகவியல் கண்ணோட்டம்

முஹம்மத் இஸ்மாயீல் சித்தி றபீக்கா
சம்மாந்துறை

சமூக எழுச்சியையும் முன்னேற்றத்தையும் பொருளாதார மேம்பாட்டையும் அடையக் காத்திருக்கும் இளம் சமூகத்தினர் மத்தியிலே விபரீதமானதொரு காதல் கலாசாரம் சமூகச் சீரழிவுகளை இன் றைய நாள் வரை ஏற்படுத்திக் கொண் டிருக்கிறது.

கலவன் பாடசாலைகள், டியூசன் சென்டர்கள், சினிமா அரங்குகள், பஸ்கள், பூங்காக்கள், போன்றவை இச் சீரழிவு களை வடிவமைத்துக் கொண்டிருக்கிறன. கொஞ்சம் கூட அச்சமின்றி இன்றைய மாணவ சமுதா யம் காதல் எனும் போர்வையில் இந்த சேஷ்டைகளைச் செய்யும் போது சமூகம் காணாமல் இருப்பது. வருந்தப்ப டும் விடயமே...

இன்றைய சினிமாக்களும் தொலைக் காட்சிகளும் காதலைப் புனிதமாகவும் அதன் சல்லாபங்களை மிக அலாதியாகவும் சித்தரிக்கின்றன. காதல் டூயட் பாடல்கள் பாடாத இளைஞர்களே இல்லை. கூடவும் வானொலி. தொலைபேசி அழைப்புக்களின் பாடல் தெரிவுகளில் மிகக் கூடவே முஸ்லிம்(கள்) (இளைஞர்கள்) இணைந்து (தமது காதலர்களுக்காக) ஒலிபரப்பவும் என்று சொல்வது ஏதோ Fashion ஆக மாறிவிட்டது.

சினிமாக்கள் வீட்டாருடன் எதிர்த்துக் கேள்விகளைத் தொடுக்கக் கூடியளவு இவை பற்றிக் கற்றுக் கொடுக்கிறது. இவற்றைப் பார்க்கும் இளம் சமூகத்தினர் தெளிவுகளைப் பெறாது பரிமாணங்களை உணராது அதன் போலிகளுக்குள் தங்களையும் ஈடுபடுத்தியவர்களாகின்றனர்.

நேசர்கள் உரிய முறையில் குடும்பத்தினரிடம் பேசி இல்லறச் சோலையில் நுழைவதில் இஸ்லாத்தில் தடையில்லை. ஆனால் மாற்றுக் கலாசாரம் போல் தனிமையில் சந்தித்தல், சுற்றித்திரிதல், Phone தொடர்பு என்ற இன்றைய காதல் பரிமாற்றங்கள் ஹறாமாகும். "இஸ்லாம் சட்டதிட்டங்களையும் வரையறைகளையும் மார்க்கத்தின் மூலம் வழிகாட்டிக் கொண்டிருக்கிற வேளை ஹறாமான நடவடிக்கைகளைச் செய்து வாழ்வில் சீரழிவுகளையே இவர்கள் காண்கின்றனர். சட்ட ரீதியாக மனைவியாக்கும் முன்னரே சிலர் வரம்பு மீறியும் நடக்கின்றனர். இக்காதல் கலாசாரத்தால்

1. இணை (ஷிர்க்) ஏற்படும் சந்தர்ப்பம்
2. அந்நிய கலாசாரத் தாக்கம்
3. ஹறாம்களில் ஈடுபடல்

போன்ற மாரக்க ரீதியான விபரீதங்கள் ஏற்படுவது போல் சமூகவியல் ரீதியில்....

1. தீமைகள் அதிகம் பரவுதல் - இப்போர்வையில் பெரும் பகுதியானோர் ஏமாற்றப்படுகிறார்கள்.

2. வாழ்வில் குறைந்த பிரிவினரே இணைகின்றனர் - பல ஆய்வுகளின்படி காதல் திருமணங்களின் மூலமே அதிக விவாகரத்துகள் இடம்பெறுகின்றன. உளவியல் ரீதியில் பல தாக்கங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் போகிற போது இந்த விளைவுகள் இவர்கள் மத்தியில் அதிகமாகிறது.

3. குடும்ப வாழ்வு சிதைதல் - காதல் கொள்பவர்கள் தங்களது வாழ்வின் பெறுமானங்களை உணரும் முன் குடும்பங்களை எதிர்த்துக் கூட பருவக் கோளாறுகளின் காரணமாக குடும்ப வாழ்வின் குதூகலங்களை இழக்கின்றனர்.

4. திருமணத்தை தள்ளிப் போடுதல் - "எந்த சமூகத்தில் திருமணம் சிரமமாகிறதோ அங்கே விபச்சாரம் பெருகும்"

இயற்கை உணர்வுகளின் உந்துதல்களால் மத நெறிகளையும் மீறுகிறான். காதல் தரப்பினர் மத்தியில் ஆண் மகன் சில தாமதங்களை எதிர்கொள்ளல் தொழில் கிடைக்க வேண்டியதற்காக, தனது சகோதரிக்கு மணம் முடித்து பின்னர் தான் மணம் செய்தல் போன்ற தாமதங்கள் ஒழுக்கச் சீரழிவுகளை ஏற்படுத்துகிறது.

காதலில் தோல்வியுற்றதும் நீண்ட தாடியை வைத்து சட்ட ரீதியான திருமணத்தைத் தவிர்ப்பார்களே தவிர ஒழுக்க வாழ்வில் உயர்ந்திருப்பார்கள் எனக் கூறமுடியாது.

எம் சமூகத்தின் கட்டுக் கோப்பும் தனித்துவமும் தகர்க்கப்படுகிறது. சமூக ஒழுங்கு கெடுகின்றது. சமூகத்தில் உளரீதியான பாதிப்புக்களோடு இஸ்லாத்தின் புனிதங்களையும் தொலைத்து முறையற்ற பந்தங்களின் மூலம் சீரழிவுகளையே தொடர்ந்தும் அனுபவிக்கும் சமூகமாய் மாறிக் கொண்டு வருவது பற்றி பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் சமூகம் யாவும் ஒட்டு மொத்தமாய்ச் சிந்திக்காத வரை பிரச்சினைகள் தொடரும்....

இளம் சமூகத்தினர் மத்தியில் Fashion ஆக மாறிவிட்ட அந்நியக் கலாசார நடைமுறைகளை இந்தக் காதல் கலாசரம் மூலம் சமூகத்தில் பரப்பிக் கொண்டு இருக்கும் இளம் சமூகம் நாளைய தலைமுறைக்கு படம்பிடித்துக் காட்டுவதை இன்றைய சமூகத்தினர் காணாமல் இனிமேலும் இருக்க முடியாது.

இஸ்லாத்தின் புனிதம் பேணப்பட ஒட்டுமொத்த சமூகமே பொறுப்புடையதாகும்.

# சமாதானம் ஓர் நிறை தானம்

மனித குலம் மாண்புடன் வாழ சமாதானம் நிறைதானமடைய வேண்டும். சமாதானம் என்பது இரு நபர்களுக் கிடையேயோ, அல்லது இரு குழுக்களுக் கிடையையோ ஏற்படும் பேச்சுவார்த்தை அல்ல. அது ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்படும் பேச்சுவார்த்தைகள். ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே சமாதானத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல் எப்படி பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற போதும் சமாதானத்தின் வாடையைக் கூட நுகர முடியாது.

ஒவ்வொரு ஜீவராசியும் அதன்தன் உணர்வுகளுடன் ஊர்ந்து திரியும் காலம் எப்போது வருமோ அப்போதே சமாதானம் வரும். ஆனால் இன்று நடப்பதோ வேறு. ஒவ்வொரு ஜீவராசியும் தன்னைக் கூட நேசிக்காது பயந்து வாழ்கிறது. தன்னம்பிக்கை என்பது மருந்துக்கும் கூட கிடையாது. மனிதன் தன்நிறைவு கண்டவனாக எண்ணிக் கொள்கிறான். ஆனால் யானை உண்ட விளாங்காய் மாதிரி இருக்கிறான்.

இதற்கெல்லாம் அடிப்படை காரணம் நேசமும் தன்னம்பிக்கையும் இல்லாமையே. எந்த மனிதன் முதலில் தன்னைத் தான் நேசிக்கத் தொடங்குகிறானோ அப்பொழுதே பூரண சமாதானத்தை அடைந்துவிட்டான். அவன் தன்னை நேசிக்கத் தொடங்கிவிட்டால் தனக்கு எந்த விதக் குறையும் வரக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாகச் செயற்படுவான். அத்துடன் தன்னம்பிக்கையோடு முன் னேறுவான். மாறாக தனக்கே மாறு செய்வானாகில் அதன் மூலம் அவன் தன்னை அழித்துக் கொள்கிறான்.

ஒருவன் திருடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இச்செயல் அவன் தன்மீது நேசம் கொள்ளவில்லை என்பதையே வெளிக்காட்டுகிறது. ஏனெனில் இச்செயல் மூலம் திருடன் என்ற அவப்பேறு ஏற்படுகிறது. பிறருடைய உடமையை அபகரித்துவிட்டோமே என்ற மனவருத்தம் உண்டாகிறது. தன்னம்பிக் கையுடன் முன்னேறும் வழிகள் தடைப்படுகின்றன. சமூகத்தால் ஒதுக்கப்படுகிறான். அவனுக்குள்ளே ஆயிரம் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கேள்விக் கணைகள் ஒன்றன் பின் ஒன்றாக அவனைத் தாக்கியழிக்கின்றன. வாழ்க்கையின் இலட்சி யத்தையே இழந்து அவதிப்படுகிறான். மிருகங்களை விட கேவலமாக வாழ்ந்து இறப்பெய்துகிறான். இவ்விழிநிலை எதனால். தன்மீது நேசமில்லாததுதான்.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். உன்னில் உருவாகும் சமாதானம் உலகத்தை உயர்விக்கும். ஏனெனில் மனிதனில் இப்பேர் உலகமே அமிழ்ந்து கிடக்கிறது. இதனை வீரத்திலகம், சமாதானத் தென்றல் அலி (றலி) குறிப்பிடும் போது "ஏய் மனிதனே உன்னைச் சிறிய சடமென்றா எண்ணிக் கொள்கிறாய் இல்லை உனக்குள் இப்பேர் அண்டமே அமிழ்ந்து கிடக்கிறது" என்று.

மனிதன் இக்கருத்தைச் சிந்திக்க வேண்டும். ஒற்றுமை வேற்றுமை என்பது நாம் ஏற்படுத்திக் கொண்ட போலிக் கவசங்கள். மனிதன் தன்னை நேசிப்பதுதான் யதார்த்தமான ஒற்றுமை. தன்னை வெறுப்பதுதான் யதார்த்தமான வேற்றுமை. தன் உணர்வுகளுக்கு இடமளித்து உலகத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். எல்லாச் செயற்பாடுகளும் நேசம், தன்னம்பிக்கை இவ்விரண்டினாலுமே ஏற்படுகிறது.

ஒரு தாவரம் அழகுடன் காட்சி தருகிறது. ஒரு நதி அழகுடன் பாய்கிறது. ஒரு பறவை வானில் வட்டமிடுகிறது. மயில், தோகை விரித்தாடுகிறது. இவையெல்லாம் அந்த ஜீவராசிகள் தன்மீதுகொண்ட அன்பினாலும் தன்னம்பிக்கையினாலுமே ஏற்படுகின்ற மகிழ்ச்சியின் வெளிப்பாடுகள்.

ஏன் அவைகள் தன்னை நேசிப்பதால் தனக்கு எதிரி இல்லையென்ற தன்னம்பி க்கையில் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபடுகின்றன என்று மனிதனும் இந்த நிலையை அடைகின்றானோ! அன்றுதான் சமாதானம் நிறைதானம் அடையும். கீரியும் பாம்பும் ஓர் ஆற்றில் இணைந்து சந்தோசத்துடன் இன்புறும் காட்சி ஏற்படும்.

நூல் :-
**முஸ்லிம்களும் கலவரச் சூழலும்**

நூலாசிரியர் :-
**ஏ.எம். நஜிமுதீன்**

வெளியீடு :-
**இல. 77, டோலை வீதி**
**மாத்தளை.**

அபூ பாத்திமா பர்வின்



பக்கம் **I - X, 1-154** விலை :- **200 /=**

நீதிமன்ற முதலியார் ஏ.எம். நஜிமுதீன் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்புடைய பல்வேறு விடயங்கள் பற்றிய நூலாக்க முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். இவர் அண்மையில் "முஸ்லிம்களும் கலவரச் சூழலும்" எனும் ஆய்வு நூலை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

சுதந்திர இலங்கைக்கு முன்னர் 1815, 1915 ஆகிய காலகட்டங்களில் மூண்டெழுந்த சிங்கள, முஸ்லிம் இனக்கலவரங்களின் பின்னணியை மிக ஆழமாகத் தேடி அதன் உண்மை நிலையை வெளிச்சமாக்கி வைப்பதில் இந்நூல் பாரிய பங்கினை ஆற்றியிருக்கிறது.

கலவரங்களினால் ஏற்படும் அழிவுகளை மட்டும் சேகரித்து வைப்பதில் நிறைவடையாது, அக்கலவரங்களின் தோற்றுவாய்களை அலசி ஆராய்ந்து முன்வைப்பதிலும் இந்நூல் மிகுந்த அவதானங்களைக் கொண்டிருக்கின்றது.

கலவரங்கள் அல்லது முரண்பாடுகள் தோன்றுவதற்கான அடிப்படைகளைச் சரியாகப் புரிந்து கொள்வதன் மூலமே எதிர்காலத்தில் அவ்வாறான பிணக்குகள் தோன்றாதிருப்பதற்கான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அந்த வகையில் நமது நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்த இனக்கலவரங்களின் அடிப்படைகளும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களும் ஆவணப்படுத்தப்படவேண்டிய ஒன்றாகவே இருக்கின்றது.

இத்தேவையின் ஒரு பகுதியை அதாவது 1815,1915 களில் ஏற்பட்ட சிங்கள, முஸ்லிம் கலவரச் சூழலின் யதார்த்தங்களைப் புடம்போட்டு வைப்பதிலும் நமது அடுத்த சந்ததியினர்களுக்கு வரலாற்று ஆவணமாக ஒப்புவிப்பதிலும் இந்நூலாக்க முயற்சி பாரிய பங்கு வகிக்கின்றது. இவ்வாறான முயற்சியில் நமது நூலாசிரியர்கள் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு நம்மவர்கள் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து உதவ வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களில் பெரும் பகுதியினரின் நாட்டுப் பற்றும், சிங்கள மக்களோடும் மன்னர்களோடும் இரண்டறக் கலந்து பேணப்பட்ட உறவு முறைகளும் காழ்ப்புணர்வு கொண்ட சில சிங்களவர்களினால் எவ்வளவு மோசமாக வழிநடாத்தப்பட்டுக் காவு கொள்ளப்படுகின்றது என்பதையும் இந்நூல் நம்முன் ஆதாரபூர்வமாக முன்வைக்கின்றது.

இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்ந்த சிங்கள, பல்வேறு தமிழ் இன மேலாதிக்க கலவரச் சூழல்களும் பகுத்து நோக்கப்பட்டு நூலாக்கப்படவேண்டிய தேவை நமக்கின்றும் இருந்துவருகின்றது. இதனை எதிர்காலத்தில் நம்மவர்கள் செய்து முடிக்கும் ஆர்வமாக ஈடுபடுவதற்கு முன்வரவேண்டும்.

*நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும். -*
*பிரதம ஆசிரியர்*

## அம்பிளாந்துறையின் அழுகுரல்

அது நாள் குறிப்பேட்டில்
1990-07-19 எனக்குறிப்பிடப்பட்டிருந்தது
இஸ்லாமிய வாழ்வு முறையில்
இறுதிக்கடமையென்னும்
ஹஜ்ஜுக்காகச் சென்று
கண்ணீர் நதிகளினூடே
கறைகழுவி
குறைபோக்கி
நிறைவடைந்த மனதுடன்
ஹஜ்ஜாஜிகளும் உறவினர்களும்
வாழும் இடம் நோக்கி
வேன்கள் மூலம் வந்துகொண்டிருக்க
என்னிடத்தில்
இடம்பெறப்போகவுள்ள
இரக்கமற்ற நிகழ்வுகளுக்காக
நான் அழுதுகொண்டிருந்தேன்

அப்போது...
50 அரக்கர்களுடன்
பயங்கரவாதியின் பிராந்தியத்
தலைவனின்
பிணந்தின்னும் அணிவந்து பேசிற்று
அடுத்த அரை மணிக்குள்...
210 ஆண் பெண்ணின்
அவலக்குரல் எழும்பிற்று...
குருதி நதியொன்று
என் குடல்பிளந்து ஓடிற்று!




புனிதமான இரத்தத்தின்
பூரிப்பை
என் உடல் உணர்ந்திற்று
சில நிமிடங்களுக்குள்
மானிடம் சுமந்த ஆத்மாக்கள்
அழுதுபுலம்பி
ஆண்டவனிடம் முறையிட்டபடி
என்னிடம் அடங்கிப் போயிற்று!
சேமிக்காத ஷுஹதாக்களுடன்
என் செய்தியைச் சேர்ப்பிக்க
மறுமையின் வரவு வரை
அழும் நான்
அம்பிளாந்துறையாவேன்

- ஓட்டமாவடி அறபாத் ஸஹ்வி (?)

# புகை பிடித்தலற்ற உலகை நோக்கி.....! (3)

**சுருட்டு :**

சுருட்டு ஆங்கிலத்தில் Cigar என அழைக்கப்படுகின்றது. Cigarro என்னும் ஸ்பானியப் பதத்திலிருந்தே Cigar எனும் பதம் தோன்றியது. Cigarro எனும் பதம் Sikar எனும் மாயா மொழிப் பதத்திலிருந்து பிறந்ததாகும். 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுருட்டு அறிமுகமானது. கியூபா, சுருட்டு உற்பத்திக்கு பெயர் போன நாடாகும். உலகின் பல நாடுகளின் சுருட்டு உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு காலத்தில் சுருட்டு உற்பத்தி ஒரு சிறந்த கைத்தொழிலாக கருதப்பட்டதும் உண்டு. கியூபா, இந்தியா, இலங்கை போன்ற சில நாடுகளில் இது ஒரு நல்ல கைத்தொழிலாக கருதப்படுகின்றது. இன்று சுருட்டுப் பாவிப்பது மேலே நாடுகளில் உயர் மட்ட மக்களின் கௌரவமான பழக்கமாக கருதப்படுகின்றது.



**பீடி:**

பொதுவாக பீடி கையினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. பீடியிலை, புகையிலை, நூல் ஆகிய மூன்று மூலப்பொருட்களினால் இது உற்பத்தி செய்யப்படுகின்றது. Diospyros Melanoxylon எனப்படும் கருந்தும்பி மரத்தின் இலைகள் பீடி செய்ய ஏற்றவை. 1000 பீடி செய்ய 10-16 அவுன்ஸ் புகையிலை தேவை. பீடி உற்பத்தியில் இந்திய உபகண்டமே உயர்ந்து நிற்கின்றது. அங்கிருந்து முக்கியமாக இலங்கை, மாலைத் தீவுகள் ஆகிய நாடுகளுக்கு பீடி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பொதுவாக இந்திய பீடிகளுக்கு கிராக்கி அதிகம். இலங்கையில் பீடிபாவனை பெரும்பாலும் வயோதிபர்கள் மத்தியிலும், வறியோர் மத்தியிலும் காணப்படுகின்றது.

**புகையிலையின் உள்ளடக்கம்**

3800 க்கும் மேற்பட்ட இரசாயனப் பொருட்கள் புகையிலை தாவரத்தில் இருக்கின்றன. சிகரட் உற்பத்தியின் போது இவற்றில் அதிகமானவை நீக்கப்பட்டு விடுகின்றன. என்றாலும் நிகொட்டின் 40.1 வீதம் Carbohydrate 20.2%, Protein 13.1%, Organic Acid 17.5%, Volatile oils 1.5% புகையிலையில் இருக்கவே செய்கின்றன. இது இவ்வாறிருக்க புகையிலையில் வேறு நச்சுப் பொருட்களும் கலந்திருக்கின்றன. Pyrolideine, Methyl pyrotine ஆகியவை அவற்றில் சிலவாகும். இவைகளில் நச்சுத் தன்மை மிகக் கடுமையானது. ஒரு சில துளிகள் மரணத்தை உண்டு பண்ணக் கூடியவை. அவ்வாறே Tar, Acetaldhyde, Acrolein, Phenol, Formaldehyde ஆகிய வேறு சில நச்சுப் பொருட்களும் புகையிலையில் உள்ளன. Acetone, carbon monoxide, Arsenic, Butane என மற்றும் சில நச்சுப் பதார்த்தங்களை புகையிலை உள்ளடக்கியுள்ளது. எனினும், சிகரெட் உற்பத்தியின் போது புகையிலையின் நச்சுத் தன்மை கணிசமான அளவு குறைக்கப்படுகின்றது. 1mg Nicotine ஐ ஒருவர் உள்ளெடுப்பது அவரை கொலை செய்வதற்கு போதுமானதாகும்.

**புகைத்தலினால் ஏற்படும் தீங்குகள்**

புகைத்தல் மூலம் பல்வேறு தீங்குகள் ஏற்படுகின்றன. இவற்றை உடல் ரீதியானவை எனவும், பண ரீதியானவை எனவும், பிறருக்கேற்படக் கூடியவை எனவும் கூறுபடுத்தலாம்.

**உடலுக்கேற்படும் தீங்குகள்**

புகைத்தல் உடலில் ஏற்படுத்தும் பாதிப்பு பற்றி கி.பி. 1604 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் மன்னர் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். இதுவே புகைத்தலின் அபாயம் பற்றி வெளியிடப்பட்ட கன்னிப் பிரசுரமாகும். பின்னர் கி.பி. 1859 இல் பிரான்ஸில் அமைந்துள்ள மரல்ட் பிளயீர் வைத்தியசாலை புகைத்தலுக்கும், நாவு புற்றுநோய்க்கும், உதட்டுப் புற்றுநோய்க்கும், தொண்டை மூளை புற்று நோய்க்கும் சம்பந்தமிருக்கின்றது என்று தெளிவாக செய்தி வெளியிட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து நுரையீரல் புற்று நோய் உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தமைக்கான காரணம் புகைத்தலாகவே இருந்தது. அக்காலப் பிரிவில் மக்கள் இக்காரணத்தை ஏற்றுக் கொள்ள பின்வாங்கினர். கைத்தொழில் முன்னேற்றத்தின் தீய விளைவென்றே அவர்கள் இதனை கருதினர். ஆனால், புகைத்தல் நுரையீரல் புற்றுநோய்க்கு வழி வகுக்கின்றதென்பது இன்று மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி புகையிலையின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 25 வகையான நோய்கள் ஏற்படுகின்றன. உதட்டுப் புற்றுநோய், வாய்ப் புற்றுநோய், தொண்டைப் புற்று நோய், நுரையீரல் புற்று நோய், சுவாசப்பைக் குழாயழற்சி, இருதய நோய், இரத்தக் குழாய்களில் குருதி உறைதல், இரத்தக் குழாய் சுருங்குதல், உணவுக் குழாய்ப் புற்றுநோய், இரைப்பைப் புண், மூத்திரைப்பை வீக்கம், மூத்திரைப்பை புற்றுநோய், சிறுநீரகப் புற்றுநோய், மாரடைப்பு, ஆண்மை குறைதல், குருதிக் குழாய்கள் சிதைவடைதல், உயர் குருதி அழுத்தம் என புகைப்பழக்கம் உண்டு பண்ணும் நோய்களின் பட்டியல் நீண்டு செல்கின்றது மட்டுமல்லாது தொடர் இருமலுடன் கூடிய சளி வெளியேற்றத்தை ஏற்படுத்துகின்றது. இவ்விருமலை மருத்துவர்கள் புகைஞர்களின் இருமல் (Smokers, cough) என்று அழைக்கின்றனர். இயற்கையான பசி இல்லாமலாதல், இருதயம் பலவீனமடைதல் உடற் பலம் குன்றுதல், பற்கள் மஞ்சள் நிறமடைதல், சுவைப்புலன் கெடல், சமிபாட்டுக் கஷ்டம், உணவு மீதான பற்றுக் குன்றல், இதயத் துடிப்பில் ஒழுங்கீனமேற்படல், உதடு கருமையடைதல், முகச் சுருக்கமேற்படல், பற்கள் அழுக்கடைதல், சுவாசக் கஷ்டம், நுகர்ச்சிப் புலன் குன்றல், பார்வையில் பலவீனமேற்படல் உடம்பில் அசாதாரண அலுப்புத்தட்டல், உடல் வளர்ச்சி தடைபடல், விவேகத் தரம் குறைதல், கருச்சிதைவு, ஆளுமை இல்லாமலாதல் என வேறு பல நோய்கள் புகைத்தலினால் ஏற்படுகின்றன.

எச்.அப்துல் நாசர் (ரஹ்மானி)
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் ஹர்த்தாலும் முஸ்லிம்களும்

திடீரென இரவோடு இரவாக ஹர்த்தால் என செய்திகள் வரும். இரண்டு மூன்று தினங்கள் தொடர்ச்சியாக ஹர்த்தால் மேற்கொள்ளப்படும். வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து, ஆஸ்பத்திரி, பாடசாலைகள் அனைத்தும் செயல் இழந்துவிடும். இந்நிலை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின் வடக்கு கிழக்கில் சகஜமாகிவிட்டது. இவ் ஹர்த்தால்களை மாதத்திற்கு இரண்டு மூன்று தடவைகளில் வடக்கு கிழக்கு மக்கள் சந்திக்க வேண்டி உள்ளது.

யார் ஹர்த்தால் போடுகிறார்கள்? எதற்காகப் போடுகிறார்கள் என்பது பெருமளவில் மர்மமாகவே மக்களுக்கு இருக்கும். ஒரு துண்டுப்பிரசுரம் மூலம் ஹர்த்தால் அமுலுக்கு வந்துவிடும். இவ் ஹர்த்தாலை மேற்கொள்பவர்கள் ஏதாவது ஒரு பெயரை துண்டுப்பிரசுரத்தில் அச்சடித்து விநியோகித்து விடுவர். கடந்த இரண்டு தினங்களாக (திங்கள், செவ்வாய்) மட்டக்களப்பு அம்பாரை மாவட்டங்களில் நடைபெற்ற ஹர்த்தாலை நாம் பார்ப்போமானால் இவ் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தோர் "மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரும் மன்றம்" என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. யார் இந்த மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரும் மன்றம் என்பது யாருக்குமே தெரியாது. ஆனால் இவ் ஹர்த்தால்களை புலிகளே பின்னால் நின்று செய்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

## ஏன் புலிகள் நேரடியாக ஹர்த்தால் மேற்கொள்ள அழைப்பு விடுவதில்லை?

புலிகள் நேரடியாக ஹர்த்தால் மேற்கொள்ள அழைப்புவிடுக்காது வெறுமனே அநாமேதய பெயர்களின் ஊடாக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுப்பது புலிகளின் உள் அரசியல் நோக்கத்தை சார்ந்திருக்கிறது. மக்களாகவே ஹர்த்தாலை நடாத்துவதாகவும், இதனூடாக மக்கள் போராட்டம் ஒன்று நடைபெறுவதாகக் காட்டிக் கொள்வதுமே புலிகளின் நோக்கமாகும். ஒரு போராட்டக் காலத்தில் வெகுசனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்பதில் எமக்கு எந்தவிதமான கருத்து பேதமும் இல்லைதான். ஆனால் இவ்வெகுசனப் போராட்டத்தின் ஊடாக தொடர்ந்தும் மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழிப்பது, மக்களைத் துன்பத்திற்குள்ளாக்குவது குறித்தே நாம் இங்கு எழுத வேண்டி உள்ளது. அதிலும் குறிப்பாக முஸ்லிம்கள் தொடர்ச்சியான இவ் ஹர்த்தால்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவ் ஹர்த்தால் தொடர்பாக நமது அரசியல் தலைமைகள் எதுவுமே பேசுவதில்லை; நமது மக்கள் மிக மோசமாக இவ் ஹர்த்தால் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## ஹர்த்தாலும் முஸ்லிம்களும்

தமிழர் தரப்பால் குறிப்பாக புலிகளால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் ஹர்த்தால் செயற்பாட்டின் போது முஸ்லிம் பிரதேசங்களிலும் ஹர்த்தாலை மேற்கொள்ள முஸ்லிம் மக்கள் பலவந்தமாக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க மறுக்கும்போது ஆயுத முனையில் அச்சுறுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு முஸ்லிம் மக்களிடமும், இந்த ஹர்த்தாலுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்வி எழுந்து கொண்டே வருகிறது. முஸ்லிம்களுக்கு சம்பந்தமில்லாத கோரிக்கைகளுக்காக முஸ்லிம்களும் ஹர்த்தால் செய்ய வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவது மிகப்பெரும் ஜனநாயக மீறலாக உள்ளது.

மக்களுடைய நிலைப்பாடுகளை வெகுஜன அரங்குக்கு கொண்டு வருவதற்கு ஹர்த்தால் செய்யப்படுகிறது என்கிற ஒரு வாதத்தை நாம் பரிசீலிப்போமாயின், கடந்தகாலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின் முஸ்லிம் மக்களால் மேற்கொள்ளப்பட்ட இரு ஹர்த்தால் சம்பவங்கள் புலிகளால் மோசமாக அடக்கப்பட்டதையும் அதன்பின்னால் எழுந்த முஸ்லிம்கள் மீதான அழிவுகளையும் நாம் கண்டோம்! வாழைச்சேனை சம்பவம், மூதூர் சம்பவம் நமக்கு உதாரணங்களாகும்.

உண்மையில் முஸ்லிம்கள் இவ் ஹர்த்தாலை தவிர்க்க முடியாத நிலையிலேயே மேற்கொண்டனர்.



புலிகளால் தொடர்ந்தும் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதும், கடத்தப்படுவதும், முஸ்லிம்களிடம் கப்பம் வாங்கப்படுவதும் நடந்து வந்தது. சமாதான காலத்திலும் முஸ்லிம்கள் மிகமோசமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தனர். இந்நிலைமைகளை தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கமோ, முஸ்லிம் அரசியல் தலைமைகளோ எவ்விதமான காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆகக் குறைந்தது இச் செயற்பாடுகளை கண்டிக்கவும், பகிரங்கப்படுத்தவும் கூட அவர்கள் முன்வரவில்லை. இந் நிலையில் முஸ்லிம் மக்களுக்கு இவ்வடக்குமுறையையும் அத்துமீறல்களையும் உலகுக்கு தெரியப்படுத்துவதற்கு ஒரேயொரு வழி வெகுஜன போராட்டமான ஹர்த்தாலை மேற்கொள்வதுதான்.

எவ்விதமான திணிப்புமின்றி இயல்பாகவே மக்கள் இவ் ஹர்த்தாலை நடாத்தினர். இவ் ஹர்த்தால் அழைப்பை அடுத்து புலிகள் தங்களது மூர்க்கத்தனத்தை முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விட்டனர். நமது அரசியல் தலைமைகளும் முஸ்லிம்கள் ஹர்த்தால் மேற்கொண்டதை(குறிப்பாக ஹக்கீம் தலைமை) சமாதானத்தை குலைக்கும் தீய சக்திகளின் வேலை இதுவென புலிகளுக்கு ஒத்து ஊதியது. முஸ்லிம் மக்களின் நியாயமான இவ்வெகுஜனப் போராட்டம், புலிகளினால் மோசமாக நசுக்கப்பட்டதுடன் பெரும் இரத்தக் களறியிலும் போய் முடிந்தது.

## முஸ்லிம்களின் வெகுஜன போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதே புலிகளின் நோக்கம்!

முஸ்லிம்களுக்கு சம்பந்தமில்லாத புலிகளின் கோரிக்கைகளுக்கு முஸ்லிம்கள் எவ்வித நிபந்தனையுமில்லாமல் ஆதரவு வழங்க வேண்டும், வர்த்தக நிலையங்களை மூட வேண்டும், பாடசாலைகள், காரியாலயங்களை மூட வேண்டும், நமது பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கையை ஸ்தம்பிதமடையச் செய்ய வேண்டும். ஆனால் முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு முஸ்லிம்கள் வெகுஜனப் போராட்டங்களை நடாத்தக் கூடாது. அப்படி நடாத்த முன்வந்தால் மிக மோசமாக அடக்கி ஒடுக்குதல் வேண்டும்.

முஸ்லிம்களால் நடாத்தப்பட்ட இரண்டு ஹர்த்தால்களில் (புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்) தமிழ் மக்களின் பிரதேசங்களில் இவ் ஹர்த்தாலை நடாத்த முஸ்லிம்கள் கோரவே இல்லை. தமிழ் மக்களை ஹர்த்தால் செய்ய முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கவும் இல்லை. முஸ்லிம் பிரதேசங்களில் இவ் ஹர்த்தால் நடாத்தப்படுவதே முஸ்லிம்களின் நோக்கமாயிருந்தது. வேலிதாண்டிய புலிகளால் முஸ்லிம்கள் ஹர்த்தால் செய்வதை சகித்துக்கொள்ள முடியவில்லை.

## புலிகளின் நியாயத்தைப் பாருங்கள்!

புலிகளின் ஒவ்வொரு செயற்பாடும் முஸ்லிம்களின் அனைத்து உரிமைகளையும் திட்டமிட்டு நசுக்கி அழிப்பதிலேயே குறியாக இருக்கின்றன என்பதை நமது மக்கள் அறிவர். புலிகளுடைய கோரிக்கைக்கு நாம் ஆதரவு வழங்க வேண்டும் என புலிகள் வற்புறுத்துகின்றனர். ஆனால் நாமோ நமது கோரிக்கைகளுக்கு புலிகள் ஆதரவு வழங்கத் தேவையில்லை, எங்களது கோரிக்கைகளை முன்வைப்பதற்கான நியாயத்தை, எங்கள் உரிமையை புரிந்து கொள்ளுங்கள் என்றே எமது மக்கள் வேண்டுகின்றனர். எமது மக்களின் உணர்வுகளைக்கூட புலிகள் ஜீரணிக்கத் தயாராக இல்லை. முஸ்லிம்களுக்கு தங்களது அரசியல் உரிமையை உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான உரித்து இல்லை என்பதை இந்த மனோபாவம் நமக்கு பலதடவைகள் நிரூபித்துள்ளன புலிகளின் நிலைப்பாடுகளால்....

வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசம், அதற்கு ஒரே அரசியல் தலைமை புலிகளே - அனைத்தையும் தீர்மானிப்பதற்கும் அனைத்தையும் நிர்வகிப்பதற்கும் தங்களுக்கே அதிகாரம் உள்ளது. இங்கு முஸ்லிம்கள் அவர்களுடைய தனித்துவம், அவர்களுடைய அரசியல், சமூக உரிமை என்பதற்கே இடமில்லை, என்பதுதான் இதன் வெளிப்பாடாகும்.

தொடரும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும், வடக்கு கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் மீண்டும் மீண்டும் ஹர்த்தால் செய்யுமாறு முஸ்லிம்களை நிர்ப்பந்திக்கும் புலிகளின் அரசியல் இராணுவ நெருக்கடியை தவிர்ப்பதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஹர்த்தால் செயற்பாட்டால் மிக மோசமாக பாதிக்கப்படும் முஸ்லிம் மக்களுக்கு உடனடி நிவாரணம் வேண்டும் என்பதே நமது மக்களின் இன்றைய மனோ நிலையாகும்.

---

*எனது தொழில் யாசகம். வீடு வீடாக ஏறி இறங்குவதில்லை. வாகனம் வாகனமாக ஏறி இறங்குவேன். எங்களுக்கென்று சில தொழில் தர்மங்கள் உண்டு. ஒரே வேளையில் இரு வெவ்வேறு யாசகர்கள் ஒரே பஸ்ஸினுள் ஏறி பயணிகளுக்குத் தொல்லை கொடுப்பதில்லை. அதாவது ஏற்கனவே ஒருவர் வாகனத்தில் யாசித்துக் கொண்டிருந்தால் இன்னொருவர் யாசிப்பதற்கு அதே வாகனத்தில் ஒருபோதும் ஏறுவதில்லை. இது நாம் கடைப்பிடிக்கும் கட்டாய விதி; எம்மிடையே வழக்கிலிருந்து வரும் எழுதப்படாத சட்டம். ஏனென்றால் ஒரு வாகனத்தில் ஏக காலத்தில் இருவர் யாசித்தால் மக்களுக்கு சலிப்புத் தட்டிவிடும். மேலும் எங்கள் வருமானமும் பாதிக்கப்படும். அன்றும் வழமைபோல் ஒரு பஸ்ஸினுள் முன் வாசல் வழியால் ஏறினேன். எனது ஏழ்மையைச் சொல்லிக் கதறி யாசிக்கலானேன். அப்போது அங்கே எனக்கோர் ஆச்சரியம் காத்திருந்தது.*

*பின்னால் ஒரு "பிச்சைக்காரன்" ஏறி அவனும் இரந்துகொண்டிருந்தான். இதேதடா வம்பாப் போயிற்று. ஒரே வாகனத்தில் இரண்டு யாசகர்கள். ஒரே சிம்மாசனத்தில் இரண்டு ராஜாக்களா? எமது தொழில் தர்மத்துக்கே இழுக்காயிற்றே. விதிமுறைகள் தெரிய வேண்டாம். தொழிலுக்குப் புதியவனோ? அவனை நிமிர்ந்து பார்த்தேன். எனக்கே ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம். அவனோ வித்தியாசமான பிச்சைக்காரன். "நீ, யார்?" விழிகளால் வினவினேன்.*

# BIG MATCH

-உஸ்மான் மரிக்கார்-



நான் கந்தல் ஆடையில்
நீயோ பளபளக்கும் பாடசாலைச் சீருடையில்.
எனது காலில் தேய்ந்த ரப்பர் செருப்பு
உனது காலிலோ மினுமினுக்கும் விலையுயர்ந்த சப்பாத்து.
எனது நீண்டு வளர்ந்த தலைமயிரோ எண்ணையைக்கண்டு
எத்தனையோ நாள்.
உனது தலை முடியோ அழகாக வெட்டப்பட்டு, எண்ணை
தடவி, சீராகச் சீவப்பட்டிருக்கிறது.
என்னிடம் வியர்வை நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது.
உன்னிடமோ நாசியைத் துளைக்கும் மெல்லிய நறுமணம்
இழையோடிக் கொண்டிருக்கிறது.
என் கையில் பழைய தகரக் குவளை
உன் கையிலோ புத்தம் புதிய கல்லூரித் தொப்பி
நான் தேசிய பாஷையில் இரந்து கொண்டிருக்கிறேன்.
நீயோ சர்வதேச பாஷையில் கறந்து கொண்டிருக்கிறாய்
நான் மழைக்குக் கூடப் பள்ளிக் கூடப் பக்கம் ஒதுங்கவில்லை
நீயோ கொழும்பில் கொடிகட்டிப்பறக்கும் பாடசாலையில்
உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாய்.
நான் சேரியில் பிறந்து வளர்ந்த ஏழை மகன்
நீயோ செல்வச் செழிப்பில் திளைக்கும் சீமான் வீட்டுப்
பிள்ளை
நான் எனது அத்தியாவசியத் தேவைக்காக யாசிக்கிறேன்
நீயோ உனது ஆடம்பரத் தேவைக்காக யாசிக்கிறாய்
அதாவது நான் கூழ் குடிப்பதற்காக யாசிக்கிறேன்
நீயோ குடித்துக் கும்மாளமிடுவதற்காக யாசிக்கிறாய்
எனது தகரக் குவளையில் சில்லறைகளைப் போடுவதற்குக்
கூட இந்தச் சீமாட்டிகள் யோசிக்கிறார்கள்.
ஆனால் தலைகீழாக ஏந்தப்பட்ட உனது தொப்பியிலோ
நொடிப்பொழுதில் யோசிக்காமல் நோட்டுக்களைப்
போடுகிறார்கள்
நான் 'உங்களுக்குப் புண்ணியமுண்டாகட்டும்' என்கிறேன்
நீயோ 'தங்யூ வெரி மச்' என்கிறாய்
பார்த்தாயா நண்பனே! உனக்கும் எனக்கும்தான் எத்தனை
எத்தனை வித்தியாசங்கள்
நான் வடதுருவம் எனில்
நீ தென் துருவம்

ஆயினும் உனக்கும்
எனக்கும் முக்கியமான
ஒற்றுமைகள் உள்ளன.
இருவரும் யாசிக்கிறோம்
அதுவும் ஒரே காரணத்துக்காக
Big Match இற்காக யாசிக்கிறாய்
நானும் Big Match இற்காகத்தான் யாசிக்கிறேன்.
உனது Big Match உனது கல்லூரி வளவில்
நடைபெறுகின்றது
எனது Big Match எனது வயிற்றுக்குள் நடைபெறுகிறது
உனது Big Match ஐ நான் கண்டு ரசித்ததில்லை
எனது Big Match ஐ நீ அனுபவித்துத் துடித்ததில்லை
ஆயினும் நண்பனே!
எனக்கு ஒன்று மட்டும் விளங்கவேயில்லை
மொத்தத்தில் இருவரும் பிறரிடம் பிச்சை கேட்கிறோம்
உன்னையோ ஒரு கனவானாய்க் காணுகிறார்கள்
ஆயினும் என்னை மட்டும் ஒரு யாசகனாய்ப் பார்க்கிறர்கள்
எனக்குத் தருவதைப் 'பிச்சை' என்கிறார்கள்
உனக்குத் தருவதை மட்டும் Big Match என்கிறார்கள்.
அதுதான் எனக்குப் புரியவே இல்லை.
சரி நண்பனே!
மீண்டும் அடுத்த வருசம் இன்னொரு பஸ்ஸில் சந்திப்போம்.

# சொன்னார்கள்...!



புலிகள் இடைக்கால நிர்வாக அலகு கேட்பது போல் எமக்கும் தனியான இடைக்கால அலகு வேண்டும். நாங்கள் பாண்டிருப்பையோ களுவாஞ்சிக்குடியையோ ஆள்வதற்கு இவ் இடைக்கால நிர்வாகத்தைக் கேட்கவில்லை. முஸ்லிம்கள் முஸ்லிம்களால் ஆளப்படுவதற்கே இடைக்கால சபையைக் கேட்கிறோம். தனியான் இடைக்கால சபையைப் பெறுவதே இன்று எமது போராட்டமாகும்.

ஹரிஸ் எம்.பி.

வரலாற்று ரீதியாக 1803 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த ஐரோப்பிய படைகளின் பீரங்கிகளை வன்னி மன்னன் பண்டார வன்னியன் கைப்பற்றியதாக வரலாறு கூறுகிறது. அதே மண்ணில் எமது தலைவரின் தலைமையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பீரங்கிகளை நாம் கைப்பற்றினோம். இப்பீரங்கிகளைக் கொண்டே ஸ்ரீலங்கா அரசின் இராணுவத்தை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓயாத அலைகள் இரண்டு, ஜயசிக்குறு எதிர்ச் சமரில் பாவித்து எதிரிகளை தோற்கடித்தோம்.

முல்லைத் தீவு இராணுவ முகாம் தாக்குதல் வெற்றி விழாவில், கேணல் தீபன்.



ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கும் வெவ்வேறு குறிக் கோள் கள் இருப்பதால் அரசியல் ரீதியில் இடைக்கால சபை பிரச்சினையை அணுகாமல் முஸ்லிம் சமூகம் என்ற நோக்கில் அணுகப்படல் வேண்டும். முஸ்லிம் சமூகத்தை வடக்கு, கிழக்கு என மட்டும் வரையறுக்காமல் பரந்துபட்ட அடிப்படையில் அணுகுதல் வேண்டும். இடைக்கால சபை யோசனையில் முஸ்லிம்கள் பற்றி சிபார்சு செய்யும் விடயம் முஸ்லிம் புத்திஜீவிகள் கல்விமான்க ளிடம் விடப்பட வேண்டும்.

முன்னாள் அமைச்சர் பௌஸி



அதிகாரம் சமமாக வழங்கப்பட்டாலே ஜே.வி.பி சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைக்க உடன்படும். இலட்சியங்களுக்காக உயிர் நீத்த எமது தோழர்களின் கனவு நனவாக வேண்டும். அதை விடுத்து சுதந்திரக் கட்சியுடன் வெறுமனே கூட்டணி அமைக்க மாட்டோம். கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருகின்றன. ஆனால், பல்வேறுப்பட்ட விடயங்களில் இதுவரையிலும் இணக்கம் காண முடியாதுள்ளது.

ஜே.வி.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வஜன வாக்கெடுப்பு என்ற வெளிச்சத்தை நம்பியே அன்று நாம் மௌனமாக இருந்தோம்!

சமகால முஸ்லிம் அரசியலில் தீவிரமாக கண்காணிக்கப்படுபவராகவும் சர்ச்சைக்குரியவராகவும் உள்ள அமைச்சர் அதாஉல்லா அவர்களுடனான நேர்காணல் இது. இடைக்கால சபை தொடர்பான அரசியல் நிலைப்பாடு, வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தில் இணைந்து பங்காற்றாமை, கிழக்கை பிரிக்க வேண்டும் என்ற அவரது அரசியல் குரல் ஆகிய இம் மூன்று விடயங்கள் தொடர்பாக மட்டுப்படுத்தி, அவருடன் உரையாடிய கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்!

சந்திப்பு - பாதுஷா

மூ அதிகமாக இன்று பேசப்பட்டு வரும் இடைக்கால சபை தொடர்பாக நீங்கள் மௌனமாக இருப்பது போல் தெரிகிறது. இது தொடர்பான உங்கள் நிலைப்பாட்டை இதுவரை வெளிப்படுத்தவில்லை. ஏன் இந்த மௌனம்?

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விடயத்தில் நாங்கள் தெளிவான நிலைப்பாட்டில் இருக்கிறோம். நாங்கள் கடந்த காலத்தில் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தபோது - அப்பாராளுமன்ற பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க எங்களுடன் 5 விடயங்களில் உடன்பாட்டுக்கு வந்தார். அந்த ஐந்து அம்ச உடன்பாட்டில் மிகப்பிரதானமானது இடைக்கால சபை ஒன்று வழங்கப்படும்போது வடக்கு கிழக்குக்கு தனித்தனியாக இடைக்கால சபை வழங்கப்படும் அல்லது முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை இணைத்து தனியாக இடைக்கால நிர்வாகம் வழங்கப்படும் என்ற கொள்கை உடன்பாட்டை ரணில் விக்ரமசிங்க எங்களுக்கு தந்து உள்ளார். இடைக்கால சபை தொடர்பான நிலைப்பாட்டில் நாங்கள் இந்த இரண்டு விடயங்களிலும் மிகத் தெளிவாகவே உள்ளோம். இடைக்கால சபை ஒன்று அமுலுக்கு வரும்போது வடக்கு கிழக்குக்கு தனித்தனியாகவே இருக்க வேண்டும் அல்லது முஸ்லிம் பிரதேசங்களை இணைத்து தனியான இடைக்கால சபை வழங்கப்படல் வேண்டும். இதில் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லை. என்னைப் பொறுத்தவரை வடக்கு கிழக்குக்கு தனித்தனியான இடைக்கால சபையே வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவுடன் உடன்பாடு காணப்பட்ட ஐந்து அம்சங்களில் பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் தனிக்குழுவாக பங்குபற்ற வேண்டும் என்ற விடயமும் பிரதானமாக உள்ளது. இப்போது அரசாங்கம் அதனை வலியுறுத்த தொடங்கி உள்ளது. இதுபோல்தான் இடைக்கால சபை விவகாரமும். வடக்கு கிழக்கை இணைத்து புலிகளுக்கு வழங்கப்படும் இடைக்கால சபை என்ற விடயத்தில் எமக்கு எவ்வித உடன்பாடும் கிடையாது. இதில் ரணில் விக்ரமசிங்க எங்களுக்கு எழுத்து மூலமான வாக்குறுதியைத் தந்துள்ளார்.

இடைக்கால சபை விவகாரம் இப்போது முக்கியமானது என்பதை விட; வடக்கு கிழக்கு பிரிக்கப்படுவதே முக்கியமாக உள்ளது. ஏனெனில் இடைக்கால சபை ஒரு தற்காலிகத் தீர்வுதான். ஆனால் வடக்கு கிழக்கு பிரிப்பு என்பதுதான் நிரந்தரத் தீர்வுக்கான தற்காலிகத் தீர்வு என நான் நினைக்கிறேன். இந்த அடிப்படையில்தான் வடக்கு கிழக்குக்கு தனித்தனியான இடைக்கால சபை என நாங்கள் கோருகிறோம்.

மூ மிக அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு பிரிப்பைப்பற்றி மிக வெளிப்படையாக உரத்துப்பேசுகிறீர்கள். இது எந்தளவு நமது முஸ்லிம் மக்களின் வாழ்வுக்கு சாதகமாகும்?

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு இரவோடு இரவாக இணைக்கப்பட்டது. அதற்கு முதல் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட மாகாணங்களாக இருக்கவில்லை என்பது தெரிந்ததுதான். வடக்கு கிழக்கை இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட தற்காலிகமாகவே இணைத்திருந்தார்கள். சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் கிழக்கு மக்களிம் ஆணை கேட்க வேண்டுமென ஒரு வருடகால அவகாசமும் இருந்தது. 15 வருடங்களாக இச் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவேயில்லை. இப்போது வடக்கும் கிழக்கும் ஏதோ நிரந்தரமாகவே இணைக்கப்பட்டுவிட்டது போல் பலரும் பேசத்தொடங்கி உள்ளனர். வடக்கு கிழக்கை இணைக்கும்போது கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் விருப்பத்தை யாரும் கேட்கவில்லை. மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் "நிபந்தனையுடனான இணைப்பு" என்றே சொல்லிவந்துள்ளார். சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் இணைப்புக்கு ஒரு போதுமே ஆதரவு இல்லை. கிழக்கில் வாழும் தமிழ் மக்களில் கணிசமானோர் இணைப்பை விரும்பவில்லை. இதனை தனிப்பட்டவகையில் பல தமிழ் நண்பர்கள் என்னிடமே கூறி உள்ளனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு என்ற ஒரு வெளிச்சத்தை நம்பியே நாம் அன்று மௌனமாக இருந்தோம்.! இன்று எங்கள் கண்களையே குருடாக்கப்பார்க்கிறார்கள். வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைக்க முயற்சிப்பது கிழக்கில் வாழும் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே நான் கருதுகிறேன். இன்று நம்மிடையேயும் ஒரு சிலர் தங்களை புலிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக உயிருக்குப் பயந்து வடக்கு கிழக்கு இணைந்துதான் இருக்கவேண்டுமென ஏதேதோ உளருகிறார்கள்.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் ஒப்புதலுடன் சந்திரிகா பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்த தீர்வுத்திட்ட யோசனையில் கூட கிழக்கில் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களிடம் வடக்குடன் கிழக்கு இணைந்திருக்க வேண்டுமா என்கிற அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துதல் வேண்டுமெனவும் அவர்கள் இணைப்பை விரும்பவில்லை எனில், கிழக்கு தனியாக பிரிக்கப்படல் வேண்டுமெனவும் வலிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏன் கிழக்கு மாகாணம் தனியாக இருக்க வேண்டும் எனபதறகு நியாயமான சான்றுகள் எம்மிடம் உள்ளன. ஏன் இணைந்திருக்க வேண்டும் என்பதற்கு ஒரு சான்றைத்தானும் காணோம்.

இந்தக் காலத்திலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்பும் புலிகள் முஸ்லிம்கள் மீது நடாத்திவரும் அட்டூழியங்களுக்குப் பிறகும் வடக்கு கிழக்கு இணைந்திருக்க வேண்டுமென நினைப்பது முஸ்லிம் மக்களை அடிமைப்படுத்தும் நோக்கத்தை உடையது. இந்த நோக்கம் உள்ள சக்திகளை நேரடியாக எதிர்கொள்வதற்கு நான் தயாராகிவிட்டேன் என்பதையே நான் வடக்கு கிழக்கு பிரிக்கப்படல் வேண்டுமென மிகப்பகிரங்கமாகவே சொல்வதில் இருந்து தெரிந்து கொள்ள முடியும்! ரஊப் ஹக்கீமை நாங்கள் நிராகரித்ததும் இந்த அரசியல் உறுதியில்தான். எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். அடிமைகளாக அல்ல; இதனை யாரிடமும் சொல்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம். பிரபாகரனுக்கும் ஹக்கீமுக்கும் கூட இதைத்தான் நாம் சொல்கிறோம். கடந்த காலத்திலும் சொல்லி வந்திருக்கிறோம்.!

அடுத்து இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின் ஏற்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபை நிர்வாகம்! இந்த நிர்வாகத்தின் கீழ் முஸ்லிம்களுக்கு ஏதும் நீதி நடைபெற்றிருக்கிறதா? மிகப்பெரும் அநீதிகளை கண்களை மூடிக்கொண்டே செய்து வருகின்றனர். நிரந்தரமாக வடக்கு கிழக்கு இணைந்தால், இணைந்த வடக்கு கிழக்குக்கு அதிகாரம் வந்தால் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் கதி என்ன? நிரந்தர அடிமைகளாக முஸ்லிம்கள் மாற்றப்பட்டு விடுவார்கள்.

கிழக்கு மாகாணம் என்பது முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் ஒன்றாய் இணைந்து வாழும் மாகாணமாகும்.



அந்த இணைவு வாழ்க்கை மூவின மக்களுக்கும் அவசியமானதாகும். வடக்கு கிழக்கு இணைக்கப்படின் ஏற்படும் தமிழ்ப் பேரினவாதத்தால் முஸ்லிம்களும் சிங்களவர்களும் மோசமாக நசுக்கப்படுவர். இதனால் பாரதூரமான சண்டைகள் முரண்பாடுகள் இம்மூவினங்களிடையேயும் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்த்து தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் இணைந்து வாழ்வதற்கான உகந்த சூழல் வடக்கு கிழக்கு பிரிக்கப்படுவதன் ஊடாகவே சாத்தியப்படும்.

அத்துடன் கிழக்கு பிரிக்கப்படுவதால் மட்டுமே முஸ்லிம்களின் அரசியல் பலம் தக்கவைத்துக் கொள்ளப்படும். இப்போதே கருணா போன்றவர்கள் கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிக்க வேண்டுமென பகிரங்கமாகவே வெளிநாடுகளில் பேட்டி கொடுக்கின்றனர். முஸ்லிம்களிடம் பொருட்கள் வாங்க வேண்டாமென தடை விதிக்கின்றனர். வாழைச்சேனை, மூதூர்ப் பிரதேசங்களில் முஸ்லிம்களை புலிகள் படுகொலை செய்து வருகின்றனர். இதற்குப் பிறகும் முஸ்லிம்கள் கிழக்கு, வடக்குடன் இணைந்திருக்க வேண்டுமென விரும்பவேண்டும் என எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்?

கிழக்கு மாகாணம் தனியே பிரிவதனால் மட்டுமே கிழக்கில் வாழும் மக்களுக்கு நிம்மதியான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்கும். கிழக்கு பிரிக்கப்படல் வேண்டுமென்ற எமது மக்களின் கோரிக்கையை அமுல்படுத்துவதுதான் கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் பிரதான கடமையாகும்.

மூ வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தில் ஏன் நீங்கள் இதுவரை இணைந்து பங்காற்றவில்லை?

இப்பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் என்பது ஒரு வெறும் ஏமாற்று செயல்தான்; ஏனெனில் அடிப்படையில் முஸ்லிம்களின் நலனுக்காக அது உருவாக்கப்படவில்லை. அதற்குப்பின்னால் பல்வேறுபட்டவர்களின் தனிப்பட்ட அரசியல் இலாபங்கள் உள்ளன. பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் அங்கம் வகித்தாலும் முஸ்லிம்களின் விடயத்தில் மிக முரண்பாடான விசயங்களை அவர்கள் வலியுறுத்துகின்றனர். வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வொன்றியத்தில் அங்கம் வகிக்கவில்லை. அவர்களின் ... வரிக்கை ...

முரண்பாடானவை. உதாரணமாக இந்த இடைக்கால சபை விவகாரத்தை எடுத்துக் கொண்டால் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் சொல்வது என்ன? ஹிஸ்புல்லாஹ் சொல்வது என்ன? ஹக்கீமின் கீழ் இணைந்து பணியாற்றுவதற்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் அவசியமில்லை. ஏனெனில் ஹக்கீமின் தலைமை என்பது முஸ்லிம்களை முற்றாக மாற்றானிடம் அடகுவைத்த தலைமையாகும். இப்போக்கை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்பதற்காகவே ஹக்கீமுக்கு எதிராக செயற்பட வேண்டி வந்தது. இதுவரை ஏதாவது உருப்படியான வேலையைச் செய்திருக்கிறார்களா? அடுத்த தேர்தலுக்காக என்ன செய்யலாம் என்பதே இன்றைய அவர்களின் யோசனையாக உள்ளது. இப்படி பல்வேறு வழிகளில் முஸ்லிம்களை ஏமாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து அவ்வொன்றியத்தில் எம்மால் பணியாற்ற முடியாது என்பதற்காகவே நாம் அதில் கலந்து கொள்ளவில்லை. என்கிறார் அமைச்சர் அதாவுல்லா.

---

# ஃபீதாயின் ரச்சேல்

அமெரிக்க இராணுவம் வானத்திலிருந்து ஈராக் மக்களைப் படுகொலை செய்யத் தொடங்குவதற்கு நான்கு நாட்கள் முன், அந்தக் கோழைத்தனத்தை நிராகரிக்கும் வீரமாக, அந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான தோழமையாக, பாலஸ்தீன மண்ணில் ரத்தம் சிந்தினாள் ஒரு அமெரிக்கக் கல்லூரி மாணவி.

மார்ச் 16 பாலஸ்தீன மக்களின் தாயகத்தை ஆக்கிரமி க்கும் யூத வெறி பிடித்த இஸ்ரேல் இராணுவத்தின் புல்டோசர், ரச்சேல், கோரி என்ற அந்த வீராங்கணையின் மீது ஏற்றி இறங்கியது.

ரச்சேல் சர்வதேச ஒற்றுமை இயக்கம் என்ற அமைப்பின் உறுப்பினர். பாலஸ் தீனத்தை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல் அரசையும் அதற்குத் துணைநிற்கும் அமெரிக்காவையும் எதிர்த்துப் போராடும் இந்த அமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் அமெரிக்க பிரிட்டிஷ் இளைஞர்கள்.

ரச்சேல் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனைச்சேர்ந்த ஒரு கல்லூரி மாணவி. "பயங்கரவாதத்திற்கெதிரான போர்" என்ற பெயரில் அமெரிக்கா நடத்திவரும் இராணுவ வெறியாட்டங்களை எதிர்த்துப் போராடுவதில் அவள் முன்னணியில் நின்றதாக ரச்சேலை நினைவு கூறுகிறார்கள் அவளது ஆசிரியர்கள்.

குறிப்பாக பாலஸ்தீன மக்களின் துயரத்தை தன் சொந்தத் துயரமாகவே கருதினாள் ரச்சேல். ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமிக்கும் தருணத்தில், உலகின் கவனம் அங்கே திரும்பியிருக்கும் போது, பாலஸ்தீனத்தை இஸ்ரேல் விழுங்கி விடும் என்று அவள் அஞ்சினாள்.

அதைத் தடுப்பதும் தம் கடமை என்று கருதிய ரச்சேலும் அமெரிக்க பிரிட்டிஷ் இளைஞர்கள் ஏழு பேரும் இரண்டு மாதங்களுக்கு முன்பே பாலஸ்தீனத்திற்கு வந்து விட்டனர். பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் அன்றாடம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் காசா பகுதியில் ரஃபா எனும் சிறு நகரில் பாலஸ்தீன ஏழை மக்களின் குடும்பங்களுடன் சேர்ந்து வாழ்ந்தது அந்த இளைஞர்கள் குழு. திடீர் திடீரென இஸ்ரேலிய இராணுவத்தின் புல்டோசர்கள் வருவதும் அவற்றை மறித்து நின்று போராடுவதும் ரச்சேல் குழுவினரின் அன்றாட நடவடிக்கையாகி விட்டது. அத்தகைய சம்பவம் ஒன்றினைத் தனது பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் விவரிக்கிறாள் ரச்சேல். "நாங்கள் புல்டோசரை மறித்து நின்றோம். மண்வாரியில் எங்களை அள்ளி வீசினான் ஓட்டுனர். நாங்கள் வீட்டின் ஒரு முனையில் கிடந்தோம். மறுபாதியை இடித்துத் தள்ளியது புல்டோசர்.

மார்ச் 16 ஆம் திகதி நடந்ததும் அதுதான். வெறியுடன் வந்து கொண்டிருந்தது இராணுவத்தின் புல்டோசர். அதன் பாதையில் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள் ரச்சேல். "நிறுத்து... நிறுத்து" என்று ரச்சேலின் தோழர்கள் கதறினார்கள். பயனில்லை ரச்சேலின் தலையைப் பிளந்த பின்தான் அது நின்றது.

"நிராயுத பாணிகளான பாலஸ்தீன மக்களைச் சுட்டுத் தள்ளுகிறது இஸ்ரேல் இராணுவம். ஆனால் நிராயுத பாணியாக ஒரு அமெரிக்கக் குடிமகனைச் சுட்டுத் தள்ளும் தைரியம் அவர்களுக்கு இருக்குமா?" என்று தன் பெற்றோருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்படுகிறாள் ரச்சேல்.



பாசிஸ்டுகளை இடைபோடத் தெரியாத அந்தப் பெண்ணின் வெகுளித்தனம் நம்மைக் கண்கலங்கச் செய்கின்றது. வெள்ளைத் தோலானாலும், அமெரிக்க குடிமகனானாலும் தனது ஆதிக்கத்தை எதிர்த்து நிற்போர் யாரையும் பாசிஸ்டுகள் விட்டு வைப்பதில்லை என்ற உண்மை புரியும் தருணத்தில், புல்டோசரின் கொலைக்கரங்கள் அவளை நெருங்கிய அந்தத் தருணத்தில் ரச்சேல் ஓடவில்லை. மரணத்தின் தருவாயில் தான் உணர்ந்து கொண்ட உண்மையை அமெரிக்க மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காக அவள் உயிர்விட்டாள்.

ரச்சேல் ஒரு மனிதாபிமானியா, வீராங்கனையா, தியாகியா, அல்லது போராளியா? அவள் ஒரு போராளி ஃபிதாயீன்! ஃபீதாயீன் என்ற அரபுச் சொல்லின் பொருள் தற்கொலைப் படைவீரன். பாலஸ்தீனத்தின் மீசை அரும்பாக இளைஞர்களும் இளம் பெண்களும் தம் உடலையே வெடி மருந்துக் கிடங்காக்கி வெடிக்கச் செய்து இஸ்ரேலை நிலை குலையச் செய்கிறார்கள். அவர்களுடைய இலக்கு யூத வெறி அரசு.

ரச்சேலின் இலக்கோ அமெரிக்க சமூகத்தின் அலட்சியம்; உலக மக்களின் மௌனம். வெடி மருந்துகளால் தகர்க்கமுடியாத இந்த 'எதிரியை' முறியடிக்க அந்த அமெரிக்க மாணவி கண்டுபிடித்த அதி நவீன ஆயுதம் தன்னுடைய இரத்தம்.

---

# புத்தளத்தில் அஸ்வர் ஹாஜியார்?



அமைச்சர் அல்ஹாஜ் அஸ்வர் புத்தளம் மாவட்டத்தைச் சாராத ஒருவராக இருந்தாலும் எதிர்வரும் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே.கட்சி வேட்பாளராகப் போட்டியிடப் போவதாகவும் அதனால் அவர் தற்போது அடிக்கடி புத்தளம் தொகுதியில் காணப்படுவ தாகவும் பத்திரிகைச் செய்திகள் கணிப்பீடு செய்துள்ளன. சமீபத்தில அமைச்சர் அவர்கள் புத்தளம், மதுரங்குழி, மறிச்சிக்கட்டி என்ற இடத்தில் 80 ஏக்கர் தென்னந் தோட்டமொன்றிற்கு உரிமையாகியுள்ளார். அதன் தற்போதைய பெறுமதி 160 இலட்சம் ரூபாய்கள். இதனாற்றான் அமைச்சர் புத்தளம் தொகுதியில் அடிக்கடி காணப்படுகின்றார். புத்தளம் தொகுதியில் முஸ்லிம் ஒருவர் பாராளுமன்றப் பிரதிநிதியாக வர முடியாதென்பதை நன்கு உணர்ந்தவர்தான் அமைச்சர். எனவே அவர் தேர்தலில் போட்டியிட்டுத் தன்னை அசடாக்கிக் கொள்வார் என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது. இருப்பினும் அவர் நிச்சயம் தேசியப் பட்டியல் எம்.பி. ஆகிவிடுகிறார். இது அவருக்குக் கைவந்த கலை.

*புத்தளம் ஆய்வாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவுடமைபேசும் எழுத்தாளர்களும் மறந்து விடும் கவிஞர் கா.மு.ஷெரீப்

தமிழ் திரைப்பட உலகில் கொடி கட்டிப்பறந்த பல பாடலாசிரியர்களைப் பற்றி நம் சகோதர தமிழ் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் அவ்வப்போது விதந்துரைத்து கட்டுரைகளை எழுதுகின்றனர். இது பாராட்டப்பட வேண்டிய நல்ல விடயமே. பழையவர்களைப் பற்றி மறவாமல் நினைப்பதும், எழுதுவதும் புதிய தலைமுறையினருக்கு செய்யும் சேவையே!

இப்படி எழுதும் நம் சகோதர பேனா மன்னர்கள், அதிலும் ஓரவஞ்சனை காட்டுவதுதான் விரும்பக் கூடியதாக இல்லை. பொது உடமைக் கவிஞர் என்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை பற்றி எழுதும் ஒரு பேனாக்காரர், ஏனோ அந்த ஒரு கவிஞரை குறிப்பிட மறந்து விடுகிறார்.

மறக்கப்படும் அந்த ஒரு கவிஞர் யார்? அவர்தான் கவிஞர் கா.மு. ஷெரீப் எனும் புகழ் பூத்த பூந்தமிழ்ப் பாவலன். அண்மையில் (13.4.2003) ஒரு ஞாயிறு தமிழ் இதழில் மக்கள் கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரத்தை பற்றி பெரிய கட்டுரை ஒன்றினை எழுதிய நம் நாட்டு தமிழ் எழுத்தாளர் ஒருவர். தமிழ் சினிமா தோன்றிய காலத்திலிருந்து அதற்கு பாட்டெழுத வந்த பல கவிஞர்கள் மகத்தான சாதனை செய்திருக்கிறார்கள். எனக்குறிப்பிட்டு அவர்களுள் குறிப்பிடத்தக்க சில கவிஞர்களின் பெயரைத்த ந்துள்ளார் பிரஸ்தாப எழுத்தாளர்.

அப்படி அவர் குறிப்பிட்ட கவிஞர் வருமாறு: மதுரை பாஸ்கரதாஸ், சந்தான கிருஷ்ண நாயுடு, பாபநாசம் சிவன், பாபநாசம் ராஜகோபாலையர், உடுமலை நாராயண கவி, ச.து.சு. யோகி, அ.மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கவிஞர் கண்ணதாசன் ஆகியோராவர். இவ்வரிசையில் நிச்சயம் இடம் பெறத்தக்கவர்தான் கவிஞர் கா.மு ஷெரீப் அவர்கள். இந்தக்கவிஞர் கா.மு.ஷெரீபை மறந்தது ஏன்? இது தவறுதலாக ஏற்பட்ட செயலா? திட்டமிட்டு விட்ட தவறா?

இதற்கு முன் இன்னொரு தமிழ் தினசரி தனது ஞாயிறு இதழில் சினிமா பகுதியில் இப்படி தமிழ் சினிமா பாடல் ஆசிரியர்களைப்பற்றி எழுதிய போது, அதிலும் இந்தக் கவிஞர் கா.மு ஷெரீபை மறந்து விட்டிருந்தது. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பண்பாட்டு வழியில் வந்தவர்கள் நாம் என எழுது கின்றார்கள். ஆனால் செயலில் இந்தக் 'கேளீர் முறை'யை அதாவது உறவு முறையை ஏனோ மறந்து விடுகின்றா ர்கள்.

இதோ அடிக்கடி மறக்கப்படுகின்ற அந்தப்புகழ் பூத்த கவிஞன் கா.மு ஷெரீ பைப் பற்றி...

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் - கவிஞர் கண்ணதாசன் இவ்விரு வரது காலத்தில் இவ்விருவரினதும் சாயல் படிந்த பாடல்களை புனைந்து, தமிழ் திரையுலகில் புகழ் பரப்பி நின்ற வர்தான் கவிஞர் கா.மு ஷெரீப் ஆவார். இவர் எழுதிய பாடல்கள் எதைத் தொட்டுப்பார்த்தாலும், அது பட்டுக்கோட்டை கல்யான சுந்தரம் எழுதிய பாடல் போன்றிருக்கும். கவி ஞர் கண்ணதாசன் எழுதிய பாடல்கள் போலவும் இருக்கும். அந்த அளவுக்கு மேற்படி இருவர்களின் பாடல்களைப் போன்று அதேதரத்தில் எழுதும் ஆற் றல் பெற்றிருந்தவர் கவிஞர் கா.மு ஷெரீப் என்றால், அது பொய்யல்ல.

இதற்குப் பொருத்தமான உதாரணப் பாடலொன்றை பார்ப்போமே! "நான் பெற்ற செல்வம்" என்ற படம். நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த படம். அதில் வரும் அனைத்துப் பாடல்களையும் கவிஞர் கா.மு ஷெரீப் அவர்களே இய ற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்த க்கது. அவற்றில் ஒன்று ரீ.எம் சௌந் தரராஜன் பாடிய அருமையான வாழ்க் கைத் தத்துவத்தை எழிய தமிழில் எல்லாருக்கும் புரியும் வண்ணம் அமை ந்த பாடல் "வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந் தாலும் ஏசும் வையகம் இதுதானடா: வையகம் இது தானடா - வீழ்ந்தா ரைக் கண்டால் வாய் விட்டுச் சிரிக் கும், வாழ்ந்தாரைக் கண்டால் மனசுக் குள் வெறுக்கும்..." என்றமைந்த பாடல் இன்னும் நம் காதுகளில் இனிமையாக ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

அதே படத்தில் கதாநாயகன் தெரு வில் சைக்கிளில் போய்க்கொண்டு இருக்கிறான் தெருவில் ஒரு அழகான பெண்ணைப்பார்த்து விடுகின்றான். பாடல் பிறக்கிறது. "காட்டுக்குள்ளே கண்ட பூ கண்ணைப்பறிக்குது: அதன் கமகமக்கும் ஆசை வந்து ஆளை மய க்குது: கூட்டுக்குள்ளே குயிலுக்குஞ்சி பாடிக்களிக்குது; அதன் பாட்டைக் கேட்டு என் மனசும் பதறித் துடிக் குது..." இப்படி இப்படத்தில் ஒவ்வொரு பாடல்களும் அருமையிலும் அருமை!

இப்படி பல படங்களுக்கு கவிஞர் கா.மு ஷெரீப் மட்டுமே



முழுப் பாடல்க ளையும் இயற்றியிருக்கிறார். அவற்றில் "டவுன் பஸ்" என்றொரு படம். அதில் எம்.எஸ். ராஜேஸ்வரி பாடிய "சிட்டுக் குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா? எனை- விட்டுப் பிரிந்து போன கண வன் இன்னும் வீடு திரும்பல்ல வீடுதிரு ம்பல்ல; பட்டுப்புடவை எடுத்து வைத் தேன் சும்மா கிடக்குது. பசும் பாலைக் காய்ச்சி எடுத்து வைத்தேன் ஆறிக்கி டக்குது...." என்ற பாடல் இப்போதும் தேனாக இனிக்கிறது.

இதே "டவுன் பஸ்ஸில்" இதே பாடகி எம்.எஸ் ராஜேஸ்வரி பாடும் தாலாட்டுப் பாடல் நம்மை மெய் மறக்கச் செய்யும்" மழை கூட ஒரு நாளில் தேனாகலாம்; மணல் கூட ஒரு நாளில் பொன்னா கலாம்; ஆனாலும் அவையாவும் நீயாகுமா? அம்மா என்ற ழைக்கிற சேயாகுமா?" எத்தனை கால மானாலும் இனிமை மாறாத இன்னு மொரு துன்பியல் பாடல் இதே படத்தில் வருகிறது. திருச்சி லோகநாதனின் கம்பீர குரலில் சோகம் சொட்டுகிறது. "பொன்னான வாழ்வு மண்ணாகிப் போமா? துயரம் இது தானா? உலகம் இதுதானா?"

நடிகர் திலகம் சிவாஜி கணேஷன் நடித்த "அன்னையின் ஆணை"யில் நம் கவிஞர் எழுதிய வரிகளுக்கு ரி.எம்.எஸ் குரல் தருகிறார். "அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம்; ஔ வையின் பொன்மொழி வீணா.." அழ கான - அருமையான பாடல் வரிகள் இவை.

"தேடி வந்த செல்வம்" என்ற படத் தில் ரீ.எம்.எஸ்ஸும்.பீ.சுசிலாவும் பாடும் கவிஞரின் வரிகள்" குங்குமப் பொட்டுக்காரா - கோணக் கிராப்புக் காரா - உன்னையே நான் மறவேனே" கொங்கு நாட்டுத் தங்கம் படத்தில் வரும் "கொங்கு நாட்டுச் செங்கரும்பே தங்கச் சிலையே - எந்தன் தங்கச் சிலையே - எந்தன் தங்கச் சிலையே..." இப்படி பாடல் எழுதி வந்த கவிஞர் கா.மு.ஷெ ரீப் பாரசீகக் கவிஞர் உமர் கையாமின் பாடல் வரிகளையும் தமிழ்ப்படுத்தி, "எழுதிச் செல்லும் விதியின் கை; எழுதி எழுதியே செல்லும்" என்ற தொகையறாவுடன் ஆரம்பித்து, வருந் தாதே மனமே - வீணே வருந்தாதே மனமே" என்ற தத்துவச் சாற்றினை படப் பாடலாக்கித் தந்தார்.

இந்தத் தத்துவக் கவிஞரின் இன் னொரு மேதாவிலாசம் வெளிச்சத்திற்கு வராமல் இருக்கிறது. என்றாலும் - தமிழ்த் திரையுலகம் மறக்காமல் புதைய லாய் அதனைப் பூட்டி வைத்துள்ளது. அது... இதோ...

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஏ.பி. நாகராஜன் நடிகர் திலகத்தை வைத்து புராணக் கதைகளை பிரமாண்டமான முறையில் வரிசையாக படங்களாக எடுத்து வந்த காலம் "திருவிளையாடல்" - "திருவருட் செல்வர்" - "சரஸ்வதி சபதம்" - "கந்தன் கருணை" என அவ்வரிசை இன்னும் நீளும். இதில் "திருவிளையாடல்" முதலில் பெரு வெற்றியைத் தந்த படம், இதில் பாடல் கள் அனைத்தும் 'ஹிட்' டானவை. இவற்றுள் "பாட்டும் நானே - பாவமும் நானே" எனத் துவங்கும் பக்திச் சுவை ததும்பும் ஞானப்பாடல் மிகவும் பிரசித்தம். இப்படத்தில் வரும் பாடல்கள் எல்லா வற்றையும் கவிஞர் கண்ணதாசன்தான் இயற்றி இருந்த போதும், இந்த "பாட் டும் நானே - பாவமும் நானே" என்ற பாடலை மட்டும், உண்மையாகவே கவிஞர் கண்ணதாசன் எழுதவில்லை என்பது பலரறியாத ரகசியம். இப்பாடலை மட்டும் நம் கவிஞர் கா.மு.ஷெரீப் அவ ர்களே எழுதியிருந்தார் என்பதே உண்மையிலும் உண்மை!


அப்படியானால் ஏன் திரைப்ப டை ட்டலில் கவிஞர் கா.மு.ஷெரீபின் பெயர் இடம் பெறவில்லை என்றொரு கேள்வி எழும்புவது யதார்த்தமே!

இந்தத் திருவிளையாடல்" இந்து சமய புராணக் கதை. இதில் இப்படி யொரு ஞானப் பாடலை ஒரு முஸ்லி மான கவிஞர் எழுதினார் என்றால், எதிர்ப்பு இருகரைகளிலும் எழலாம். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் பிரச்சி னைகள் பெரும் சங்கடத்தை ஏற்படு த்தி விடும். கவிஞன் என்பவன், சுதந் திரமாகப் பறக்கும் வானம்பாடியைப் போன்றவன் எனினும், தனது எழுத் தால் சமூகப் பிரச்சினை எழக் கூடாது என, நம் கவிஞர் ஷெரீப் விரும்பி னார். அதனால் இயக்குநர் ஏ.பி. என் னுடனும் கவிஞர் கண்ணதாசனுடனும் பேசி, ஒரு புரிந்துணர்வின் அடிப்படை யில் தன் பெயரை தானே மறைத்து விட பணித்தார். "ஷெரீப் அண்ண னின் பாடல் வரி என்ற 'பெயரில் வரு வது எனக்கு பெருமையாகும்." என்ற கண்ணதாசனின் கருத்து ஒப்புதலா னது. இவ்வாறு புகழ்வரிகளை எழுதி, திரை இலக்கியத்தில் சாதனை படை த்த கவிஞர் கா.மு.ஷெரீப் இன்று நம் மிடையேயில்லை. ஆனால் அவரது வரிகள் இன்னும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இதை சகோ தர பேனாக்காரர்கள் புரிந்து கொள் வார்களா?

இதய ❤ கனி

# உசாமா பின் லேடன்

2




அவர்களின் வழிகளில் சென்று அடைய முடியாத இயலாமையுமே காரணமாக அமைந்தது.

12 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்த இஸ்லாமிய பேரரசு உலகில் அதன் பாத்திரம் ஈரானை ஒரு ஈரானில் ஆயத்துல்லா கொமய்னி தலைமையிலான கலாசாரப் புரட்சி ஏற்படும் வரை நீடித்தது. ஆயதுல்லா கொமெய்னி மீளவும் ஒரு நம்பிக்கையை இஸ்லாமிய வரலாற்றில் தந்தார். உறுதிமிக்க அரசாக கட்டியெழுப்பினார். ஈரானிய அரசின் உறுதியைக் குலைப்பதையோ இஸ்லாமிய எதிர்ப்பு நாடுகள், சக்திகள் தக்களது பிரதானமான அரசியல், இராணுவப் பணியாகக் கொண்டன.

அந்த வகையில்தான் இன்று அமெரிக்காவின் மிகப் பெரும் எதிரியான சதாம் ஹுசைன் அன்று அமெரிக்காவின் நண்பனானதும் ஈரானின் பரம எதிரியானதும். ஈரானை, உறுதியான அரசாக தொடர்ந்தும் வளரவிட்டால் மீளவும் ஒரு சக்திமிக்க இஸ்லாமிய அரசு ஒன்று உலகில் ஏற்பட்டு விடும் என்ற பயம் இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளின் மனதில் எப்போதுமே முள்ளாகவே இருந்து வந்தன. 1979 இல் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியைத் தொடர்ந்து ஆயதுல்லா கொமெய்னி இஸ்லாமிய உலகில் உறுதியான மிக முக்கிய தலைவராகிறார்.

மேற்கின் ஆக்கிரமிப்பு இஸ்லாமிய அரசுகளை அதிகம் விட்டு வைக்கவில்லை. எண்ணெய் வளத்தை பெருக்கிக் கொள்வதற்கான உற்பத்தி முறை தொடக்கம். கல்வி, வைத்தியம், தொழில்நுட்பம், உணவுப் பழக்கங்கள் வரை மேற்கின் ஆக்கிரமிப்பு இஸ்லாமிய உலகத்தை ஆக்கிரமித்து நிற்கிறது. இதன் வகையில் இஸ்லாமிய உலகு மேற்கை விட்டு பிரிக்க முடியாத நிலைக்கு இன்று வந்து விட்டது. இந்நிலையானது இஸ்லாமிய நாடுகளை தங்கி வாழ்பவர்களாகவே உருவாக்கி விட்டது. இந்தப் போக்கை பல்வேறு இஸ்லாமியத் தலைவர்களும் கண்டித்து வந்திருக்கின்றனர். ஆனால் அவர்களால் இதுவரை மேற்கின் ஆக்கிரமிப்பிலிருந்து தமது மக்களை முற்றாக விலக்கிக் கொள்ள முடியவில்லை. மேற்கின் ஆக்கிரமிப்பானது இஸ்லாத்தின் விரிவாக்கத்திற்கும் சுதந்திரத்திற்கும் பெரும் மலை போன்ற தடையாகவே எழுந்து நின்றன. நிற்கின்றன.

மேற்கின் ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தமே பல்வேறு வழிகளில் அரசியல் மோதலாக இஸ்லாமிய உலகில் வெடித்து வருகிறது. இது ஆயதுல்லா கொமெய்னி தொடக்கம் இன்றைய பில்லேடன் வரை மேற்கின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நடாத்தி வரும் போராட்டமாக தொடங்கிறது. மேற்கின் இராணுவ, கலாசார, ஆக்கிரமிப்பானது முற்றாக இஸ்லாமிய உலகிலிருந்து தாக்கி அழிக்கப்பட வேண்டியதாகவே கருதப்படுகிறது. இவைபற்றிய புரட்சிகரமான கருத்துகள், சிந்தனைகள் பல்வேறு காலகட்டங்களில் எழுத்துக்களாகவும், சிந்தனைகளாகவும் உலக முஸ்லிம்களிடையே முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இதன் தாக்கம் இதன் விளைவே ஒஸாமா பின்லேடனும் அவரது பின் நிற்போரும் என்றால் அது மிகையாகாது.

இந்த உலகம் எப்படி இஸ்லாமிய விரோதிகளால் வடிவமைக்கப்படுகிறது என்கிற விடயம் இஸ்லாத்தின் வழிநிற்போரை பெரும் போராட்ட சக்திகளாக மாற்றுகிறது. ஈராக்கிய அறிஞரான ஆயதுல்லா முஹம்மத் பாசிக் அஸ்தர் இப்படிச் சொன்னார். "உலக முஸ்லிம்களுக்கு முன் இரண்டு தெரிவுகள் உள்ளன. ஒன்று நாம் இவ்வடக்குமுறைகளுக்குப் பயந்து அடிபணிய வேண்டும். அல்லது அதற்கு எதிராகப் போராடி விடுதலை பெறல் வேண்டும் என்கிறார். இரண்டாவதையே பின்லேடனும் அவரது சகாக்களுக்கும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

முன்னாள் பாகிஸ்தான் பிரிகேடியராக இருந்த எஸ். கே. மலிக் என்பவரால் 1979 காலப்பகுதியில் வெளியிடப்பட்ட நூலான "புனித யுத்தம் பற்றிய எண்ணக்கரு" என்ற நூலில் அவர் இப்படி எழுதுகிறார். "புனித யுத்தம்" பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டமானது மிகவும் தாக்கம் விளைவிக்கக் கூடியதும் ஆழமானதுமாகும். இது உயர்ந்த ஒரு தியாகமுமாகும். (ஜிஹாத்). இது உலகத்திலுள்ள அனைத்து இராணுவக் கட்டமைப்புகள், தன்மைகளிலிருந்தும் முற்று முழுதாக வித்தியாசமானது. ஏனெனில் புனித யுத்தம் அல்லாஹுக்காகவே மேற்கொள்ளப்படுகிறது. இதனால் "புனித யுத்தத்தை" எதிர்கொள்வது அவ்வளவு இலேசுப்பட்ட காரியமல்ல என்கிறார் முன்னாள் இராணுவத் தலைவர்.

ஈராக்குடனான 8 வருடகால யுத்திற்குப்பின் மீளவும் அசைக்க முடியாத வலிமையுடன் எழுந்து நின்ற ஆயதுல்லா கொமெய்னியின் உறுதிப்பாடு, ஈரானிய அரசின் ஸ்திரம், 1989இல் சூடானில் இராணுவப் புரட்சியில் ஹஸன் அல் துராபி சூடானின் ஆன்மீகத் தலைவராக வருதல் என்பவற்றுடன் ரஷ்யாவுக்கெதிராக ஆப்கானிஸ்தான் மக்களின் எழுச்சி, கம்னியூசத்தின் வீழ்ச்சி, ரஷ்யாவின் உடைவு அதனூடாக மத்திய ஆசியாவில் இஸ்லாமிய நாடுகளின் தோற்றம் ஆகியவை உண்மையில் இஸ்லாமிய உலகுக்கு புத்துயிர் ஊட்டியிருந்தன.

மற்றும் 1991இல் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தில் மீண்டுமொருமுறை மேற்கின் இராணுவத் தொழில் நுட்பம், படைப்பலம், என்பன இஸ்லாமிய வல்லமையை அழிவுக்குட்படுத்தியது. மற்றும் புனிதத் தலமான மக்கா, மதீனாவில் சவுதிஅரேபிய அரசகுடும்பம் தனது ஆதிக்கத்தை பாதுகாப்பதற்கும் ஈராக்கைத் தோறகடிப்பதற்கும் நேரடியாக அமெரிக்காவை சவுதியினுள் கால்பதிக்க அனுமதித்தமை - இவைகள் இஸ்லாமிய உலகில் பெரும் மனத்தாக்கத்தை எற்படுத்தியது. சவுதியில் பிறந்த உசாமா பின்லேடனையும் அவரது நண்பர்களையும் இக்காரணிகள் வெகுவாகப் பாதித்தன.

1991இல் மீண்டும் இஸ்லாமியத் தலைவர்கள் அமெரிக்காவுக்கு எதிரான யுத்தம் தவிர்க்கமுடியாததும் தொடரக்கூடியதுமென வலியுறுத்தினார்கள். அஹ்மத் கொமெய்னி (ஆயதுல்லாவின் மகன்) அன்று இப்படிக் கூறினார். "உலகம் எம்மைக் காழ்ப்புணர்வுடனும் குரோதத்துடனுமே பார்க்கிறது. இதற்குக் காரணம் நாம் முஸ்லிமாக இருப்பதே. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப்பின் அமெரிக்கா தனது யுத்தத்தை முழுப்பலத்துடன் இஸ்லாத்திற்கு எதிராகப் பிரயோகிக்க முடிவுசெய்தது. இதனை எதிர்கொள்வதே நமது கடமையாகிறது. மத்திய கிழக்கிலுள்ள சவால்களை முறியடித்து அதனைத் தாண்டி இஸ்லாமியப் போராட்ட நிகழ்வுகள், எங்கும் வியாபிக்கும். இஸ்ரேலுடனான போராட்டம் என்பது அமெரிக்காவுடனான போராட்டமே. மேலும் மேற்குடனான போராட்டம் அவ்வளவு இலகுவில் முடியக்கூடியதுமல்ல" என்றார்.

1990களில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மிக மோசமாக மேற்குடனான இஸ்லாமிய உலகின் மோதல் விரிவடைந்து வந்திருப்பதை நாம் காணலாம். முஸ்லிம் உலகின் எதிர்ப்புணர்வுகள் மேற்கின் மின்னியல் ஊடகங்களில் தினமும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றன. ஊடகங்களின் ஊடாக, மட்டுமல்ல ஒவ்வொரு அமெரிக்க, பிரிட்டிஷ் பிரஜையும் இன்று தமது பாதுகாப்பின்மையை உணர்ந்து நிற்கின்றனர். தங்களது அரசுகளின் ஆதிக்கக் கொள்கையினால்.... ....ஹொவேடா போன்ற அறிஞர்களின் கருத்தின்படி இஸ்லாத்தை அச்சுறுத்தலுக்கு உருவாக்கியது மேற்கே என்கிறார்.

தொடர் 6ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமொழி மௌலானா வருத்தம்!

## நியாயம்தான்!

ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன் கொழும்பு புறக்கோட்டை மூன்றாம் குறுக்குத் தெருவில், கம்பீரமாக எழுந்து நிற்கும் மேமன் ஹனபி பள்ளிவாசலில் பிரதம கதீபாகக் கடமையாற்றி வந்த "மணிமொழி மௌலானா" மாஹூம் கலீலுர் ரஹ்மான் அவர்கள் இலங்கை வானொலியில் - முஸ்லிம் சேவையில் "மணிமொழிகள்" எனும் தலைப்பில் உயிரோட்டமான மார்க்க உபந்நியாசம் (பயான்) புரிவதில் தலைசிறந்து விளங்கினார் எனும் தகவல் நம் பழைய தலைமுறையினருக்கு பரீட்சயமானது.

இந்த மணிமொழி மௌலானா ஒரு முறை "ஓர் ஆலிம் படுவா கெடுத்திட்டான்ய்யா..." எனக் கூறி வருத்தப்பட்டார். இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியொன்றில் பேசும் போது மௌலானா மேற்கண்டவாறு கூறி கவலைப்பட்டார். மேலும் "அன்று அந்த ஆலிம் தன்னிடம் இஸ்லாம் பற்றிக் கேட்டு வந்தவரின் நோக்கம் - செயற்பாடு - தேவை - சூழ்நிலை போன்றவற்றை எடைபோட்டு, வந்தவரின் "பசி" அறிந்து இஸ்லாமிய விழுமிய பண்புகளை உரிய முறைப்படி எடுத்துரைத்திருந்தால், இஸ்லாத்திற்கு பெரும் வெற்றி கிடைத்திருக்கும்.

மணிமொழி மௌலானாவின் பிரஸ்தாப பேச்சின் விளக்கம் என்ன தெரியுமா? இந்தியா சுதந்திரம் அடைந்த பின், இந்தியாவின் சட்டயாப்பினை வரையும் பொறுப்பினையேற்று, மிக உன்னத பணியாக செய்து முடித்த சட்டமேதை அம்பேத்கார், ஹரிஜன இனமான தன்னை நம்பியிருக்கும் இலட்சக்கணக்கான ஹரிஜன மக்களுக்கு, சமூக அந்தஸ்து கிடைக்க வேண்டும் எனும் நன்நோக்கில் உரிய மார்க்கத்தை தெரிவு செய்ய விளைந்தார்.

"இஸ்லாத்தில் இணைவோமா? எனும் எண்ணப்பாங்கில்" ஓர் ஆலிமை (உலமாவை) நெருங்கி, இஸ்லாத்தைப் பற்றி விளக்குமாறு அம்பேத்கார் வேண்டினார். அந்த ஆலிமோ எதைப்பற்றியும் சீர்தூக்கிப் பாராமல், எடுத்த எடுப்பிலேயே "இங்கப் பாருங்க எங்கள் இஸ்லாத்திலும் நான்கு பிரிவுகள் (மத்ஹப்கள்) உள்ளன. ஷாபி., ஹனபீ, ஹன்பலி, மாலிக்கீ எனபவையே அவை...." முதற்கண் சொன்னதுதான் தாமதம், "ஆஹா... இங்கேயும் (இஸ்லாத்திலும்) பிரிவுகளா? வேண்டாம்ய்யா..." எனக் கூறிப் போனவர், நேரே பௌத்த மதத்தைத் தழுவினார். அவரை அடியொட்டி அவரது சீடர்கள் இலட்சக்கணக்கில் பௌத்தத்தில் இணைந்தனர். இது வரலாறு!

அன்று... அந்த ஆலிம் அம்பேத்காரின் "பசி" அறிந்து, "பாத்திரம்" தெரிந்து, த:'வா செய்திருந்தால், இன்று நிலைமையே வேறு. இதுவே மௌலானாவின் வருத்தத்திற்கான காரணமாகும்.

நம் உலமாக்களுக்கு இஸ்லாத்தில் போதியளவு "விஷயம்" இருப்பதை மறுக்க முடியாது. அந்த "விஷயங்கள்" சமூகத்தவரின் அடிமட்டம் வரை போய்ச் சேருகின்றனவா? தேவைப்படும் பிரிவினருக்கு தெளிவேற்படுத்தும் விதமாக விஷயங்கள் தெரிவிக்கப்படுகின்றனவா? இதற்கு உதாரணமாக பல விடயங்களை முல்லாவினால் தொட்டுக் காட்ட முடியும். இதோ... சில....

ஒரு முஸ்லிம் அதிகாலையில் விழித்தவுடன் என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி எப்படிச் செய்ய வேண்டும். இது தெரியாத எத்தனையோ இளைஞர்கள், பெரியவர்கள் இன்னும் நம்மிடையே பலபேர் இருக்கவே செய்கின்றனர். இதன் வெளிப்பாடு சமூக வாழ்வில் பளிச்சிடவே செய்கிறது.

திருமணம் முடித்தால், தன் மனையாளை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்? அவளது கடமைகள் - உரிமைகள் - சுதந்திரம் யாவை? மனைவி மீது கணவனுக்கு இருக்கும் கடப்பாடுகள் - கரிசனைகள் - கட்டுப்பாடுகள் என்ன என்ன? குழந்தைகள் பிறந்தால் இஸ்லாமிய முறைபடி வளர்ப்பது எப்படி? போன்ற பல விஷயங்களை சரிவர புரியாத எத்தனையோ முஸ்லிம் கணவன் மார்களை முல்லாவினால் அடையாளம் காட்ட முடியும்! இன்று தன் பொறுப்பில் - நிழலில் வாழவைக்க வேண்டிய பல மனைவியர்களை, விரும்பி அரபுலகிற்கு "ஹவுஸ் மேய்"டாக அனுப்பி விட்டு, மனைவியர் அனுப்பும் காசோலைக்காக தான் செய்து வந்த தொழிலையும் விட்டொழித்து விட்டு எதிர்பார்த்திருக்கும் கையாலாகாத கணவன்மார் எத்தனை பேர்?

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்று, அரபுலகு சென்ற நம் இளைஞர்கள் பலர், கைநிறைய சம்பாதித்து விட்டு தாயகம் திரும்பி, இஸ்லாமிய முறைப்படி வாழத் துடிக்கும் நிலையில் ஸக்காத் என்கிறார்களே... அது என்ன? ஸக்காத் எப்படி கொடுக்க வேண்டும்? யாருக்குக் கொடுக்க வேண்டும்? என்பன போன்ற விபரங்கள் புரியாத இளைஞர்கள் எத்தனை பேர்?

இப்படி பல துறைகளில் - பல வழிகளில் தெரியாமல் இருக்கும் சமுதாய இதயங்கள் பல பேர் உள்ளனர். இதற்கு காரணம், மார்க்கத்தை உரிய முறையில் சொல்லித் தரவேண்டியவர்கள் சொல்லித்தரவில்லை என்பதுதான். தெரிந்த உண்மையை (ஹக்கினை) தெரியாதவர்களுக்கு எடுத்துரைத்து, த:'வா பணி புரியவேண்டிய கடப்பாடு, எல்லா முஸ்லிம்களுக்கும் உரித்துடைய கடனாக இருக்கின்ற சமுக அமைப்பில், இவ்வாறு உலமாக்கள் தன்பணியை உரிய வழியில் செய்யாதிருப்பது சரியா?

நம் உலமாக்கள் பலருக்கு விஷயமிருக்கும் அளவிற்கு, அந்த விஷயத்தை இடம் - பொருள் - சூழல் - தேவை உணர்ந்து வெளிப்படுத்தும் ஆற்றல் இல்லை என்பதை, முல்லாவினால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இதற்கு சமீபத்திய நிகழ்வினை உதாரணமாக முன் வைக்க விரும்புகிறேன்.

ஓர் அரச ஸ்தாபனத்தில் சமீபத்தில் ஒரு வைபவம் இடம் பெற்றிருக்கின்றது. சகல மத குருமார்களையும் "நற்சிந்தனை" வழங்க அழைத்திருக்கின்றனர். ஒரு கிறிஸ்தவ பாதிரியார் அருமையாகப் பேசியுள்ளார். பௌத்த குருவான சாது ஒருவர், தன் பணியை கனகச்சிதமாக நிறைவேற்றியுள்ளார்; அவ்வாறே இந்துமத குருக்கள் ஒருவரும் அழகாக உபந்நியாசம் புரிந்துள்ளார். இவர்கள் மூவரும் கிடைத்த வாய்ப்பை சரிவர பயன்படுத்தியிருக்கின்றார்கள். நம் உலமா ஒருவர் சிங்கள மொழியில் பேசி சம்பந்தா சம்பந்தமின்றி தலைப்பு தாண்டி என்னென்னவோ பேசியிருக்கிறார். பிறமத சகோதரர்களுக்கு "போர்" அடித்து சலிப்பேற்பட்டுள்ளது. இதை அந்த அரசு ஸ்தாபனத்தை சேர்ந்த முஸ்லிம் ஊடக சகோதரர் ஒருவர் முல்லாவிடம் கூறி வருத்தப்பட்டார்.

இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அவ்வைபவத்தில் பேசிய உலமா, அகில இலங்கை ஜம்இய்யதுன உலமாவின் (சபையின்) முக்கிய உத்தியோகத்தர் என்றால் நம்புவீர்களா? அமைப்பு மட்டத்தில் சமூகப் பிரச்சினையை சிந்திக்கும் "பெரியவரே" இப்படி வாய்ப்பை "கோட்டை" விட்டுள்ளார் எனில், மற்ற மௌலவியர் பற்றி என்ன சொல்ல முடியும்...?

நம் உலமாக்கள் உரிய முறையில் பயான் பண்ணாமல் சமய சிந்தனைகளை சமூகத்தின் முன் வைக்காமல் இருப்பதற்கு லோகாதாய விவகாரங்களில் அதாவது உலக நடப்புகளில் போதிய விஷய ஞானம் அவர்களுக்கு இல்லாமையும் ஒரு காரணமாகும்.




இந்திய சட்ட மேதை அம்பேத்கார் கேட்ட போது விளக்கமளித்த அந்த உலமாவும், மேற்படி விஷய ஞானம் இல்லாமையினால்தான் வாசல் தேடி வந்த வாய்ப்பினை உரிய முறையில் பயன்படுத்த தவறினார். இன்னும் நம் மௌலவி மார்களில் பலர் இப்படி வாய்ப்பை பயன்படுத்த தவறும் நிலையிலேயே இருக்கின்றனர் என முல்லா சொல்லும் குற்றச்சாட்டை விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் நின்று சிந்திப்போர் ஒப்புக் கொள்வர்.

முஸ்லிம்களின் தேவை பசி உணர்ந்து தேசிய சர்வதேச நடப்புக்களை அனுசரித்து கடந்த காலங்களில் நம் உலமா சமுதாயம் ஷரீஆவை நிறையாயும் - முறையாயும் முன்வைத்திருந்தால் இன்று சமுதாயம் சமய அடிப்படையில் பிளவுண்டு பேதலித்து நிற்கும் நிலை தோன்றியிராது. சுமார் 50 ஆண்டுகளாகவே நம் உலமாக்கள் வெள்ளிதோறும் நடைபெறும் ஜும்மாக்களில் தமிழில் பயான் பண்ணி வருகின்றனர். அதற்கு முன்னரெல்லாம் அரபியில் மட்டுமே குத்பா இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. அரைநூற்றாண்டாக மிம்பரை சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இன்று பாரிய சன்மார்க்க விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்குமே.! எங்கே அந்த விழிப்புணர்ச்சி.

வெள்ளிக்கிழமை ஜும்மாக்களில் குத்பா உரைகளை உற்றுக் கவனித்தால் கடந்த 50 வருடங்களாக தொழுகை, நோன்பு, ஹஜ், சீதனம், வட்டி போன்ற ஐந்தாறு தலைப்புக்களை பற்றியும் - சுற்றியுமே பயான் பண்ணி வருகிறார்கள் என்பதை அறியலாம். இவை தவிர நாட்டின் வளர்ச்சியும் புதிய சூழலை ஒட்டி சமுகப் பிரச்சினைகளை தொட்டு சமூகத்தை தட்டியெழுப்பிய தடயங்களைக் காண முடிவதில்லை. இது ஏன்?

சரி? போனவை போகட்டும். போன பஸ்ஸுக்கு கைகாட்டி பிரயோசனமில்லை. இனி வரப்போகும் பஸ்ஸுக்காவது கைக்காட்ட தயாராவோம். சமூகம் தன் எதிர்கால தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளுமாறு இன்றைய சூழலில் உலமாக்களிடமிருந்து உயிரோட்டமான பயான் தேவை. இஸ்லாமிய வழி காட்டலை சமூகம் அறியத் துடிக்கிறது. தமிழில் மட்டுமன்றி சிங்களத்திலும் அழகாகவும், ஆரோக்கியமாகவும் பேசக் கூடிய "உலமா சபைகள்" அவசர - அவசிய கவனம் செலுத்த வேண்டும். மௌலவிகள் எவராக இருந்தாலும் பொது அறிவை வளர்த்துக் கொள்ள முன் வரவேண்டும். அப்போதுதான் "பசி"க்கேற்ற பயானைத் தரமுடியும்.

இந்த வகையில் ஜாமியா நழீமியா கலா பீடத்தில் இருந்து உருவாகும் உலமாக்களும் இஸ்லாஹிய்யா கலா பீடத்திலிருந்து உருவாகும் உலமாக்களுமே நம்பிக்கை நட்சத்திரங்களாக மிளிர்வதையும் முல்லா இங்கு பாராட்டியே ஆகவேண்டும். இது குறித்து சிந்திப்போமா?

# எழுத்தாளர் ஹிமானா செய்யத் பதிலளிக்கிறார்.



தமிழ் நாட்டு முஸ்லிம் வாசகர்கள் மட்டுமன்றி, இலங்கை வாசகர்களுக்கும் நன்கு பரீட்சயமான ஒரு படைப்பாளி ஹிமானா செய்யத் ஆவார். நீண்ட காலமாக (33 வருடங்கள்) இடையீடின்றி தொடர்ச்சியாக திருச்சியிலிருந்து வெளிவரும் "நர்கீஸ்" என்ற பெண்கள் சஞ்சிகை உட்பட, சமுதாய ஏடுகள் அனைத்திலும் பரவலாக எழுத்தாக்கப் பங்காற்றிவரும் இந்த ஹிமானா செய்யத், நம் இலங்கைக்கு மூன்றாவது முறையாக அண்மையில் ஒருவாரம் வந்துபோனார். நர்கீஸ்" ஏட்டில் அதிக பங்களிப்புச் செய்துவரும் இவரிடம், "நர்கீஸ்" கிளியார் கேள்வி பதில் பாணியில் ஒரு வினாக்கொத்தை கையில் கொடுத்தால் என்ன...?

-இதயகனி

*தமிழகத்தில் இப்போது முஸ்லிம் பெண் எழுத்தாளர்களும், வாசகர்களும் பெருகிவருகிறார்கள் என்று சொல்லப்படுவதில் உண்மையுண்டா...?*

வாசகர்கள் பெருகிவருகிறார்கள் என்பது உண்மையே. இதற்குக் காரணம் பள்ளிக்கு □ கல்லூரிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும், பல வகையான ஊடகங்கள்வழி பெருகியிருக்கும் பொது அறிவும்தான்.

பாத்திமுத்து சித்தீக், செய்புன்னிஸா, கமருன்னிஸா போன்றோர் இன்னும் தொய்வில்லாமல் எழுதிவருகிறார்கள் என்பது உண்மையே. அது பாராட்டத்தக்க அம்சம். ஆனால் நடுவில் வந்து நல்ல எதிர்பார்ப்பைத் தந்த ஸாதிகா ஹஸனா ஹாஜா, ஆமினா பீவி, ஹாஜிரா பானு போன்றவர்கள் எழுதுவதை முழுமையாக நிறுத்திவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். மஜீதா மைந்தன் என்ற மஹ்ரூப் போட்டிகளுக்காக மட்டுமே எழுதும் எழுத்தாளர் ஆகிவிட்டார். பேராசிரியைகள் நஸீமா பானு, நஸீமா அஹமத் மரைக்காயர், சா. ஆமினா பர்வீன், டாக்டர் பானு நூர்மைதீன் போன்றோர் அவ்வப்போது எழுதுகிறார்கள். டாக்டர் பானு நூர்மைதீன் "அன்னை ஹதீஜா" என்றொரு மாத இதழின் ஆசிரியையாகவும் உள்ளார். பெண்கள் பெயர்களில் அவ்வப்போது சில கதைகள் கட்டுரைகள் வருகின்றன. ஆனால் அவர்கள் தொடர்ந்து எழுதுவதில்லை என்பதால் மனதில் நிற்கவில்லை.

*தமிழ் நாட்டில் முஸ்லிம்களின் இன்றைய நிலை எப்படியுள்ளது? இதுபற்றி ஒரு முஸ்லிம் படைப்பாளி என்ற வகையில் உங்கள் பார்வை என்ன?*

உலகம் முழுக்க முஸ்லிம்கள் என்ன வகையான பிரச்சினைகளைச் சந்திக்கிறார்களோ அந்தப் பொதுவான நிலைமைதான் தமிழகத்திலும் நீடிக்கிறது. திராவிட இயக்கங்கள் தத்துவார்த்த ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் நீர்த்துப் போய்விட்டதால் அந்த இடைவெளிக்குள் புகுந்து கொள்ள பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்த கட்சிகள் குழுக்கள் முயன்று வருகின்றன. இப்போதைய தமிழக அரசின் ஆளும் கட்சி, மத்திய பாரத ஆட்சியுடன் பல விஷயங்களில் ஒத்துப் போவதாலும், வரும் பாராளுமன்றத் தேர்தலில் அவர்களது ஒத்துழைப்பும் உறவும் வலுப்பெறும் என்ற தோற்றம் தெரிவதாலும் அப்படி யான யூகங்கள் கிளம்புகின்றன. தி.மு.க.வில் ஏகப்பட்ட குழப்பங்கள் உட்கட்சிப் பிரச்சினைகள், காங்கிரஸில் குழுச் சண்டைகள், ஜாதியக் கூட்டணிகள் ஆர்வத்துடன் ஓரத்தில் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. இவ்வாறான ஆரவாரமான அரசியல் சூழ்நிலைகளிலும், முஸ்லிம் இயக்கங்கள் ஆழ்ந்த உறக்கத்தை அல்லது தாங்கள் தான் சமுதாயத்தின் பிரதிநிதிகள் என்ற இறுமாப்பில் இதுதான் சமுதாயக் காட்சி. சமுதாயத்தின் ஒரே நாளிழதான மணிச்சுடர் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. மகத்தான சமுதாய அரணாக நின்ற மறுமலர்ச்சி மூடப்பட்டுவிட்டது. மொத்தமாக சுமார் 45 இதழ்கள் வெளி வந்து கொண்டிருந்தாலும் பத்து இதழ்கள் தான் ஆரோக்கியமாக தொடர்ந்தும் வருகின்றன. அவற்றின் விற்பனைகளும் சுமார்தான். ஒரு படைப்பிலக்கியவாதி என்ற முறையில் மகிழ்ச்சியடைய முடியவில்லை.

இலங்கையில் பிரதான பொது இதழ்களில் முஸ்லிம் படைப்பிலக்கியவாதிகளுக்கு சிறப்பான இடங்கள் கிடைக்கின்றன. வானொலி, தொலைக்காட்சிகளிலும் கூட நல்ல பங்களிப்பிருக்கிறது. இந்நிலை தமிழகத்தில் இல்லை. இதுதான் யதார்த்தம்.

*எமது இலங்கையில் போலவே, தமிழகத்திலும் முஸ்லிம் சமுதாயத்திற்கு ஒழுங்கான - ஆரோக்கியமான அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் இருக்கிறதே... இதற்குக் காரணம் என்ன?*

தனி மனித முன்னிறுத்தல்கள் தலைதூக்கும் போது பொதுத்தலைமை உருவாகும் நிலைமைகள் சுருங்கி விடுகின்றனதானே! எனவே சமுதாயத்தின் பிரதான இயக்கங்கள் ஒரு பொதுக் கருத்து அளவில் கூட - தற்காலிகமாகக் கூட இணைந்து செயலாற்றும் நிலைமை உருவாகவில்லை. சமுதாய அளவில் இதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்ந்து தோல்வியையே சந்தித்து வருகின்றன. உலக ஆய்வில் முஸ்லிம் நாடுகள் ஒன்று பட்டில்லை. நாட்டளவில் - மாநில அளவில் - மாவட்ட அளவில் ஒருமித்த கருத்தில்லை. ஜமாஅத் அளவில் கூட ஒருங்கிணைந்த செயற்பாடில்லை என்ற வகையில்தான் நாட்கள் நகர்கின்றன. நாட்டின் பெரும்பான்மை மதவாத அச்சுறுத்தல்களோ - கல்வி - தொழில் முயற்சி சரிவுகளோ எதுவும் இந்த ஒற்றுமைக்கு வழியமைக்கவில்லை என்பது துரதிஷ்டவசமானது. ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்ற இறை உத்தரவு எல்லா நிலைகளிலும் மீறப்படுவதன் மூலம் அல்லாஹ்வின் கோபப் பார்வைக்கு ஆளாகி வருகிறோம் என்பதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்.

## வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதே முஸ்லிம்களுக்கு சிறந்தது.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதனால் மட்டும் முஸ்லிம்களின் பிரச்சினை தீருமா என பேரியல் அஷ்ரப் எம்.பி உட்பட சில மு.கா அமைப்பினரும் கேட்கின்றனர் தலைவர் அஷ்ரப் அவர்கள் வாழும்போது வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமாக எத்தகைய தெளிவான கருத்தை முன்வைத்திருந்தார் என்பதனை இவர்கள் புரியாமல் பேசுவது விந்தையாக உள்ளது. அவர் முன் வைத்த நிபந்தனைகள் என்ன? முஸ்லிம்களுக்கென தனியான மாகாண சபை ஒன்றை வழங்குவதாயின் மட்டுமே இணைய வேண்டும் என்பதுதான் அந்நிபந்தனை. இந்நிபந்தனையை மறுத்தால் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு என்பதை விளக்கத்தான் வேண்டுமா.?

வடக்கும் கிழக்கும் தற்காலிகம் என்ற போர்வையில் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இணைக்கப்பட்டதன் காரணமாக முஸ்லிம்கள் தற்போதைய மாகாண சபை அதிகாரிகளால் எவ்வளவு மோசமாக ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் இன்னமும் அறியாமல்தான் இருக்கின்றோமா? தற்காலிக இணைப்பின் போதே இப்படியென்றால் நிபந்தனையின்றி நிரந்தரமாக இணைக்கப்பட்டால் முஸ்லிம்களின் நிலை என்ன? தலைவர் அஷ்ரப்பினால் வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்புக்கு முன்வைத்த மாகாண சபை, தனியலகு என்பதெல்லாம் அரசாலும், புலிகளாலும் தூக்கி எறியப்பட்டுவிட்டன. அப்படி ஒன்றும் தர முடியாது என்று பகிரங்கமாகவே அவர்கள் அறிவித்துவிட்ட பின்னரும் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதால் மட்டும் முஸ்லிம்களின் பிரச்சினை தீர்ந்து விடுமா என பேரியல் போன்றோர் கேட்பது ஆச்சரியமாக உள்ளது.

இணைந்த வடகிழக்கில் சுமார் 10 வீதமாக ஆக்கப்பட்டுள்ளோம். (வடமாகாண முஸ்லிம்கள் விரட்டப்பட முன் 17 வீதமாக இருந்தோம்). கிழக்கு பிரிக்கப்பட்டால் முஸ்லிம்கள் 37% மாகவும் வடக்கிலும் கனிசமான அளவுவீதம் இருக்கும். பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் 37% முஸ்லிம்களால் பலதை சாதிக்க முடியும் என்பது இவர்களுக்கு புரியவில்லையா?

முபாறக் மௌலவி, கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான சூழலில் தீர்க்கமான சக்தியாக மாறும் சிறுபான்மை இனங்கள்

## ஒரு மாற்றுப் பார்வை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரை இறுதிப் பகுதியில் காலனித்துவத்திற்கு எதிராகத் தோன்றிய தேசிய விடுதலைப் போராட்டங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட நாடுகளின் தேசிய இனங்களினாலேயே முன்னெடுக்கப்பட்டன.

தேசிய இனங்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கையில் தேசிய சிறுபான்மை இனங்கள் அல்லது தேசிய இனமாக பரிணமித்துக் கொண்டிருக்கும் இனங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கவில்லை.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி பற்றிய சந்தேகத் தன்மை மற்றும் தேசிய இனங்களுடனான முரண்பாடு என்பன தேசிய சிறுபான்மை இனங்கள் மற்றும் சிறுபான்மை தேசிய இனங்கள் இவ்வாறான நிலைப்பாட்டினை மேற்கொள்ள நிர்ப்பந்தித்தன.

இதன் காரணமாக தேசிய சிறுபான்மை இனங்கள் மற்றும் சிறுபான்மை தேசிய இனங்கள் சில வேலைகளில் தேசிய விடுதலைப் போராட்டங்களின் போது மௌனத்தை கடைப்பிடித்தன. அல்லது எதிரியினால் கைக்கூலிகளாக பயன்படுத்தப்பட்டன. ஆனால் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும்போது தமக்கு தேசிய சுயநிர்ணய உரிமை வேண்டும். சுயாதிக்க நிர்வாக அமைப்பு முறை தேவை எனும் கோரிக்கைகளை தேசிய சிறுபான்மை இனங்கள் மற்றும் சிறுபான்மை தேசிய இனங்கள் முன்வைக்கலாயின.

காலனியாதிக்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டத்தை சோசலிஸ போராட்டமாக பரிமாற்றம் செய்த சோசலிஸ விடுதலை போராட்ட அமைப்புகள் தேசிய விடுதலை போராட்டத்தின் வெற்றியின் பின்னர், தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாரிய பங்கினை ஆற்றாத தேசிய சிறுபான்மை இனங்களும் சிறுபான்மை தேசிய இனங்களும் சுய நிர்வாகத்தினை கொண்டிருக்கும் வகையில் அரசியல் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தின. 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற ரஷ்ய சோசலிஸ புரட்சிக்கு தலைமை வகித்த தோழர் லெனின் அவர்கள் புரட்சியில் பங்குகொள்ளாத சிறுபான்மை இனங்கள் சுய நிர்வாக அமைப்பினை கொண்டிருக்கும் வகையில் அரசியல் கட்டமைப்பினை உருவாக்கினார்.

லெனினினால் முன்னெடுக்கப்பட்ட இச்செயற்பாடு இரண்டாம் உலக யுத்தத்துடன் தோழர் ஜோசப் ஸ்டாலினால் மேலும் முன்னெடுக்கப்பட்டதுடன் சோசலிஸ ஆட்சிகள் நிலவிய அனைத்து நாடுகளிலும் தேசிய சிறுபான்மை இனங்களினதும் சிறுபான்மை தேசிய இனங்களினதும் தேசிய சுயநிர்ணய உரிமை உத்தரவாதம் செய்யும் வகையில் அரசியல் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன.

அதேவேளை முன்னேறிய முதலாளித்துவ நாடுகளும் நாட்டின் தேசிய இனங்கள் மட்டுமல்லாது சிறுபான்மை தேசிய இனங்களும் சுய நிர்வாக கட்டமைப்பினை கொண்டிருக்கும் வகையிலான அரசியல் கட்டமைப்பினை உருவாக்கின.

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் மற்றும் சிறுபான்மை தேசிய இனங்கள் காணப்படும் நாடுகளில் சமஷ்டி ஆட்சிமுறை அல்லது பிராந்தியமற்ற சமஷ்டி முறையையும் அமுல்படுத்தின. இவையனைத்தும் எதற்காக மேற்கொள்ளப்பட்டதெனில், மாறும் அரசியல் சமூக பொருளாதார வளர்ச்சிக்கமைய தேசிய சிறுபான்மை மற்றும் சிறுபான்மை தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை வலுப்பெறும் எனும் நியதியை கருத்திற்கொண்டேதான். இவ் அனுபவ பின் புலத்தை கருத்திற்கொண்டு வடகிழக்கின் இன்றைய சிறுபான்மை தேசிய இனமான முஸ்லிம் இன மக்களின் பிரச்சினைகளை கருத்திற்கொள்வோமாயின் வடகிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் வடகிழக்கு விடுதலை போரில் பங்கு கொள்ளவில்லை. ஆங்காங்கே முஸ்லிம் இளைஞர்கள் ஓரிருவர் போராட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர். ஆனால் ஒட்டுமொத்தமாக சிறுபான்மை இனம் என்ற ரீதியில் பங்குகொள்ளவில்லை.

ஆனால் சமாதான தீர்வுக்கான பேச்சுவார்த்தை எனக்கூறியவுடன் தமது இனமும் சம உரிமைகளைக் கொண்ட இனமாக வாழ சமாதான தீர்வு வகைசெய்ய வேண்டுமென அவ்வினத்தின் அரசியல் தலைமைகள் கோரலாயின.

அதாவது முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்யும் தனியான நிர்வாக அலகினை கோருகின்றன. மேலெழுந்தவாரியாக நோக்குகையில் விடுதலைப் போரில் எந்தவொரு பங்களிப்பையும் செய்யாத முஸ்லிம் இனம் தமக்கு தனியான நிர்வாக அலகினைக் கோருவது நியாயமற்றது. அல்லது சமாதானத்தை முறியடிக்கவே இதனை கோருகின்றது என நினைக்கலாம்.

மறுபுறம் விடுதலைப் போராட்டத்திற்கு பங்களிக்காதவர்களுக்கு சமாதான பேச்சுவார்த்தையாலோ அல்லது அதன் பிரதிபலன்களிலோ பங்கேற்க அருகதையில்லை.

அதனால் நாம் அளிப்பதையே அவர்கள் ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டுள்ளனர் என போராடும் அமைப்பு கருதலாம். இதன் காரணமாக முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கு உரிய வாய்ப்பினை பேச்சுவார்த்தையின்போது அளிக்காது ஒதுக்கலாம். இவ்வாறான ஒதுக்கல் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதினை பார்ப்பது அவசியமாகும்.

ஏனெனில் இவ்வாறான ஒதுக்கல் சிலவேளை நிலவும் போர் சூழலின் கீழ் தற்காலிக வெற்றிக்கு சாதகமாக அமையலாம். ஆனால் நீண்ட கால ரீதியில் இது நிரந்தர வெற்றிக்கு சாதகமாக அமையுமா என்பது கேள்விக்குறியே.

இப்படிப்பினைகளை கருத்திற் கொள்ளும்போது வட கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களது பிரச்சினைகளை சரியாக அணுகாவிட்டால் சமாதான முன்னெடுப்பின் போதும் அதன் பின்னர் தோன்றும் சூழ்நிலையில் முஸ்லிம் மக்களது நிலைப்பாடு அனைத்து செல்நெறிகைகளையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும். குறிப்பாக வட கிழக்கின் இணைப்பு மற்றும் கிழக்கின் நிர்வாக அமைப்பினை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்வர்.

எனவே போர்காலத்தின் போது எவ்வித தாக்கத்தையும் மேற்கொள்ள முடியாதிருக்கும் சிறுபான்மை தேசிய இனம் சமாதானத்தின்போது தீர்க்கமான சக்தியாக விளங்கலாம்.

எனவே வடகிழக்கில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க விரும்பும் புலிகள் இயக்கம் இவ்விடயத்தில் சற்று ஆழமாக அக்கறை காட்டல் அவசியம்.
இவ்விடயத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றிகண்ட நாடுகளின் அனுபவத்தை கருத்திற்கொள்வது நன்று. அதாவது சமஷ்டி ஆட்சியின் கீழ் வட கிழக்கில் சமாதான சூழலை உருவாக்க விரும்பின் முஸ்லிம் மக்களது உரிமைகளை உறுதி செய்யும் வகையில் அவர்களது கோரிக்கைகளுக்கு அமைய சுய நிர்ணய உரிமைகளை வழங்க தயாராக வேண்டும்.

இன்று வடகிழக்கு வாழ் முஸ்லிம் மக்களது பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள விடுதலைப் புலிகள் சமஷ்டி ஆட்சி நிலவ ஆரம்பித்த பின்னர் வடகிழக்கு வாழ் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றும் பிராந்திய சுயநிர்ணய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடும்.

அதாவது கனடாவில் கியூ பெக் மக்களைப்போல் கிழக்கு தமிழ் மக்கள் தனியான பிராந்தியமாக செயற்பட அனுமதியளிக்கும்படி கோரலாம். அதேவேளை தற்போது வன்னிப் பகுதியில் குடியேறியுள்ள சுமார் ஒரு லட்சம் மலையக மக்கள் தமது தனித்துவத்தை முன்வைத்து தமக்கென தனியான பிரதேச சபை போன்றவற்றை கோரலாம். அல்லது தேர்தல் காலங்களின்போது மலையக அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை நிறுத்தி தமது தனித்துவத்தை வெளிப்படுத்தலாம்.

எனவே தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பு செய்யாத சிறுபான்மை தேசிய இனங்கள் சமாதானத்தின் போதும் விடுதலையின் பின்னர் நிர்வாக செல்நெறிகையில் ஆதிக்கம் செலுத்தலாம். இன்றைய உலக செல்நெறிகையை பொறுத்தமட்டில் சுயநிர்ணய உரிமை இன்று பிராந்திய மற்ற சுயநிர்ணய உரிமை என்ற அளவிற்கு விரிவடைந்துள்ளது.


அதாவது தொடர்ச்சியான பூ மி பிரதேசம் இல்லாவிட்டால் இனம் என்ற ரீதியில் அது அல்லது தனித்துவமான மக்கள் பிரிவினராக. தொடர்நிலப்பரப்பின்றி சிதறி சிறு சிறு பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு சிறு நிர்வாக அமைப்பினைக் கொண்டிருக்க உரிமையுள்ளது என்ற கருத்து வேரூன்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே சமாதானச் சூழலில் சிறுபான்மை தேசிய இனங்கள் அல்லது தேசிய சிறுபான்மை இனங்கள் சமாதானச் செயல் நெறியைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பரிணமிப்பதை நிராகரிக்க முடியாது.

நன்றி – பெ. முத்துலிங்கம்

## சதாம்...

படைவீரர்களை உடனடியாக நாட்டுக்குத் திருப்பி எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை புஷ். பிளேயர் நிர்வாகத்திற்கு கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.



ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கரமிப்பு பலத்த கேள்விக்குள்ளாகி உள்ளதை இத்தாக்குதல்கள் மட்டுமல்ல. சதாம் உசைனை உயிருடன் பிடிக்க முடியாத கூட்டுப்படைகளின் கையாலாகத் தனத்தின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சதாம் இன்னமும் பக்தாதில் தங்கியிருப்பதாகவும்ளு அவரே அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதலை வழிநடாத்துவதாகவும் புஷ் நிர்வாகம் இப்போது ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளது. அமெரிக்காவினால் முக்கியமாகத் தேடப்படும் பட்டியலில் உள்ளவர்களைக் கைது செய்வது நடைபெற முடியாத கனவாகவே கழிந்துவிடும் என மேற்கின் இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

சதாம் உசைனும் அவரது புதல்வர்களும். முக்கிய இராணுவத் தளபதிகளும் மக்களுடன் மக்களாகப் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.அவரது இரு புதல்வர்களும் இரு தினங்களுக்கு முன் ஏவுகணைத்தாக்குதலினால் கொல்லப்பட்டுவிட்டதாக அமெரிக்க தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவரும் பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்து தங்களது முக அடையாளங்களை மாற்றியுள்ளதாகவும் நம்பப்படுகிறது.

## கிண்ணியாவில் மக்கள் கொதிப்பு

( முஸ்லிம் குரல் மூதூர் செய்தியாளர் )

கிண்ணியா - செம்பி மோட்டைப் பகுதியில் இருந்து கடத்திச் செல்லப்பட்டவரை மீற்க காத்திரமான நடவடிக்கைகள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படாததை இட்டு அப்பகுதி முஸ்லிம் இளைஞர்கள் கொதிப்படைந்துள்ளனர். சம்பந்தப்பட்டவரை மீற்கவும் இளைஞர்களை அமைதிப்படுத்தவும் உலமா சபையினரும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென கிண்ணியா மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிண்ணியா-வானாற்றைச் சேர்ந்த முகம்மது அனிபா - அப்துல் லெத்திப் (38) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான மந்தை மேய்க்கும் கூலித் தொழிலாளியை கடந்த 2003.06.20 ல் கடத்திச் செல்லப்பட்டவராவார். இவருடன் சேர்த்து சுமார் 100க்கும் மேற்பட்ட மந்தைகளும் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டுள்ளன.

இவரையும். மந்தைகளையும் விடுவிக்க சலீம் என்பவர் ஊடாக ரூபா 1 இலட்சம் வரை கப்பம் கோரியுள்ளனர் புலிகள்.

தற்பொழுது மாதம் ஒன்று கடந்துள்ள நிலையில், உலமா சபையினர் திருமலையிலும் சம்பூ ரிலும் புலிகளின் தளபதி திலக்கைச் சந்திக்க எடுத்த முயற்சி கைக்கூடவில்லை. இந்நிலையில் கண்கானிப்புக் குழுவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்தும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. இவரை விடுவிக்கும் முயற்சியில் தாம் இறங்கவுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இளைஞர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

## உதவுவோம்

நெய்தல் நகர் மூதூர் 1 ஐச் சேர்ந்த நஸீர் அஸ்மியா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் முஹம்மது அக்ரம் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். மூதூர் தி/அல் - ஹிலால் மஹா வித்தியாலயத்தில் தரம் 8இல் பயிலும் இவரது இருதய வேல்வுகளை மாற்றுவதற்கு சுமார் ரூபா 500.000 (ஐந்து இலட்சம்) தேவையென கொழும்பிலுள்ள Durdan Hospital நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வறிய பெற்றோர்களாகிய இவர்களால் இந்நிதியைத் திரட்ட முடியாதுள்ளது. எனவே தாராள மனம் படைத்த எவரும் இவரது சத்திர சிகிச்சைக்கான பண உதவிகளை வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.
இறைவன் உங்களுக்கு அருள் பாலிப்பானாக.

உங்கள் உதவிகளை பின்வரும் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு அனுப்புக.



ஏ. எஸ். நஸீர்
இலங்கை வங்கி
கணக்கிலக்கம் - 6987
மூதூர்

தகவல் -
அ. வ. முஹம்மது ஜிஹார் (ஆசிரியர்)

முஸ்லிம் குரல் சுவடு 15
25 ஜுலை 2003 Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல் 26 ஜமாதுல்அவ்வல் - 1424
143, Muhandhiram Road, Colombo - 03. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mm-s@eol.lk

## மூதூர் - திருமலை கடல் போக்குவரத்துச்சேவை / முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் பாராட்டத்தக்க பணி!

1993ம் ஆண்டு ஜுலை மாதம் 25ம் திகதி திருமலை - மூதூருக்கிடையேயான கடல் போக்குவரத்தில் ஈடுபட்ட படகொன்று நடுக்கடலில் வைத்து 150 பயணிகளுடன் கடலில் சங்கமாகியது. 10 வருடங்கள் கடந்துவிட்ட இச் சம்பவத்தை, பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல இந்த வேதனை நிகழ்வை உணர்ந்த அனைவராலும் இன்னும் மறக்கத்தான் முடியவில்லை. இத்துயர நினைவின் இழப்புகளின் பின்னும் கடந்த 10 வருடங்களாக மூதூர்-திருமலை படகுச் சேவை உரிய பாதுகாப்புடன் உத்தரவாதமிக்கதாக மாற்றி அமைக்கப்படாமலேயே இருந்து வந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே கடல்வழிப் போக்குவரத்தில் மூதூர் பிரதேச மக்கள் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

மூதூர்ப் பிரதேசம் இன்று சர்வதேச அளவில் பிரசித்தமான முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். புலிகளின் தீராத நெருக்குதல்களுக்குள் இப்பிரதேச முஸ்லிம்கள் தொடர்ந்தும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். புலிகளின் நெருக்குதலால் இணைந்து வாழ்ந்து வந்த தமிழ் முஸ்லிம் மக்களிடையேயும் இன்று கசப்புணர்வுகளும் முரண்பாடுகளும் தலை தூக்கி நிற்கின்றன. கொதி நிலையிலுள்ள இப்பிரதேச மக்களுக்கு அடிப்படை அத்தியவசிய பொருட்கள் தொடக்கம் சேவைகள் வரை திருமலையிலிருந்தே சென்றடைய வேண்டியுள்ளது.

மூதூர்ப் பிரதேசத்திற்கான தரைவழிப் போக்குவரத்தை நினைத்தே பார்க்கமுடியாது. இதனால் மக்கள் கடல்வழிப் போக்குவரத்தே கதியென மேற்கொண்டு வந்துள்ளனர். நெருக்கடியும் ஆபத்துமிக்க இக்காலகட்டத்தில் மூதூர்ப் பிரதேச முஸ்லிம், தமிழ் மக்களின் அத்தியவசிய போக்குவரத்துச்சேவையை கவனத்திற்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தனது அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் ஊடாக இரண்டு சிறியரக கப்பல்களை திருத்தியமைத்து மூதூர்ப் பிரதேச மக்களுக்கு பணி செய்துள்ளார். இக்கட்டான காலகட்டத்தில் இன்றியமையாத முக்கிய பணியாகும் இது.

சேருவலை2, மஹாவலி தேவி என்ற இரு கப்பல்களும் கடந்த 12ம் திகதியன்று திருமலை-மூதூர் கடல்வழிப் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மூடுண்டு கிடந்த மூதூர் இப்போது கடல்வழியில் கதவைத் திறந்து நிற்கின்றது. போக்குவரத்துக்கு சீரான உத்தரவாதமிருப்பின் ஓரளவு மூதூர் மக்களுக்கு பாதுகாப்புத் தொடர்பான நம்பிக்கை பிறந்து விடுகிறது. இம்மக்களைப் பொறுத்தவரை கடல்வழி போக்குவரத்துச்சேவை இன்றியமையாததாகும்.

அரசியல் அதிகாரம் என்பது மக்கள் நலன்களுக்கு பணி செய்வதேயாகும். இதற்காகத்தான் மக்கள் தங்களது ஆணையை அரசியல் தலைமைகளுக்கு வழங்குகிறார்கள். நல்லது மக்களுக்கு நடக்கும்போது அதனைப்பாராட்டுவதும் ஊக்குவிப்பதும் தீயது நடக்கும்போது அவைபற்றிய எச்சரிக்கைகளையும் விமர்சனங்களையும் முன்வைப்பதுவுமே மக்களின் பேரால் நடாத்தப்படும் பத்திரிகைகளின் பொறுப்பும் கடமையுமாகிறது. அந்த வகையில் மு.கா. தலைவரின் இப்பணியை மூதூர்ப் பிரதேச மக்களுடன் இணைந்து நாமும் பாராட்டுகிறோம்.

தோழமையுடன்,
பிரதம ஆசிரியர்.

இப்பத்திரிகை 143, முஹாந்திரம் வீதி, 'முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்' இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org